விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 29°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 154 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 15, வியாழக்கிழமை 28.04.2016

ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அமெ. இணையத் தாக்குதல்
ஜனாதிபதி ஒபாமாவின் தலைமையில்
பக்.14 -15

# வடக்கு-கிழக்கில் தொடரும் ரி.ஐ.டியின் கைது வேட்டை

## முன்னாள் போராளிகள், தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பெரும் அச்சத்தில்

"வடக்கு – கிழக்கில் இடம்பெறும் தொடர் கைதுகளால் முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் அச்சமடைந்துள்ளனர். அத்துடன் கடந்த 30 நாள்களுக்குள் 30 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் வடக்கு–கிழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர்."

யாழ்ப்பாணம், ஏப்ரல் 28
தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்டப் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளராக இருந்த கலையரசன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எஸ்.சிவகரன் ஆகியோர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
வடக்கு–கிழக்கில் இடம்பெறும் தொடர் கைதுகளால் முன்னாள் போராளிகள் மற்றும் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.
அத்துடன் கடந்த 30 நாள்களுக்குள் 30 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் வடக்கு–கிழக்கில் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக, பூசா தடுப்பு முகாமுக்கும், 4 ஆம் மாடிக்கும் கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.
பக். 24

## தலைமன்னாரில் சிக்கியது ஹன்ஸ்

மன்னார், ஏப். 28
ஹன்ஸ்என அழைக்கப்படும் ஒரு வகைப் போதைப் பொருளைத் தலைமன்னார் கடற்படையினர் நேற்றுமுன்தினமிரவு மீட்டுள்ளனர். இது கஞ்சா போன்ற போதைப் பொருளுக்குச் சமனான போதையுடையதாக இருக்கலாம் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்படுகிறது.
தலைமன்னார் ஊர் மனைப் பகுதியான ஜே.ஆர்.எஸ். விலேஜ் பகுதியில் உள்ள
பக். 23

முச்சந்தி முரளி



நல்லாட்சி எண்டுறது இதுதான் பாருங்கோ.....

## திடீர்க் கைதுகள் தொடர்பில் உரிய தரப்புடன் பேசுவேன்

### கூறுகிறார் ஜனாதிபதி மைத்திரி



யாழ்ப்பாணம், ஏப். 28
வடக்கு–கிழக்கில் தொடர்ந்து இடம்பெறும் திடீர்க் கைதுகள் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
ஊடக ஆசிரியர்களைக்
பக். 23

## வடமராட்சி கிழக்கில் நேற்று மூவர் கைது

வடமராட்சி, ஏப்.28
வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு மற்றும் ஆழியவளைப் பகுதிகளைச் சேர்ந்த மூவர் நேற்றையதினம் திருகோணமலை யில் இருந்து வந்த பொலிஸ் குழுவால் திடீரெனக் கைது செய்யப்பட்டனர்.
இந்தக் கைதுகளை உறுதிப்படுத்திய
பக். 23

## ரணில்-சம்பந்தன் அவசர சந்திப்பு

கொழும்பு, ஏப். 28
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்குமிடையில் அலரிமாளிகையில் நேற்று முக்கிய சந்திப்பு நடைபெற்றது.
கிளிநொச்சி–பரவிப்பாஞ்சானி லுள்ள இராணுவ முகாமுக்குள் எதிர்க்கட்சித் தலைவர் அத்துமீறி நுழைந்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்
பக். 23

## நாட்டைத் துண்டாடுவதற்கு யாருக்குமே இடமளியேன்

### வடக்கு அரசின் தீர்மானம் குறித்து மைத்திரி கருத்து

கொழும்பு, ஏப். 28
வடக்கு மாகாண சபை பிரேரணை நிறைவேற்றலாம். ஆனால் இலங்கையைத் துண்டாடுவதற்கோ, அல்லது இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கோ அல்லது தேசத்தின் இறையாண்மையைப்
பக். 23

## மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது ராணுவத்துக்கு காணி பறிக்கும் முயற்சி



முல்லைத்தீவு, ஏப். 28
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் முன்பாக அமைந்துள்ள 682 ஆவது படைப் பிரிவுக்கு 18 ஏக்கர் தனியார் காணியைச் சுவீகரிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி, பொதுமக்கள் – அரசியல் தலைவர்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப் பட்டது.
பக். 23

# எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடாது சம்பந்தன்

## ஏழு கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு



கொழும்பு, ஏப். 28
இரா.சம்பந்தன் உடனடியாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து இடைநிறுத்தப்படவேண்டும் என்று ஏழு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்பாக, நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொண்டனர்.
பக். 24

## தொடரும் திடீர்க் கைதுகளை கண்டிக்கின்றது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 28
வடக்கு–கிழக்கில் தொடரும் திடீர்க் கைதுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதாக, அந்தக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
பக். 25

metecno The Specialist
கூரைத் தகடுகள் | கேட் தகடுகள் | சென்விச் பெனல் | வளைந்த தகடுகள் | ஓடு வடிவிலான தகடுகள் | பொலிங்க்ஸ்
METROOF Total Roofing Solutions
மெட்டெக்னோ லங்கா பிரைவட் லிமிட்ட்
இல: 734, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 5 672 672
077 7 842 544
www.metecnolanka.com
METECNO LANKA (PVT) LTD
Sri Lanka Germany Italy Spain Portugal Mexico Chile Columbia India Thailand Vietnam

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# பாலத்துக்குள் கவிழ்ந்து பஸ் விபத்து 13 மாணவர்கள் உட்பட 15 பேர் காயம்

## ஏ-9 வீதியில் நேற்று அதிகாலை சம்பவம்

கிளிநொச்சி, ஏப். 28
வீதியில் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிப் பாலத்துக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பதுளை, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழகத்தை சேர்ந்த மாணவர்கள் 13 பேர் உட்பட 15 பேர் காயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த ஒரு மாணவன், கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் ஏ-9 வீதி மாங்குளத்துக்கும் கொல்லர் புளியங்குளத்துக்குமிடையிலுள்ள பாலத்தடியில் நடைபெற்றுள்ளது.
யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைச் சேர்ந்த கி.துசா (வயது-22), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.கௌசிகா (வயது-20), நல்லூரைச் சேர்ந்த ப.மயூரி (வயது-23), அளவெட்டியைச் சேர்ந்த ப.சரண்யா (வயது-21), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த து.லாவண்யா (வயது-21), கிளிநொச்சியைச் சேர்ந்த த.நர்மதா (வயது-21), மல்லாவியைச் சேர்ந்த ஜே.தபிசாயினி (வயது-21), யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ம.எழிலினி (வயது-21), அல்வாயைச் சேர்ந்த ம.சாளினி (வயது-21), ஏழாலை வடக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த ச.தனுசியா (வயது-21), மீசாலையைச் சேர்ந்த ச.நிறோஜன் (வயது-22), புளியங்கூடலைச் சேர்ந்த வி.நிதுஜன் (வயது-21), சாவகச்சேரியைச் சேர்ந்த பா.நிறோஜன் (வயது-21) ஆகிய பதின்மூன்று மாணவர்களும் மற்றும் இரு பொதுமக்களுமே காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதில் சாவகச்சேரியைச் சேர்ந்த பா.நிறோஜன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
பல்கலைகழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்வி விடுமுறைக்காக நேற்றுமுன்தினம் இரவு பதுளையில் இருந்து புறப்பட்டுத் தனியார் பேருந்து ஒன்றில் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போதே, வீதியில் உள்ள பாலம் ஒன்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்துச் சம்பவத்தை அறிந்து குறித்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைகளில் சேர்த்தனர்.
(ற-5-21-422)

### கட்டடத் திறப்பு விழா

வட்டு.தென் - மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்வு இன்று மு.ப 9 மணிக்கு நடைபெறவுள்ளது. வட்டுக்கோட்டை மேற்கு அரசடி வீதியில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் திறப்பு விழா சங்கத் தலைவர் மு.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.
புதிய கட்டடத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் திறந்து வைக்கவுள்ளார். நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் அ.சோதிநாதன் கலந்துகொள்ளவுள்ளார் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

### ஆய்வுகூடத் திறப்பு விழா

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞான ஆய்வுகூடம் இன்று மு.ப. 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. வித்தியாலய அதிபர் கே.வாகீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா புதிய கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார். (ற-108)

மறவன்புலோ தற்கொலை அங்கி மீட்பு

## கைது செய்யப்பட்ட ஜூலியஸின் தந்தை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 28
மறவன்புலோவில் தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டுள்ள எட்வேர்ட் ஜூலியஸின் தந்தை, மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திலும் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.
மறவன்புலோவில் தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருள்கள் என்பன கடந்த மாதம் 30 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தன. இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தில், மன்னாரைச் சேர்ந்த எட்வேர்ட் ஜூலியஸ் என்ற நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.
இவர் கைது செய்யப்பட்டமைக்கான ஆவணம் தமக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்த எட்வேர்ட் ஜூலியஸின் தந்தை, இதன் காரணமாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.
தனது முறைப்பாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்த அவர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனை ஞாயிற்றுக்கிழமைகளில் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தருகின்றோம் என்று அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர் என்றும் கூறினார். (ற-5)

## அரசின் புத்தகத்தில் மகனின் படம் எப்படியாவது மீட்டுத் தாருங்கள்

### ஆணைக்குழு முன்பாக ஜெயக்குமாரி மன்றாட்டம்

கிளிநொச்சி, ஏப். 28
மகிந்த அரசின் காலத்தில் வெளியிடப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் புத்தகத்தில், எனது மகனின் படம் காணப்படுகின்றது. எப்படியாவது எனது மகனை மீட்டுத் தாருங்கள்.- இவ்வாறு பாலேந்திரன் ஜெயக்குமாரி காணாமற்போனோர் ஆணைக்குழு முன்பாக நேற்றுச் சாட்சியமளித்தார்.
தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குத் தங்குவதற்கு இடம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெயக்குமாரி கைது செய்யப்பட்டிருந்தார். ஆட்சி மாற்றத்தின் பின்னர் இவர் விடுவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே தனது மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு ஆணைக்குழு முன் சாட்சியமளித்துள்ளார்.
அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது-
எனது மகன் 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வேலைக்குச் சென்ற இடத்தில் காணாமல் போனான். அதன் பின்னர் அவனை பல இடங்களில் தேடியும் இதுவரை காணவில்லை.
எனது மகன் போரின் இறுதிப் பகுதியில் இரட்டைவாய்க்கால் பகுதியில் நின்று, என்னைத் தேடினார் என்று உறவினர் ஒருவர் எனக்குத் தெரிவித்திருந்தார். ஆனால் நான் பல்வேறு இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் புத்தகம் வெளியிடப்பட்டிருந்தது. அதில் எனது மகனின் ஒளிப் படத்தை நான் கண்டேன். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு கொடுக்கும் அந்தப் படத்தில் எனது மகனும் உள்ளான். எனவே எப்படியாவது எனது மகனை மீட்டுத் தாருங்கள்.- என்று அவர் மன்றாட்டமாகக் கோரினார். (ற-5-21-ரி3)

## பிணையில் வந்து குற்றம் செய்வோரை 5 வருடங்கள் சிறையில் தள்ள முடியும்

### அதனை நீதிமன்றில் வலியுறுத்துமாறு பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஏப். 28
குற்றம் புரிபவர்களைக் கைது செய்தால் அவர்களுக்குப் பிணை வழங்குவதும் வழங்காதிருப்பதும் நீதிமன்றமே என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதற்கு ஒருவர் திரும்பத் திரும்பக் குற்றம் செய்வாரெனில் 3 தொடக்கம் 5 வருடங்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கமுடியும் என்று பொலிஸ் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.
யாழ். சிவில் பாதுகாப்புக்கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. அதில் குறித்த விடயம் எழுப்பப்பட்டது.
குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைப் பொலிஸார் கைது செய்தால் மறுநாள் பிணையில் வந்து மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்று அங்கு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.
பல இடங்களிலும் கசிப்பு விற்பனை, மாடு வெட்டுவது உள்ளிட்ட சட்ட விரோத மற்றும் குற்றச் செயல்கள் இடம்பெறுகின்றமை பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு, அவ்வாறு குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களைப் பொலிஸார் கைது செய்தால் பிணையில்விடக்கூடாது. பொலிஸார் கைதுசெய்து சென்ற மறுநாளே அவர்கள் வெளியில் வந்து மீண்டும் அதே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். அத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைப் பிணையில் விடக்கூடாது என்று கோரப்பட்டது.
அதற்குப் பதிலளித்த பொலிஸார் தாம் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்த முடியும். ஆனால்பிணைவழங்குவதும் வழங்காது விளக்கமறியலில் வைப்பதும் நீதிமன்றமே என்று பொலிஸாரால் சுட்டிக் காட்டப்பட்டது. அதன் போது கருத்துரைத்த பொலிஸ் அதிகாரிகள், குறித்த விடயத்தில் ஒருவர் திரும்பத்திரும்ப அவ்வாறு குற்றச் செயல்களில் ஈடுபட்டாரெனின் அத்தகையவர்களுக்கு 3 தொடக்கம் 5 வருடங்கள் வரை நீதிமன்றங்களால் சிறைத் தண்டனை விதிக்க முடியும் என்று தெரிவித்தனர்.
ஆனால் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் பற்றி அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. குறித்த குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மோசமான மன நிலையைக் கொண்டவர்களாகவுள்ளனர். அவர்களைக் கைது செய்யச் செல்வதோ கைது செய்வதோ சாதாரண விடயமல்ல. அவர்களால் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமளவுக்கு அச்சமான நிலையும் உள்ளது. அதனையும் சமாளித்து அவர்களைக் கைது செய்வது சாதாரண விடயமல்ல என்றும் பொலிஸாரால் சுட்டிக்காட்டப்பட்டது. (ற-4)

## வாக்குவாதம் முற்றி இறுதியில் மனைவியைக் கடித்த கணவர்

### சவூதியில் பழகிய பழக்கமாம்

சாவகச்சேரி, ஏப். 28
சவூதியிலிருந்து வந்தவர் அந்த நாட்டு வழக்கப்படி மனைவியின் காதையும் மூக்கையும் கடித்துக் குதறியுள்ளார். காயங்களுக்கு உள்ளான மனைவி வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.
இந்தச் சம்பவம் தென்மராட்சி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. காது மற்றும் மூக்கு போன்றவை கடிகாயங்களுக்கு இலக்கான நிலையில் பெண்ணொருவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார். அவரை அணுகி விசாரித்த போது, சவூதி நாட்டிலிருந்து வந்த கணவனுக்கும் எனக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதன் போது அவர் என்னை அடிக்காமல் தள்ளி வீழ்த்திவிட்டு காதையும் மூக்கையும் கடித்துக் காயப்படுத்தினார் என்று தெரிவித்தார்.
சவூதி நாட்டில் மனைவியை அடிக்கக் கூடாது என்ற சட்டம் இருப்பதால் அங்குள்ள கணவர்கள்

> தனக்கும் கணவருக்கும் முரண்பாடு ஏற்பட்ட போது அவர் சவூதிப் பாணியில் தன்னை அடிக்காமல் கடித்துக் குதறியுள்ளார்

மனைவியுடன் முரண்பாடு ஏற்பட்டால் மனைவியை அடித்துத் துன்புறுத்தாமல் மனைவியைக் கடித்துக் காயப்படுத்துவார்கள் என கணவன் அடிக்கடி கூறுவார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் தனக்கும் கணவருக்கும் முரண்பாடு ஏற்பட்ட போது அவர் சவூதிப் பாணியில் தன்னை அடிக்காமல் கடித்துக் குதறியுள்ளார் எனவும் தெரிவித்தார்.
மனைவியின் காதையும் மூக்கையும் கடித்துக் குதறிய கணவருக்கு எதிராக விசாரணை நடத்தப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(ற-4, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சொந்தக் காணிகளுக்குள் திரும்ப விடுகிறார்கள் இல்லை

## அரச அதிகாரிகள் மீது முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஏப்.28

கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு அண்மையிலுள்ள காணிகள், தங்களால் பணம் கொடுத்து வாங்கப்பட்டவை எனவும், அதனைத் தற்போது அரச அதிகாரிகள் தமக்கு வழங்க மறுப்பதாகவும் முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனினும் குறித்த காணிகளை இராணுவம் தம்மிடம் கையளித்துள்ளதால், அவை தொடர்பான ஆவணங்களை சமர்ப்பிக்குமிடத்து, அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு அண்மையிலுள்ள காணியில் போருக்குப் பின்னர் இராணுவத்தினர் அபகரித்து வைத்திருந்தனர். எனினும் அந்தக் காணிகள் அண்மையில் கிளிநொச்சி அரச அதிபரிடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டன.

இந்த நிலையில் போருக்கு முன்னர் குறித்த காணிகளில் குடியிருந்த முன்னாள் போராளிகளின் குடும்பங்கள், அங்கு சென்று துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். எனினும் நேற்றிரவு குறித்த காணிகளுக்கு நேரில் சென்ற கிளிநொச்சி அரச அதிபர், துப்புரவுப் பணியில் ஈடுபட்டவர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் அந்தக் காணிகள் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய காலப் பகுதியில், தம்மால் பணம் கொடுத்து வாங்கப்பட்டவை என முன்னாள் போராளிகளின் குடும்பத்தினர் தெரிவித்தனர். அத்துடன், போருக்குப் பின்னர் இராணுவத்தினரால், குறித்த காணிகள் அபகரிக்கப்பட்டன.

தற்போது, அவை கிளிநொச்சி அரச அதிபரிடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டன. எனவே எமது காணிகளுக்குள் நாம் துப்பரவு பணிகளில் ஈடுபட்டோம். எனினும் எமது சொந்தக் காணிகளுக்குள் அதிகாரிகள் எம்மை அனுமதிக்கிறார்கள் இல்லை என முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் தெரிவித்தனர்.

எனினும், குறித்த காணிகள், இராணுவத்தினரால் மாவட்ட செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்தக் காணிகளின் உரிமை தொடர்பான உரிய ஆவணங்களை ஒப்படைத்தால், அவை குறித்து பரிசீலிக்கப்படும் என கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அவ்வாறு, ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாதவிடத்து, குறித்த காணி தொடர்பான பிரச்சினை நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-101)

# பரவிப்பாஞ்சானுக்குள் அத்துமீறியது ராணுவமா? எதிர்க்கட்சித் தலைவரா?

## கேள்வி எழுப்புகின்றார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஏப். 28

பரவிப்பாஞ்சானில் பொதுமக்களின் காணிகளில் அத்துமீறி இருப்பது இராணுவத்தினர் தான். எனவே அத்துமீறியது இராணுவத்தினரா? அல்லது எதிர்க்கட்சித் தலைவரா? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். சொந்த வீட்டுக்குச் செல்வதற்கு எவரிடமும் அனுமதி கேட்க வேண்டியதில்லை.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் கருத்து வெளியிடுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது பரவிப்பாஞ்சான் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் அங்கு வருகை தந்திருந்தனர்.

அந்த மக்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம், எமக்குச் சொந்தமான காணிகளை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. 34 குடும்பங்கள் மட்டும் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளன. 54 குடும்பங்களைச் சேர்ந்த மக்களை மீளக் குடியமர அனுமதிக்கவில்லை. அந்த 54 குடும்பங்களைச் சேர்ந்த எம்மை எமது சொந்தக் காணிகளில் மீண்டும் குடியமர்வதற்கு அனுமதியளியுங்கள்.

எமது வீடுகளில் சில பூட்டப்பட்டுள்ள நிலையில், இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர். அவ்வாறு பூட்டப்பட்ட வீடுகளை இராணுவம் கூடப் பயன்படுத்துவதில்லை எனச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

எமது வீடுகளும் நிலங்களும் வீதிக்கு மறுபக்கத்தில் உள்ளன. நேரில் வந்து நிலைமைகளைப் பார்த்தால், எமது கோரிக்கைகளின் நியாயத்தைப் புரிந்துகொள்வீர்கள் என்று கூறி அழைத்தனர். இதற்கமையவே அங்கு சென்றோம். வாகனங்கள் சென்றபோது அங்கு காணப்பட்ட வாசல் தடையை நீக்கி உள்ளே செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதனையடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் மக்களுக்கு சொந்தமான பகுதியைப் பார்வையிட்டிருந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பகுதிக்குச் செல்லும்போது, எந்தவொரு நபரும் தடுக்கவோ அல்லது யாரிடமாவது அனுமதி பெற வேண்டும் என்றோ கூறவில்லை. எனவே சிலர் கூறுவதுபோல், எதிர்க்கட்சித் தலைவர் எவ்விதமான அத்துமீறலிலும் ஈடுபடவில்லை. சட்டத்திற்கு முரணாக நடக்கவுமில்லை.

அந்த நிலங்கள், கட்டடங்கள் மக்களுக்குச் சொந்தமானவை. எங்கள் வீட்டுக்குள் நுழைவதற்கு நாங்கள் யாரிடம் அனுமதி கோர வேண்டும். தவறான முறையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

பரவிப்பாஞ்சான் - மக்களின் காணியாகும். அதனைச் சட்ட விரோதமாக கைப்பற்றி இராணுவத்தினர் வைத்திருக்கின்றனர். எனவே விசாரணை நடத்த வேண்டியது இராணுவத்தினருக்கு எதிராகவே - என்றார். (த-வ-5)

# நகுலனின் கைது தொடர்பில் மனைவி முறைப்பாடு பதிவு

## மனித உரிமை ஆணைக்குழுவில்

யாழ்ப்பாணம், ஏப். 28

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால், தமிழீழ விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முன்னாள் சிறப்புத் தளபதி நகுலன் என்று அழைக்கப்படும் கணபதிப்பிள்ளை சிவமூர்த்தி கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை நகுலனின் தந்தை மற்றும் மனைவி ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

நகுலன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இவர் வவுனியாவுக்கு மேலதிக விசாரணைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ഩ-5)


**வேலை ஆள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கிவரும் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு ஆண் வேலையாள் தேவை.
தொடர்பு :
0777714558 0772151875

**வீணை விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள வீணை விற்பனைக்குண்டு.
021 222 2940

**வருஷாப்பிய அழைப்பு**

கடந்த 09.05.2015 சனிக்கிழமை
சிவபதமடைந்த
எங்கள் குடும்ப குலவிளக்கு
அமரர்
கண்டி இரத்தினக் குருக்கள்
ராதாகிருஷ்ணசர்மா



அவர்களுக்கு சித்திரை மாதம் 15ஆம் (28.04.2016) வியாழக்கிழமை அபரபஷ்ஷ சஷ்டி திதி அன்று வருஷாப்பியம் செய்யவிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் அந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

41/2, துரைராஜா வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்
ஆர்.கிருபானந்தன் (மகன்)

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்: 2761 திகதி 27.04.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 03 20 39 40 X
போனஸ் இல.: 65
சனிக்கிழமை ஜக்பொட்: ரூ.1,58,05,375/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
2016.04.30 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

**Galaxy Star**

வெற்றி வாரம் 053 திகதி 27.04.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்: 02 02 33 59 60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 31,86,020/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

**பதவி வெற்றிடங்கள்**

உலகளாவிய ரீதியில் 21 நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது International pvt கம்பனிக்கு வட மாகாணத்தில், யாழ். மாவட்டத்தில் பணிபுரிய நபர்கள் தேவை.

- தகைமை O/L & A/L
- தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
- அனுபவம் அவசியமற்றது
- வயதெல்லை 18 - 30
- EPF, ETF, Medical & Insurance செய்து தரப்படும்.

தொடர்புக்கு: 077 2986763 / 0777009820

(69719)(10.17)

**சுஜீவா வைத்தியசாலை விடுமுறை அறிவித்தல்**

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி, கே.கே. எஸ் வீதியில் உள்ள சுஜீவா வைத்தியசாலை 28.04.2016 வியாழக்கிழமை முதல் 12.05.2016 வியாழக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். மேலதிக விவரங்களுக்கு 077 559 4147 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Dr. ஜெ. ஜெயலன்
Dr. திருமதி து. ஜெயலன்

**நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மகாசபைக் கூட்டம் 30.04.2016**

ஆலயத்தின் மகாசபைக் கூட்டம் 30.04.2016 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய முன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முருகன் அடியார் அனைவரும் கலந்து ஆலய வளர்ச்சிக்கு உதவிபுரியுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

இளைஞர், யுவதிகள், O/L,A/L எழுதியோர், தொழில்தேடுவோர் தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

மூன்று மாதங்களில் உங்களால் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 30.04.2016 சனிக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | 08.00-10.00 | 3. பி.பகல் | 01.00-03.00 |
| 2. காலை | 10.00-12.00 | 4. மாலை | 03.00-05.00 |

வாரநாள் (செவ்வாய், வியாழன்) பிரிவுகள் ஆரம்பம்-03.05.2016
காலை 10.00-12.00

30.04.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும். ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!

SAAMSON
021 320 3313
077 579 486


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனந்தெரியாதோரால் இரவில் கடை எரிப்பு

நடைபாதையில் இருந்த வடை விற்பனை செய்யும் கடை ஒன்று அடித்து நொறுக்கப்பட்டு எரித்து சாம்பலாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியா பேயாடிக்கூழாம் குளப்பகுதியில் நடந்துள்ளது. வவுனியா ஏ- 9 வீதியில் பேயாடிக் கூழாம் குளப்பகுதியில் இருந்த நடைப்பாதைக்கடைகள் அடங்கிய தொகுதியில் உள்ள வடை விற்பனை செய்யும் கடையே இவ்வாறு எரித்து சாம்பலாக்கப்பட்டுள்ளது. போயாடிக்கூழாம் குளம் இராணுவமுகாம் அமைந்துள்ள பகுதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் இக்கடை அமைந்துள்ள நிலையில், இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ற-402)


## சற்றரிங்க் அடிப்பதற்கான கூறுவிலை கோரல்

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வாடியடி பூநகரியில் அமைக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் எரிபொருள் நிலைய கட்டடத்திற்கான சற்றரிங்க் அடித்தல் வேலைக்கு மட்டும் கீழ்க்காண் விவரப்படி கேள்வி கோரப்படுகின்றது. விரும்புவோர் 09.05.2016 ஆம் திகதிக்கு முன்னதாக மூடிய தபால் உறையில் " சற்றரிங்க் அடிப்பதற்கான கூறுவிலை " எனக் குறிப்பிட்டு தலைவர், பூநகரி ப.நோ. கூ. சங்கம், வாடியடி, பூநகரி எனும் முகரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**விவரம்**

01. சற்றரிங்க் பிளைவூட் பலகை பைப் மூலம் முட்டு அடித்தல்.
02. தரமான சற்றரிங்க் பலகையில் தடி மூலம் முட்டு அடித்தல்.
03. சாதாரண சற்றரிங்க் பலகையில் தடி மூலம் முட்டு அடித்தல்.

**குறிப்பு: மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான சகல செலவுகளும் தங்களைச் சார்ந்ததாகும்.**

**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**து. இரத்தினசிங்கம்**
**தலைவர்.**

(க 2300(2 க)



பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
முல்லைத்தீவு
**கேள்வி அறிவித்தல்**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு 2016/17 ம் ஆண்டிற்கு தேவையான வழங்கல்கள்/சேவைகள்

1. முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2016/17ம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
அ. சமைத்த உணவு வழங்கல்கள்
ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
இ. வாகன சுத்திகரிப்பு செய்தல்.

2016 ஆனி 01ம் திகதி முதல் 2017 வைகாசி 31ம் திகதிவரையான ஒருவருட காலப்பகுதிக்கு வழங்கல்கள், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 29.04.2016 தொடக்கம் 19.05.2016 ம் திகதி வரை காலை 9.30மணி முதல் பி.ப.3.30 மணிவரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/ தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
3. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 20.05.2016 திகதி மு.ப. 10.00 மணிக்குமுன் கிடைக்கூடியவாறு தலைவர், கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 20.05.2016 மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும்.
4. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

A) சமைத்த உணவு வழங்கல்

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல. | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, உண்ணாப்பிலவு | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நூவர | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை அளம்பில் | சமைத்த உணவு | 250.00 | 20,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, கொக்குளாய் | சமைத்த உணவு | 250.00 | 20,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, மூங்கிலாறு | சமைத்த உணவு | 250.00 | 20,000.00 |

B) அழுக்குத் துணி சலவை செய்தல்

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, மல்லாவி | 200.00 | 2,000.00 |
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல. | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, உண்ணாப்பிலவு | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நூவர | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, அளம்பில் | 200.00 | 2,000.00 |

C) வாகன சுத்திகரிப்பு

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதிஆவணம் (ரூபா) |
|---|---|---|
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,முல்லைத்தீவு. | 500.00 | 50,000.00 |

1. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
2. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
3. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
4. மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இல.0212290111

வைத்திய கலாநிதி திருமதி.த.பூங்கோதை,
தலைவர், பிராந்திய பெறுகைக் குழு
பி.சு.சே.ப.பணிமனை,
முல்லைத்தீவு.


# இறைச்சிக்குக் கொண்டு செல்லப்பட்ட பசுவை மக்களிடம் கொடுத்த பொலிஸ்

## தருமபுரத்தில் சம்பவம்



கிளிநொச்சி. ஏப். 28
இறைச்சியாக்குவதற்குச் சட்டவிரோத மாகக் கொண்டு செல்லப்பட்ட பசுக்கள் தர்மபுரம் பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவால் மீட்கப்பட்டு தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 3 குடும்பங் களுக்கு வழங்கப்பட்டன. இந்த சம்பவம் நேற்று முன்தினம் கிளிநொச்சி –விசுவமடு பகுதியில் இடம் பெற்றுள்ளது

கிளிநொச்சி –விசுவமடுப் பகுதியில் இருந்து பொது சுகாதாரப் பரிசோதகரின் அனுமதிகள் மற்றும் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் என்பன இல்லாது இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட மூன்று மாடுகள் தர்மபுரம் பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவால் மீட்கப்பட்டன. அத்துடன் 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து மீட்கப்பட்ட, 3 மாடுகளை வாழ்வாதார தேவைகளைப்பூர்த்திசெய்யும் பொருட்டு வறுமை கோட்டுக்குட்பட்ட 3 குடும்பங்களுக்கு வழங்கினார் தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம்.டி.என் சதுரங்க. சந்தேக நபர்களும் தாம் குற்றத்தை ஒப்பு கொண்டு பொறுப்பதிகாரியின் தீர்மானத்துக்குச் சம்மதித்ததால் குறித்த நபர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சி - விசுவமடு, தர்மபுரம் பிரதேசங்களை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி மற்றும் கடத்தல் சம்பவங்கள் இடம்பெறுவதை அடுத்து, தர்மபுரத்தில் முன்பு இருந்த பொலிஸ் காவலரண் தற்போது பொலிஸ் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

சட்டவிரோத கும்பல்களைப் பிடிப்பதற்காக சிவில் பாதுகாப்புக் குழுக்களும் அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. (ற-21)


## கட்டடம் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்

யாழ். பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இல.373. பிரதான வீதியில் அமைந்துள்ள கட்டடம் வாடகைக்கு வழங்கப்படும். கட்டடம் வாடகைக்குப் பெற உள்ளவர்கள் தங்களில் விவரத்துடன் தங்களான் கோரப்படும் வாடகைத் தொகையினையும் தெரிவித்து தங்கள் விண்ணப்பங்களை, தலைவர்.யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து) **இல. 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 2016.05.07 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்டுகின்றீர்கள். கட்டடத்தை நேரில் பார்வையிட விரும்பின் தொலைபேசி இல. 021 222 2587 உடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**இல. 127, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(க 2300(2 க)



## பகிரங்க ஏல விற்பனை

கீழ்வரும் விவரப்படியான பொருள்கள் 16.05.2016 திங்கட்கிழமை மு.ப 09.00 மணிக்கு பூநகரி வாடியடியில் வைத்து பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஏல விற்பனைக்கான பொருள்களின் விவரம்**

| | |
|---|---|
| KDE 12 STA ஜெனரேற்றர் | 01 (டீசல்) |
| 1000x20, 900X20 லொறிரயர் | 09 |
| 155x12 டிமோ ரயர் | 11 |
| மோட்டார் சைக்கிள் | 02 |
| துவிச்சக்கரவண்டி | 02 |
| கொண்டா ஜெனரேற்றர் | 01 |
| கட்டிட மூலப்பொருள்கள் | |
| கனரகப்பொருள்கள் | |
| கிடாரம் | |
| தாச்சி | |
| பாடசாலைச் சீருடைத்துணிகள் | |

**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**து. இரத்தினசிங்கம்,**
**தலைவர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெனினிசக் கட்சியின் மே தின நிகழ்வுகள் புத்தூரில்

**யாழ்ப்பாணம், ஏப். 27**

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மேதின நிகழ்வுகள் வலி. கிழக்கு புத்தூரில் நடைபெறவுள்ளன என்று கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் கா. செல்வம் கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

மேதினத்தன்று பருத்தித்துறை வீதி ஆவரங்கால் சந்தியிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகி பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி, சுன்னாகம் வீதி வழியாக கலைமதி விளையாட்டு மைதானத்தை வந்தடைந்து கட்சியின் வடபிராந்தியச் செயலாளர் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல், கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் களான சட்டத்தரணி சோ.தேவராஜா, க.தணிகாசலம், புதிய ஜனநாயக இளைஞர் முன்னணியின் த.ஶ்ரீபிரகாஸ், ச.குமார், மு.மயூரன், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ச.தனுஜன், விவசாய அமைப்பின் பொ.முருகேசு, தொழிற்சங்கத்தின் கா. பஞ்சலிங்கம், பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் க.வாகினி, கு.ஜெனிற்ரா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதுடன், கலை நிகழ்வுகளும் நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார். (ற-ரி)

# ஆவணக் காப்பக நிகழ்வு

**யாழ்ப்பாணம். ஏப். 27**

படைப்பாளி ஜெவ்றே பீலிங் என்ற தலைப்பிலான சமகாலக் கலை, கட்டடக்கலை மற் றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தின் 32 ஆவது நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறவுள்ளது. இலங்கையின் புகழ்பெற்ற 43 குழுவைச் சேர்ந்த மூத்த ஓவியர்களுள் ஒருவரான ஜெவ்றே பீலிங் பற்றி வரலாற்றாசிரியரான டெபோறா பிலிப் உரையாற்றவுள்ளார். இந்த நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகம், 199, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது எனவும் இந்த நிகழ்வில் கலை மற்றும் சினிமா ஆர்வலர்கள் தவறாது கலந்து பயன்பெறுமாறும் இலங்கை ஆவணக் காப்பகத்தின் பொது முகாமையாளர் விமலா வேல்தாஸ் அழைப்பு விடுத்துள்ளார். (ற-21)

**தவறிவிட்டது**

யோகரட்ணம் விஜயராஜ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 772650949V மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன ஒட்டுமடசந்திக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 200 9809
V.H.Lane, Irupalai

ENGLISH HALL
Jaffna
English Group Classes Gr 6 to G.C. E O/L
புதிய அனுமதிகள்
P.N.Shutharson
Director & Teacher 077 314 4527

**விற்பனைக்கு**

நகைக்கடைப் பாவனைக்குரிய 600g எலக்ரோணிக் தராசு விற்பனைக்குண்டு.

077 641 6355



யாழ்ப்பாணம் - நல்லூர்
அருள்மிகு நல்லூர் பண்டாரக்குளம்
**ஶ்ரீ கௌரி அம்பாள் ஆலய**
**வருடாந்த தேர்த்திருவிழா**



அம்பிகை அடியார்களே!

மேற்படி எமது ஆலயத்தில் இன்று (28.04.2016) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு தேர்த் திருவிழா நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

அம்பிகை அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

## விழிசிட்டி சனசமூக நிலையம் நடத்தும் பாடசாலை மாணவருக்கான கட்டுரைப்போட்டி - 2016

* போட்டி பாடசாலை மாணவருக்கானது. விண்ணப்பதாரிகள் தற்போது வடமாகாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பவராக இருக்க வேண்டும்.
* போட்டி தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நடத்தப்படும்
  - பிரிவு I- தரம் 11 இல் அல்லது அதற்கு கீழ் கற்கும் மாணவர்
  - பிரிவு II- தரம் 12,13 இல் கற்கும் மாணவர்
* க.பொ.த.சா/த. உ/த. பரீட்சைக்கு ஒருமுறை தோற்றியோர் அவ்வகுப்பில் கற்பவராக ஏற்கப்படமாட்டார்.
* கட்டுரை மாணவரால் எழுதப்பட்டது என்பது அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* கட்டுரைத் தலைப்பு
  The Goal of Education is good Personality
  கல்வியின் நோக்கம் உன்னத ஆளுமை பெறுதல்

| | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| பிரிவு I | 400 சொற்களுக்கு மேற்படாமல் | 250 சொற்களுக்கு மேற்படாமல் |
| பிரிவு II | 600 சொற்களுக்கு மேற்படாமல் | 300 சொற்களுக்கு மேற்படாமல் |

* கட்டுரை கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு **06.05.2016** இற்கு முன் கிடைக்கும் படி அனுப்பிவைக்கப்படவேண்டும்.

  முகவரி: **திருமதி கோகிலா மகேந்திரன்**
  **கே.கே.எஸ்.வீதி,கோண்டாவில் மேற்கு.**
  **கோண்டாவில்.**
* கட்டுரையுடன் மாணவரின் முழுப்பெயர் முகவரி. வகுப்பு. பாடசாலை. தொலைபேசி எண் ஆகிய விவரங்கள் தனியாக எழுதி இணைக்கப்பட வேண்டும்.
* பரிசு விவரம்:
  - முதலாம் பரிசு - ரூபா - 5000/=
  - இரண்டாம் பரிசு - ரூபா - 3000/=
  - மூன்றாம் பரிசு - ரூபா - 2000/=
* பரிசு பெற்றவர் விவரமும் பரிசளிப்பு விவரமும் உதயன் பத்திரிகையில் பின்னர் அறிவிக்கப்படும்.
* மேலதிக விவரங்களுக்குத் தொடர்பு இலக்கம்: 077 699 1004

செயலாளர்.

## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு
## முல்லைத்தீவு மாவட்ட ஆதார வைத்தியசாலை மல்லாவிக்கான உலர் உணவு விநியோகம் - 2016 / 17

1. வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமைவாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | வைத்தியசாலைகள் | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. |
|---|---|---|---|
| 1. | D/MT/2016/BH Mall | ஆதார வைத்தியசாலை, மல்லாவி | 50,000.00 |

2. விலைக்கேள்விதாரர் உணவு விநியோகத்திற்கேற்றவகையிலான வியாபார பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும்
3. அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி உணவு வழங்கிய பூரண அனுபவமிருத்தல் வேண்டும்.
4. பொருத்தமான உத்தரவாதமுறி இணைக்கப்படல் வேண்டும். உத்தரவாதமுறி சமர்ப்பிக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய பெறுகைக்கு மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 1000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 29.04.2016 தொடக்கம் 19.05.2016 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் 20.05.2016 ம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு இன் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
7. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு (தொலைபேசி இல. 021-229-0111) என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்
8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்திய கலாநிதி (திருமதி). S. R. யூட்,**
**தலைவர், மாகாண திணைக்களத்தின் பெறுகைகள் குழு,**
**வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**சுகாதார கிராமம்,**
**பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**காணி விற்பனைக்குண்டு**

கந்தரோடையில்.ஸ்கந்தவரோதைய பள்ளிக் கூடத்திற்கருகில் சுன்னாகம் செல்லும் வழியில். தெருவோடு அமைந்திருக்கும் காணி (5) பரப்பும் ஆறு குளியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 9237810, 077 628 2164, + 61403040073

**WEDDING CAR FOR HIRE**

Toyota Axio (White)/ 121 and Toyota KDH 200/ Hiaee



Contact- Ratnam
22, Somasundaram Avenue, Chundikuli, Jaffna.
077 790 3090

**விற்பனைக்கு**



மொறட்டுவ.ராவகாவத்தை மணி செய்து கொடுக்கும் இடம். லண்டன் அச்சிலான சுத்தமான வெண்கல பெரியமணி 550 Kg விற்பனைக்குண்டு. மற்றும் 200Kg, 150Kg, 75Kg, 50Kg வெண்கல மணிகள் எம்மிடம் உள்ளன. மற்றும் கற்சிலைகள். பஞ்சலோக சிலைகள் கோயிலுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும் எம்மிடம் உண்டு. உங்களுக்குத் தேவையான பொருள்களை எங்களிடம் தெரிவித்தால் நாங்களே உங்களிடம் கொண்டு வந்து தருவோம்.

தொடர்பு: வேலாயுதம் சுரஞ்சன்
K.V.G.Trade Centre, L.G.9.People's Park, Shopping Complex
Pettah, Colombo -11
011 233 0922, 077 152 3370, 072 324 6581

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியஸ்தர் சபை அமர்வு ஒத்திவைப்பு

சாவகச்சேரி, ஏப். 28

மே தினத்தை முன்னிட்டு எதிர்வரும் மே முதலாம் திகதி சாவகச்சேரி மத்தியஸ்தர் சபை அமர்வுகள் இடம்பெறாது என்று சபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

சபையின் அமர்வுகள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது எனவும் மே தினத்தன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்றைய அமர்வுகள் இடம்பெறாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்கள் இம்மாதம் இலங்கைக்கு வருவர்

## நீதித்துறை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ள

கொழும்பு, ஏப்.28

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இரண்டு சிறப்பு அறிக்கையாளர்கள் இந்த மாத இறுதியில் இலங்கையில் உண்மையைக் கண்டறியும் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் மொனிக்கா பின்ரோ, சித்திரவதைகள், மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மெண்டேஸ் ஆகியோரே நாளை வெள்ளிக்கிழமை கொழும்பு வரவுள்ளனர். இவர்கள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை இலங்கை யில் தங்கியிருந்து, நீதித்துறை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான மதிப்பீடுகளை செய்யவுள்ளனர்.

சுயாதீன நீதித்துறை, நீதித் துறையின் தொழில்சார் தன்மை, நாட்டின் சட்டக் கட்டமைப்பு ஆகியன தொடர்பாக மதிப்பீடுகளை செய்யும் இந்த இரண்டு சிறப்பு அறிக்கையாளர்களும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு தமது அறிக்கை களை முன்வைக்கவுள்ளனர் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி நவரத்தினம்



கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நவரத்தினம் நேற்று (27.04.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெயரத்தினராசா, சிவானந்தராசா, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் நவரத்தினம், ஜீவகுமாரி, கோமளாதேவி, குபேரன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற ஐயாத்துரை, குமாரசாமி, மார்க்கண்டு, கந்தையா மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அகல்யாவின்(நோர்வே) பெரியதாயாரும் ஜெரோமினா சஞ்சயன், ஜீவகன், தனஞ்சயன், சக்திகா (கனடா), வஸ்திகா, பிரணவன்(நோர்வே), அபினேஸ், அபிநயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுவர்ஷி, கிருஷ்மினா, சுவர்ணி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அப்பாத்துரை நவரத்தினம் (மருமகன்)

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

# சிறுமி கர்ப்பம்; இளைஞனுக்கு வலைவீச்சு

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள பதின்ம வயதுச் சிறுமியைக் கர்ப்பமாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படும் இளைஞர் தேடப்பட்டு வருகின்றார் என்று யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி வீட்டில் தனிமையில் இருக்கும் நேரங்களில் சென்று நட்பாகப் பழகி வந்த குறித்த நபர் காதலிப்பதாகக் கூறி சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

உடலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட சிறுமி, கடந்த சில நாள்களாகச் சோர்வுற்று இருந்ததால் வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்திய போதே சிறுமி கர்ப்பமாக உள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அது பற்றிய விசாரணையின்போதே சம்பவம் தெரியவந்தது. அதற்குக் காரணமான இளைஞன் தொடர்பில் பொலிஸார் விசாரணகளை மேற் கொண்டு வருகின்றனர். தற் போது அந்த நபர் தலைமறைவாகியுள்ளார். அதனால் அவரைத் தேடி வருகின்றோம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை யாழ்.குடாநாட்டில் சிறுமிகள் தமது வயதுக்கு மேற்பட்டவர்களுடன் விரும்பி உறவு கொள்கின்றனர் என்றும் சட்ட ரீதியாக அது தவறு என்பதனால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறுமிகள் விரும்பியே அத்தகைய செயல்களில் ஈடுபடுவதால் அதனைத்தவிர்க்கவேண்டியளவுக்கு விழிப்புணர்வு நடவடிக்கை தேவை என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜி.கே. பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார். (ற-4,107)

உடனடியாக வேலைக்கு ஆள்கள் தேவை

127/5, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள Izzy Garments புடைவை நிலையத்திற்கு ஆண், பெண், இருபாலாரும் வேலைக்குத் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

071 664 7692

# 10 கொக்குகளை வேட்டையாடியவர் மிருசுவிலில் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஏப்.28

மிருசுவில் பகுதியில் உள்ள களப்பு ஒன்றில் இரைதேடி வந்த வெளிநாட்டுக்கொக்குகளை வேட்டையாடி இறைச்சியாக்கி மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் வரணி குடமியன் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மிருசுவில் பகுதியில் உள்ள வயல்வெளியை அண்மித்த களப்பில் வெளிநாட்டுப் பறவைகளை வேட்டையாடி அவற்றை இறைச்சியாக்கியதை ஒருவர் கண்டுள்ளார். இதுதொடர்பில்குற்றத்தடுப்புப்பொலிஸாருக்கு அவர் இரகசியமான முறையில் தகவல் தெரிவித்துள்ளார். சிவில் உடையில் மிருசுவில் வடக்குப் பகுதிக்கு சென்ற பொலிஸார், விற்பனை செய்வதற்கு இறைச்சியாக்கிய கொக்குகளைக் கொண்டுசென்றவரை கையும் மெய்யுமாகப் பிடித்தனர் எனக் கூறப்பட்டது. (ற-107)

## கண்ணீர் அஞ்சலி

எமது உடுவில் பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும்

திருமதி கி. புவனேஸ்வரி

அவர்களின் அன்புக் கணவர்

### வல்லிபுரம் கிருஸ்ணலிங்கம்

அவர்கள் 2016.04.27 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த மனவேதனையடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், உடுவில்.**

Vacancies in QATAR

A Leading company in Qatar requires the following....

Final Interviews with foreign principals 09th & 10th MAY

கட்டார் உடனடி தேவை

| JOB CATEGORIES | QNTY | BASIC SALARY IN | LIVING ALLOWANCE | TOTAL MONTHLY SALARY |
|---|---|---|---|---|
| Facilities Manager | 03 | 2000 QR Rs.80000 | 1500 QR Rs.6000 | 3500 QR Rs.140000 |
| Heavy Drivers | 05 | 1500 QR Rs.60000 | 750 QR Rs.30000 | 2250 QR Rs.90000 |
| Cleaning Supervisor with Qatar License | 10 | 1200 QR Rs.48000 | 800 QR Rs.32000 | 2000 QR Rs.80000 |
| Light Drivers | 20 | 1200 QR Rs.48000 | 600 QR Rs.24000 | 1800 QR Rs.72000 |
| General Cleaners - male | 100 | 900 QR Rs.36000 | - | 900 QR Rs.436000 |
| Female Cleaners | 20 | 900 QR Rs.36000 | - | 900 QR Rs.36000 |

நாட்டிற்கு உடனடி பயணமாகலாம்
அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள் !!!
Send CV's - cv@alakeem.com

02 years contract. no agency fee. no charges of interview, visa, air ticket. Facilities provided include free accommodation, transport, medical and food in Qatar and leave air ticket once in every two years. 01 QR=40 LKR

AL AKEEM ENTERPRISES (PVT) LTD
Manpower Consultants & Recruiting Agents
TÜV AUSTRIA HELLAS ISO 9001:2008
0772 - 575 575 / 0771 - 415 415
License no 1435
103A Colombo Rd, Kurunegala

## பிற்போடல்

கடந்த 30.03.2016 அன்று சிவபதமடைந்த

### திருமதி ஞானசக்தி கனகரத்தினம்



அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி ஊடாக எமது துயரில் பங்கு கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு:
அன்னாரின் இல்லத்தில் 29.04.2016 வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வதோடு, இந் நிகழ்வுகள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.
சின்னமடுவடி, சரவணை மேற்கு, சரவணை.

தகவல்:
குடும்பத்தினர்.
மகன் - ஜீவா(மிபாகரன்)

தொடர்பு : 077 736 5667, 077 127 1692

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதியை சேர்ந்தோருக்கு வடக்கில் சிற்றூழியர் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 28

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களில் ஒரு தொகுதியினர், யாழ். மாவட்ட நிர்வாக எல்லையினுள் கொழும்பு அரசால் சிற்றூழியர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சிற்றூழியர் வெற்றிடத்துக்கு யாழ். மாவட்டத்திலிருந்து எந்தவொரு விண்ணப்பமும் கோரப்படாமலேயே இந்த நியமனங்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது என்று தெரியவருகின்றது.

தென்னிலங்கையைச் சேர்ந்த 5 சிற்றூழியர்கள் நான்கு தினங்களுக்கு முன்னர் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முதல் நியமன மாவட்டமாக யாழ். மாவட்டமே வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்டச் செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் சிற்றூழியர் பதவிகளுக்கு வெற்றிங்கள் உள்ளன. சிற்றூழியர் நியமனங்களைப் பொறுத்த வரையில் அந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவார்கள். அதுவும் முதல் நியமனம் அந்த மாவட்டத்தைச் சேர்ந் தவர்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

ஆனால் யாழ்.மாவட்டத்தில் காணப்படும் சிற்றூழியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு எந்தவொரு நேர்முகத் தேர்வுக்கும் விண்ணப்பம்கோரப்படவில்லை. மாறாக தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை, அவர்களது முதல் நியமன மாவட்டமாக யாழ். மாவட்டத்துக்கு நியமித்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையால் அண்மையில் சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதன் போது, பட்டதாரிகளும் சிற்றூழியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். வேலை வாய்ப்பு முக்கிய பிரச்சினையாக யாழ்.மாவட்டத்தில் உள்ள நிலையில், தென்னிலங்கையைச்சேர்ந்தவர்களை இங்கு நியமிப்பது என்பது, கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அதே விடயம் தான் தற்போதும் நடைபெறுகின்றது. - என்று மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-5-101)

> ❝ வடக்கு மாகாண சபையால் அண்மையில் சிற் றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதன் போது, பட்டதாரிகளும் சிற்றூழியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். வேலை வாய்ப்பு முக்கிய பிரச்சினையாக யாழ்.மாவட்டத்தில் உள்ள நிலையில், தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை இங்கு நியமிப்பது என்பது, கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற அதே விடயம்தான் தற்போதும் நடைபெறுகின்றது. ❞

## தியானப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.28

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயா னந்தரின் நூறாவது பிறந்த ஆண்டை முன்னிட்டு யாழ். சின்மயா மிசன் சின்மய ஞான வேல் ஆச்சிரமத் தில் எதிர் வரும் மே மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் 7 ஆம் திகதி சனிக் கிழமை வரை தியானப் பயிற்சி நடத்தப்படவுள்ளதுஎன்றுசின்மயா மிசன் தெரிவித்துள்ளது.

தினமும் காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை வதிவிட ஆச்சாரியார் பிரம்மசாரி ஜாக்ரத சைதன்யாவால் இந்தப் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. பயிற் சியில் பங்குபெற விரும்புபவர்கள் பதிவு களை முற்கூட்டியே யாழ். சின்மயா மிசன் ஆச்சிரமத்தில் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

## தராகி சிவராமின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஏப். 28

ஊடக சுதந்திரத்திற்காக உயிர் கொடுத்த ஊடகவியலாளர்களுக்கான பொது நினைவு நாளும், அமரர் தராகி சிவராமின் 11ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மறைந்த ஊடகவியலாளர்கள் நினைவு தூபி மற்றும் யாழ்.பொது நூலக மண்டபத்தில் பி.ப. 3 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களது குடும்பங்களுக்கான உதவித்திட்டங்கள், வீடமைப்புத் திட்டம் என்பன அறிவிக்கப்படவுள்ளன என்று யாழ். ஊடக அமையத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

## வவு. நகர சபையின் ஆவணங்கள் குப்பைத் தொட்டியிலிருந்து மீட்பு

### நகர சபைப் பணியாளர்கள் விசனம்

வவுனியா,ஏப்.28

வவுனியா நகரசபையில் பணியாற்றும் ஊழியர்களுடைய ஆவணங்கள் உட்பட பல முக்கிய ஆவணங்கள் கடந்த இரண்டு நாள்களாக நகரசபையின் குப்பைத் தொட்டிக்குள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் வவுனியா நகர சபையில் கடமையாற்றும் ஏழு பணியாளர்களுடைய ஆவணங்கள் காணாமல் போயிருந்த நிலையில், குப்பைத் தொட்டிக்குள் ஆவணங்கள் போடப்பட்டுள்ளமை நகர சபையில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலையில் பணிக்காக சென்ற ஊழியர்கள் குப்பைத் தொட்டியின் கழிவுகளை அகற்ற முற்படும் போது தொட்டியினுள் முக்கியமான ஆவணங்கள் இருப்பதை அவதானித்தனர் என்றும், அது தொடர்பாக உரியவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது என்றும் நகரசபையின் ஊழியர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினமும் இரண்டாவது நாளாகவும், குப்பைத் தொட்டிக்குள் தொழிலாளர்களுடைய சம்பளப்பட்டியல், உள்ளடங்கலாக முன்னாள் நகரசபைச்செயலாளரின்கையெழுத்திட்ட சில ஆவணங்களை ஊழியர்கள் மீட்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நகர சபையில் கடமையாற்றிய ஊழியர்கள் ஏழுபேரின் ஆவணங்கள் தொலைந்து போயுள்ளன என்று நகரசபையால் தெரிவித்து அவர்களுடைய நிரந்தர நியமனங்கள் இழுத்தடிக்கப்படும் நிலையில் தற்போது குப்பை தொட்டியினுள் போடப்பட்டுள்ள இந்த ஆவணங்களும் அவ்வாறான ஒரு செயலுக்கு ஒப்பானது என தெரிவித்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

குப்பைத் தொட்டியிலுள் ஆவணங்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக வவுனியா நகர சபைச் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போது-

மீட்கப்பட்டதாக கூறப்படும் ஆவணங்கள் பழையனவாக இருக்கின்றன. ஒரு சில ஆவணங்கள் பிறப்புச்சான்றிதழ்களாகக் காணப்படுகின்றன. நான் தற்போது வெளி மாவட்டம் ஒன்றில் பயிற்சிக்காக வந்துள்ளேன். இதனால் சம்பவம் தொடர்பாக முழுமையான விவரங்களைக் கூற முடியாமல் உள்ளது. எனவே இது தொடர்பாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரை தொடர்பு கொண்டு கேளுங்கள் என்றும் அவர் முழுமையான தகவல்களை கூறுவார் என்றும் தெரிவித்தார்.

உள்ளுராட்சி உதவி ஆணையாளரைப் பலதடவைகள் தொடர்பு கொண்ட போதும் அவர் இருக்கையில் இல்லை எனவும் வந்தவுடன் கூறுகின்றோம் என்றும், அவரது அலுவலகத்தில் கடமையாற்றும் பணியாளர்களால் தெரிவிக்கப்பட்டது. அவரிடமிருந்துதகவல்கள் எவற்றையும்பெற்றுக் கொள்ள முடியவில்லை. (ற-ஐ-21)

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் த.தே.கூ. ஏற்பாட்டில் வவுனியாவில்

### வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, ஏப்.28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த முறை முள்ளிவாய்க்கால் நினைவு தினம் வவுனியாவில் கடைப்பிடிக்கப் படவுள்ளது என்று வட மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை இம்முறை அனைத்து மக்களையும் திரட்டி உளப்பூர்வமாக நினைவேந்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம். இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடப்பட்டு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வவுனியா கலை மகள் விளையாட்டு மைதானத்தில் மே18ஆம்திகதி மாலை 4 மணிக்கு நினைவேந்தல் நடைபெறவுள்ளது. அன்று காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரையான காலப்பகுதிக்குள் வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மதஸ்தலங்களிலும் போரில் இறந்த அனைத்து மக்களுக்காகவும் விசேட பிரார்த்தனைகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (ற)

## மே தினப் பேரணிகள், கூட்டங்களில் கூட்டுறவாளர்கள் திரள வேண்டும்

### வட மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.28

கிளிநொச்சியில் நடைபெறும் கூட்டுறவாளர்களின் மே தினப் பேரணி மற்றும் பொதுக் கூட்டங்களுக்கு கூட்டு றவாளர்கள் அனைவரையும் அணி திரள வேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் தலைவர் வ.சிவகுமார் கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தமுறை மே தினப்பேரணி மற்றும் பொதுக்கூட்டம் என்பன மிகவும் முக்கியமானவை. வடக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டவர்கள். எமது கூட்டுறவுத் துறைக்கு குரல் கொடுப்பதற்கு எவரும் முன்வருவதில்லை. கடந்த கால போர்ச் சூழ்நிலையால் எமது கூட்டுறவுத் துறை பாதிக்கப் பட்டது. குறிப்பாக வடக்கு மாகாண கூட்டுறவுப் பணியாளர்கள் பொருளாதார ரீதியாகவும், மனத்தாக்கங்களினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குடும்ப வாழ்க்கையைக் கூட உரிய முறையில் நடத்த முடியாமல் அனேகமான பணியாளர்கள் சிரமப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு தற்போதைய நிலையில் போதாது. சில சங்கங்கள்கூட பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை வழங்கப் பின்னடித்து வருகின்றன. இந்த நிலையில் தான் கடந்த காலத்தில் நாம் ஐம்பது வீத சம்பள அதிகரிப்பை முன்வைத்தோம். இதில் முப்பது வீத சம்பள அதிகரிப்பை வடக்கு மாகாணக் கூட்டுறவு அமைச்சு வழங்கியது.

மீதியாகவுள்ள இருபது வீத சம்பள அதிகரிப்பை இந்த மே தினத்தில் முன்வைக்கவுள்ளோம். எமது இந்த இருபது வீத சம்பள அதிகரிப்புக் கோரிக்கைக்குக் கூட்டுறவு அமைச்சு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இதன் காரணத்தால் கூட்டுறவாளர்கள் ஒருமித்து கிளிநொச்சியில் இடம்பெறும் பேரணியில் எழுச்சியுடன் பங்குபற்றி உரிமைக்குக் குரல் கொடுப்போம்.- என்றார். (ற-17)

## இன்பர்சிட்டி கடலில் கைதான 6 சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப்.28

வடமராட்சி இன்பர்சிட்டி கடலில் இந்திய பதிவில் இருக்கும் மோட்டார் சைக்கிள், ஆள்கூறுக் கருவிகள், புளி மூடை என்பவற்றுடன் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸாரின் சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இன்பர்சிட்டி கரைப்பகுதியில் கரையேறிய படகை பொலிஸார் அதிரடியாகச் சுற்றிவளைத்துச் சோதனையிட்டபோது 6 பேர் படகில் இருந்தனர் என்றும், அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அவர்களின் படகில் இந்தியப் பதிவை உடைய மோட்டார் சைக்கிள் மற்றும் உரப்பை ஒன்றும் காணப்பட்டது என்றும், அதில் புளியம்பழம் காணப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். தவிர ஆள்கூறுக் கருவிகளையும் மீட்டனர்.

இந்த நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-ஐ-4,109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீட்டுக்கு விண்ணப்பிக்கும் பலருக்கு சொந்தக் காணிகள் இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 28

பொருத்து வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்கும் பலருக்கும் சொந்தக் காணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. காணிகள் இல்லாதோர் பட்டியலுடன் இவ்வாறானவர்களை இணைத்து மாவட்டச் செயலகத்துக்கு பிரதேச செயலகங்கள் அனுப்பி வைக்கின்றன.

குறிப்பாக முஸ்லிம் மக்களே காணிகள் இல்லாது இந்த வீட்டுத் திட்டத்துக்கு அதிகளவில் விண்ணப்பித்துள்ளனர் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

> முஸ்லிம் மக்கள் தற்போது மீள் குடியமர்ந்து வருகின்றனர். இவர்கள் பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறு ஆயிரக் கணக்கானவர்கள் பதிவுகளை மேற்கொள்கின்றபோதிலும், மிகக் குறைந்தளவானோரே சொந்தக் காணிகள் அல்லது பள்ளிவாசல் காணிகளில் வசித்து வருகின்றனர்.

முஸ்லிம் மக்கள் தற்போது மீள் குடியமர்ந்து வருகின்றனர். இவர்கள் பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறு ஆயிரக் கணக்கானவர்கள் பதிவுகளை மேற்கொள்கின்றபோதிலும், மிகக் குறைந்தளவானோரே சொந்தக் காணிகள் அல்லது பள்ளிவாசல் காணிகளில்வசித்துவருகின்றனர்.

மீள்குடியமர்வுப் பதிவுடன், ஆயிரக் கணக்கான முஸ்லிம் குடும்பங்கள் பிரதேச செயலகங்களுக்கு வந்து, பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்றனர்.

இவர்களது விண்ணப்பங்களை பிரதேச செயலகங்கள் மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கின்றன. இருப்பினும், இவர்களில் அதிகளவானோர் காணிகள் இல்லாத நிலையில் இருப்பதால், அவர்களின் விண்ணப்பங்கள் காணிகள் அற்றோர் பட்டியலுடன் இணைத்து அனுப்பப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் 2 ஆயிரத்து 137 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 794 பேர் மீள்குடியமர்வுக்குப் பதிவு செய்துள்ளனர். அவர்களில் 561 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 379 பேரே நிரந்தரமாக மீளக்குடியமர்ந்துள்ளனர். (ற-5-9)

## சிற்றுண்டி நிலையம் திறப்பு

சாவகச்சேரி,ஏப்.28

சாவகச்சேரி இந்துக் கல்லூரி வளாகத்தில் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையால் 8 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி சிற்றுண்டி நிலையக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளையால் திறக்கப்பட்டது. இந்த நிலையத்தில் கீழ்ப்பகுதி அதிபர் ஆசிரியர்களுக்கும், மாடிக் கட்டடம் மாணவர்களுக்குமென அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அமர்ந்திருந்து சிற்றுண்டி அருந்தக் கூடிய வகையில் கட்டடம் அமைக்கப் பட்டுள்ளது. கடந்த வருடம் இதற்கான அடிக்கல் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் நடப்பட்டது.

கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதையடுத்து கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் வேண்டுகோளின் பிரகாரம் ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளையால் திறந்து வைக்கப்பட்டது. (ற-ஐ-9)

# வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற மகனை அதன் பின்னர் காணவில்லை

### காணாமற்போனோர் விசாரணை ஆணைக்குழு அமர்வில் தாய் கண்ணீருடன் சாட்சியம்

கிளிநொச்சி, ஏப்.28

காணாமல் போன எனது மகன் குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளான். அவன் உயிருடனேயே உள்ளான். அவனை மீட்டுத் தாருங்கள். - இவ்வாறு தாய் ஒருவர் கண்ணீர் மல்க சாட்சியமளித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இரண்டாம் நாளாக நேற்று இடம்பெற்ற காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில் சாட்சியமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளதாவது-

கோணவிலை சேர்ந்த குகதாசன் கோபிநாத் என்ற எனது மகனை கடந்த 2007 ஆம் ஆண்டு விடுதலை புலிகள் பிடித்து சென்றார்கள். பின்னர் நாங்கள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வரும் போது எனது மகனை அழைத்து வரவில்லை.

எனது மகன் காலில் காயமடைந்த நிலையில் இருப்பதாக எமது உறவினர் ஒருவர் கூறினார். இந்த நிலையில் மகனைத் தேடி நான் பல இடங்களுக்குச் சென்றேன் ஓமந்தை சோதனைச் சாவடியில் மகனின் பதிவு இருந்ததால் நான் வைத்தியசாலைகளை தேடி அலைந்தேன். அப்போது மகனின் பதிவு குருநாகல் வைத்தியசாலையில் காணப்பட்டது. இருப்பினும் நான் வைத்தியசாலைக்கு செல்வதற்கு முன்னர் அவர் அங்கிருந்து வெளியேறி விட்டார் என்று வைத்தியசாலையை சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். எனது மகன் உயிருடனேயே உள்ளார் அவரை கண்டு பிடித்து தாருங்கள்.

எமது கிராமத்தில் 25 க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களில் 5 பேருக்கே பதிவு அட்டைகள் தந்துள்ளார்கள். எனது மகனின் விசாரணை மற்றும் நேரடியாக இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நபர் ஆகியோரின் விசாரணைகள் ஒன்றாக நடப்பதன் காரணத்தால் மகன் உயிருடன் உள்ளான் என்பதை எம்மால் ஊகிக்க கூடியதாக உள்ளது.- என்றார்.

அத்துடன் பூசா மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவற்றில் மகனின் பெயர் விவரம் உள்ளது. வைத்திய சாலை பதிவில் இருப்பதன் காரணத்தாலும் மிக விரைவாகத் தனது மகனை மீட்டுத்தாருங்கள் என்றும் அவர் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தார். (ற-ரி3)

## யாழ்.பல்கலை மே தின நிகழ்வுகள் கைலாசபதி அரங்கில்

யாழ்ப்பாணம், ஏப்.28

இலங்கை ஆசிரியர் சங்கமும், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்து நடத்தும் மே தின நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த மே தினத்தில் யாழ்.பல்கலைக்கழகத்திலிருந்து பேரணி ஆரம்பமாகி குமாரசுவாமி வீதியூடாக பலாலி வீதியை அடைந்து பரமேஸ்வராச் சந்தியூடாக மீண்டும் பல்கலைக் கழகத்தை வந்தடையும்.

பல்கலைக்கழக ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பங்குகொண்டு தொழிலாளர் உரிமையை வென்றெடுக்க ஒன்றிணைவோம் என இலங்கை ஆசிரியர் சங்கமும், யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கமும் தெரிவித்துள்ளது. (ற-ஐ-ரி)

## த.தே.ம. முன்னணியின் மே தின நிகழ்வு பருத்தித்துறையில்

யாழ்ப்பாணம், ஏப்.28

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இணைந்து கூட்டாக நடத்தும் தொழிலாளர் தின நிகழ்வு எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோயில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்துக்காகவும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனோரைக் கண்டறிதலை வலியுறுத்தியும், தமிழ்த் தொழிலாளர்கள், தமிழ் விவசாயிகள், தமிழ் மீனவர்கள் மீதான ஒடுக்கு முறையிலிருந்து விடுபடல், காணி அபகரிப்பை தடுத்தல், மீள் குடியமர்வை வலியுறுத்துதல், இராணுவ மயமாக்கலை தடுத்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகளை நிறுத்தல், கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தல் என்பவற்றுக்காக அனைத்து தமிழ் மக்களையும் அணி திரளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

# பழுதடைந்த பழங்களை விற்போருக்கு எதிராக நடவடிக்கை

### சுகாதாரப் பிரிவினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். நகரில் உள்ள பழக்கடை வியாபாரிகள் அழுகிய மற்றும் பழுதடைந்த பழங்களை விற்கக்கூடாது என்றும் அவ்வாறு விற்பனை செய்யும் பழக்கடைகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியினர் கடந்த வாரத்தில் நகரில் உள்ள பழக்கடைகள் மீது சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதில் ஓர் அப்பிள் பழக்கடையில் அழுகிய பாவனைக்கு உதவாத பழங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பழக்கடைக்கு எதிராக உடனடியாக யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பழக்கடைகள் தொடர்ந்தும் சோதனைக்கு உட்படுத்தப்படும். அழுகிய பழுதடைந்த பழங்களை விற்பனை செய்வோர் மீது உரிய சட்டநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தற்போது பழவகைகளின் சீசன் ஆரம்பமாகவுள்ள நிலையில் போதியளவு பழவகைகள் நகருக்கு வந்து சேரும். இந்த நேரத்தில் பழங்களுடன் அழுகிய பாவனைக்கு உதவாத பழங்களையும் கலந்து விற்பனை செய்யலாம். அதன் காரணத்தால் சுகாதாரப் பகுதியினர் பழக்கடைகள் மீதும் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டுள்ளனர். (ற-ஐ-17)

# சுகாதார வசதிகளின்றி இயங்கிய மூன்று உணவகங்கள் சிக்கின

### சுகாதார பரிசோதகர்களின் சோதனையில்

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் போதிய சுகாதார வசதிகள் இன்றி செயற்பட்ட மூன்று உணவகங்கள் சுகாதாரப் பகுதியினரிடம் சிக்கிக் கொண்டன.

கடந்த வாரம் மாநகர சுகாதாரப் பிரிவினர் உணவகங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அதில் மூன்று உணவகங்கள் போதிய சுகாதார நடைமுறையைப் பின்பற்றாததால், அந்த உணவகங்களுக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சகல உணவகங்களும் சுகாதார நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாக உணவுகையாளும் இடங்கள், உணவுப் பொருள்களைப் பாதுகாப்பான முறையில் வைத்திருக்கும் இடங்கள் போன்றவை சுகாதார ஒழுங்கு விதிக்கு அமைய செயற்படுத்த வேண்டும்.

அத்துடன் உணவகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் கட்டாயம் கைகளுக்குக் கையுறை போட்டும், தலைக்குத் தொப்பி அணிந்தும் பணியாற்றுவது முக்கியமாகும். இவ்வாறான சுகாதார ஒழுங்கு விதிகளை மீறும் உணவகங்களுக்கு எதிரான உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாநகராட்சி மன்றத்தின் நகரப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

குறிப்பாக இந்த வாரத்தில் அனேகமான உணவகங்கள் திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப்படும். உணவகங்களில் பயன்படுத்தப்படும் குடிதண்ணீரும் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பாவனை ஒழிப்பில் கவனம் கொள்ள வேண்டும்

## தொழிலாளர் தினச் செய்தியில் தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 28

எமது பிரதேசங்களில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போதைப்பாவனையும் கல்வி வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது. இதனை அதிபர்களாலோ, ஆசிரியர்களாலோ கட்டுப்படுத்த முடியாததால் எம் இனத்தின்பால் அக்கறை கொண்டு எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும் - இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மே தினச் செய்தி தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தரமான கல்வியை வழங்குவதற்கு அர்ப்பணிப்பான சேவை செய்யும் அனைத்து தமிழ்பேசும் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தொழிலாளர்தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

போதை மட்டுமன்றி சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும், இனரீதியாக ஏற்பட்ட விரக்திகளும் மாணவர்களின் மனங்களில் வக்கிரத் தன்மைகள் தோன்றுவதற்கு காரணமாயின. அதனால் அவர்களின் மனங்களில் ஏற்பட்ட மாற்றம், அதனைச் சாதகமாகப் பயன்படுத்த நினைக்கும் சக்திகளின் துர்நோக்கம் என்பனவே எமது கல்வி வீழ்ச்சிக்குக் காரணம்.

> “எமது குழந்தைகள்மீது கட்ட விழ்த்து விடப்பட்டுள்ள வன்முறை களை ஒழிப்பதற்கும், அதிபர் களும் ஆசிரியர்களும் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கும், தொழிலுக்கான உரிய வேதனத் தைப் பெறுவதற்கும், தமது படி நிலைகளை உயர்த்துவதற்கும், 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசி ரியர்களுக்கு இருந்த மதிப்பை மீண்டும் உறுதி செய்வதற்கும் ஒற்றுமையுடன் நாம் ஒன்று சேர வேண்டும்.”

இவற்றுக்குத் தீர்வு காண வேண்டும். இல்லையேல் எமது கடமைகளை மறந்து கல்வியை நாம் முற்றாக இழக்கும் அபாயநிலை உருவாகும்.

எமது குழந்தைகள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை ஒழிப்பதற்கும், அதிபர்களும் ஆசிரியர்களும் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கும், தொழிலுக்கான உரிய வேதனத்தைப் பெறுவதற்கும், தமது படிநிலைகளை உயர்த்துவதற்கும், 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிரியர்களுக்கு இருந்த மதிப்பை மீண்டும் உறுதி செய்வதற்கும் ஒற்றுமையுடன் நாம் ஒன்று சேர வேண்டும்.

எனவே, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு காங்கேசன்துறை வீதியில் உள்ள இணுவில் மத்திய கல்லூரி முன்பாக ஒன்றுகூடி ஆரம்பமாகும் மேதினப் பேரணியிலும், அதனைத்தொடந்து மாலை 4 மணிக்கு இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மேதினக் கூட்டத்திலும் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களையும், கல்விப்புலம் சார்ந்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ற-4)

### லண்டனிலிருந்து வந்தவர் வழியில் மாரடைப்பால் சாவு

சாவகச்சேரி, ஏப்.28

லண்டனிலிருந்து உறவுகளைப் பார்க்க வந்த 57 வயது குடும்பஸ்தர் வரும் வழியில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது,

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

லண்டனில் வதியும் குடும்பம் சொந்த இடத்துக்கு வந்து செல்வதற்காக லண்டனிலிருந்து கனடா சென்று அங்குள்ள உறவுகளைப் பார்த்துவிட்டு அங்கிருந்து இலங்கைக்கு வந்து வாகனமொன்றில் யாழ்ப்பாணம் - மானிப்பாயில் உள்ள உறவுகளைப் பார்க்கச் சென்றுள்ளது. அவ்வாறு வரும் வேளையில் கொடிகாமம் பகுதியில் குடும்பஸ்தருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் அவர் அவசரமாகச் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அதற்கிடையில் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்ள்ளது.

இவரது திடீர் மரணம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆக்கங்கள் சமர்ப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.28

வலி.வடக்கில் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் இணைந்து நடத்தும் ஊனமுற்றவர்களின் அரசகலைவிழாவுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த போட்டியாளர்கள் நடனம், இசைக்கருவிகள் இசைத்தல், பாட்டு, பறை சாற்றுதல், ஓவியம் மற்றும் நாடகம் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்களை தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று, எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் ஒப்படைக்குமாறு தெல்லிப்பழை பிரதேச சபை செயலர் குறிப்பிட்டுள்ளார். (ற-ரி5)



வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் தமிழ் - சிங்கள சித்திரை புத்தாண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா வேப்பங்குளம் வங்கி வளாகத்தில் இடம்பெற்றது. வவுனியா பிரதேச செயலக கணக்காளர் ஜெயபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வங்கி தலைமைப்பீட முகாமையாளர் திருமதி ச.சந்திரகுமார், வவுனியா மாவட்டச்செயலக பிரதம கணக்காளர் பால்ராஜ், வாழ்வின் எழுச்சி வங்கி முகாமையாளர் (வேப்பங்குளம்) செல்வி ப.ஜானகி, வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(ற-ஜ-402)

### விவாத அரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.28

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் 'வித்தகம் விவாத' அரங்கு நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளன. நல்லூர் கம்பன் கோட்டத்தில் மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகள் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளன. எனவே இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

### சுகாதாரமற்று இயங்கிய கடை உரிமையாளர்களுக்குத் தண்டம்

மன்னார் பஸார் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கின என்று 11 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த மன்னார் மாவட்ட நீதிவான், எதிர்காலத்தில் மீண்டும் இவ்வாறு செயற்பட்டால் கடும்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிகை செய்தார்.

மன்னார் பஸார் பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வந்ததாகக் கூறப்பட்ட 11 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியால் மன்னார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

11 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களும் தம் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் மன்னார் பஸார் பகுதியில் உள்ள 17 வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது சுகாதாரமற்ற முறையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட பழவகைகள் விற்பனை நிலையம், மரக்கறிவிற்பனை நிலையம் மற்றும் கூல்பார் போன்ற 11 வர்த்தக நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ற-21,56)

### மன்னார் ஆடைத் தொழிற்சாலையை பார்வையிட்டார் அமைச்சர் ரிசாத்

மன்னார், ஏப்.28

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்ற அமைச்சர் ரிசாத் பதியுதீன்,ஆடை தொழிற்சாலையில் கடமையாற்றுகின்ற பெண்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றுகின்ற பெண்கள் தாம் அங்கு எதிர்நோக்கும் பல்வேறுபிரச்சினைகள் குறித்தும், தமக்கு உரிய முறையில் விடுமுறை வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்தும் அண்மையில் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே கைத்தொழில் வாணிபத் துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆடைத் தொழிற்சாலைக்குச் சென்றிருந்தார்.

அவர் அங்கு கடமையாற்றும் பெண் ஊழியர்களுடன் நீண்ட நேரம் கலந்தரையாடியதோடு, குறித்த ஆடைத் தொழிற் சாலையின் முகாமைத்துவ அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்ரர் சோசை அடிகளார் ஆகியோரும் இணைந்திருந்தனர். (ற-ஜ-56,21)

### கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப். 28

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையானது யாழ். மாவட்டத்தில் உள்ள காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறைபராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர் போன்ற கற்கை நெறிகளை எதிர்வரும் வைகாசி மாதம் ஆரம்பிக்கவுள்ளது என்று இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை யாழ். உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்பும் மாணவர்கள் நாளை 29 ஆம் திகதி வரை இல. 12, கே.கே.எஸ். வீதி, வீரசிங்கம் மண்டபம் 1 ஆம் மாடியில் அமைந்துள்ள இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணி வரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியரசு ஒன்றை உருவாக்க முயல்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

## குற்றஞ்சாட்டி உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

கொழும்பு, ஏப். 28
இலங்கையில் தனி அரசு ஒன்றை உருவாக்குவதற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் முயற்சிக்கின்றன என்று குற்றம் சுமத்தி உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
சட்டத்தரணி அனுர லக்சிறியால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு உயர் நீதிமன்றத்திடம் கோரப்பட்டுள்ளது.
அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வட மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாகாணசபையின் செயலாளர் பத்திநாதன் ஆகியோர், இந்த மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாணசபையில் கடந்த 7 ஆம் திகதி முதலமைச்சர் சமர்ப்பித்த பிரேரணையில், வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு தனியான அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
சமஸ்டி ஆட்சிமுறையில் அதிகாரங்களைப் பகிர வேண்டும் என்றும்அதில்கூறப்பட்டிருந்தது.

> “வடக்கு மாகாணசபையில் கடந்த 7 ஆம் திகதி முதலமைச்சர் சமர்ப்பித்த பிரேரணையில், வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு தனியான அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.”

இந்த பிரேரணை கடந்த 22 ஆம் திகதி வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.
இந்த நிலையிலேயே, அகில இலங்கை தமிழ் அரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனி அரசு ஒன்றை உருவாக்க திட்டமிட்டுள்ளன என்றும் அரசமைப்பை மீறிச் செயற்படும் இவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்றும் மனுதாரர் உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.
வடமாகாண சபையின் தீர்மானத்தின் சிங்கள மொழிப் பிரதியைச் சமர்ப்பிக்குமாறு மாகாண சபைச் செயலாளரைப் பணிக்கும் படியும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.
(ந-5)

## ஜி.எஸ்.பி. பிளஸ் இலங்கைக்கு கிடைப்பதற்கு சுவீடன் ஆதரவு

### மைத்திரிபாலவிடம் உறுதியளித்தார் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஏப். 28
ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் இலங்கைக்குப் பெற்றுக்கொடுக்க சுவீடன் அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என்று சுவீடன் வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உறுதியளித்துள்ளார்.
உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் சுவீடன் வெளிவிவகார அமைச்சர் மார்கிரட் வோல்ஸ்ட் ரோம், கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன வைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போதே அவர் இந்த உறுதிமொழியை ஜனாதிபதிக்கு வழங்கினார்.
இலங்கைக்கும் சுவீடனுக்கும் இடையே இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.
இலங்கையின்அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் சுவீடன்அரசுவழங்கியுள்ள ஒத்துழைப்புகளுக்கு ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் நன்றி தெரிவித்தார்.
இலங்கையில் சிறுநீரக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்குச் சுவீடன் அரசு உதவ வேண்டும் என்று ஜனாதிபதி, சுவீடன் வெளிவிவகார அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார். அதற்கு இணக்கம் தெரிவித்த சுவீடன் வெளிவிவகார அமைச்சர், சுவீடன் நாட்டின் உப்சலா பல்கலைக்கழகமும் கெரோலின்ஸ்கா வைத்திய நிறுவனமும் தற்போது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்துடன் இணைந்து அது தொடர்பான ஒரு விசேட கருத்திட்டத்தை முன்னெடுத்து வருவதாகவும்குறிப்பிட்டார்.
வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளின் தொழில் பயிற்சி வாய்ப்புகளை அதிகரிப்பதற்குத் தேவையான தொழில் பயிற்சி மத்திய நிலையத்தை அமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. இதில் கல்வி, மீன்பிடி, சுற்றாடல் ஆகிய துறைகளில் இளைஞர் யுவதிகளின் தொழில் பயிற்சிவாய்ப்புகளைமேம்படுத்துவதற்கு உதவுமாறும் ஜனாதிபதி இதன்போது சுவீடன் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.
இலங்கையில் நிலவும் முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தாம் சுவீடன் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசு அதற்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்கத் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.
நாட்டு மக்களின் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தி போருக்குப் பின்னர் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அரசு முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித் திட்டங்களை சுவீடன் அமைச்சர் இதன்போது பாராட்டியதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-வ-5)

## சம்பந்தனை உயிருடன் விட்டிருக்க மாட்டேன்!

### புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் கூறுகின்றார்

கொழும்பு, ஏப். 28
நான் இராணுவத்தில் இருந்த காலத்தில் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் இராணுவ முகாமுக்குள் அத்துமீறி பிரவேசித்திருந்தால் மீண்டும் உயிருடன் வெளியே செல்ல இடமளித்திருக்க மாட்டேன் என்று புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத் மனமேந்திர தெரிவித்துள்ளார்.
எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால் நேற்றுக் காலை இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
கடந்த 16 ஆம் திகதி எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட குழுவினர், பரவிப்பாஞ்சானில் உள்ள கஜபா படைப்பிரிவின் தலைமையக இராணுவ முகாமிற்குள் அத்துமீறிப் பிரவேசித்தனர் என்று தெரிவித்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.
அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், இராணுவ முகாமுக்குள் அத்துமீறிப் பிரவேசித்த இரா.சம்பந்தன் மீண்டும் உயிருடன் வெளியே வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் என்று குறிப்பிட்டார்.
(ந-5)

## திருமலை துறைகம் அமெரிக்க கடற்படைக்காம்!

கொழும்பு, ஏப். 28
திருகோணமலைத்துறைமுகத்தை அமெரிக்கக் கடற்படையின் பயன்பாட்டுக்கு வழங்குவதற்கு அரசு இரகசிய உடன்பாடுகளைச் செய்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குற்றம் சுமத்தியுள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் காலனித்துவ நாடாக இலங்கையை மாற்றுவற்கு முயற்சிகள் இடம் பெறுகின்றன.
திருகோணமலைத்துறைமுகத்தை அமெரிக்க கடற்படைக்கு வழங்குவதற்குத் தேவையான உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அமெரிக்காதனது ஆதிக்கத்தை இலங்கையில் விரிவாக்கி வருகிறது. இதனால், நாட்டின் தேசிய பாதுகாப்பு , இறைமை என்பன கேள்விக் குறியாகியுள்ளன. இலங்கை அரசு தன்னிச்சையாக செயற்பட்டு நாட்டை பேராபத்தில் தள்ளிவிட்டுள்ளது.- என்றார்.
(ந-5)

## வடமாகாண சபை தீர்மானத்தை சுவிஸ் நிறுவனமே தயாரித்தது

### சிங்கள ஊடகம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28
வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட சமஷ்டி முறைமை தொடர்பான யோசனை சுவிட்சர்லாந்திலுள்ள 'ப்ரிபுக் பெட்ரல்' எனும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது என்று சிங்கள ஊடகம் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.
அந்தச் செய்தியில், கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவர் அலுவலக அரசியல் பிரிவு அதிகாரியொருவரின் உதவியுடன் இந்த நிறுவனத்தின் அரசியல் நிபுணர்கள் இருவரால் இந்த பிரேரணை வட மாகாண சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.
வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான வியானா உடன்படிக்கையையும் மீறி கொழும்பு சுவிஸ் தூதுவர் காரியாலயத்திலிருந்து அரசியல் நடவடிக்கைக்கு பொறுப்பான அதிகாரியே சமஷ்டி விசேட நிபுணர்கள் குழுவை நாட்டுக்குள் அழைத்து வந்துள்ளார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
வடக்குக் கிழக்கை இணைத்தல் உள்ளிட்டதாக நிறைவேற்றப்பட்டுள்ள இந்த சமஷ்டி முறைமை யோசனைக்கு மேற்கு நாடுகளின் தூதுவர் காரியாலயங்களின் உதவியை பெறவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுத்துள்ளது என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ந-5)

## சம்பந்தன் முகாம் சென்ற விவகாரம் குறித்து பாதுகாப்பு சபையில் விவாதம்

கிளிநொச்சியில் உள்ள இராணுவ முகாமுக்குள், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நுழைந்தார் என்று கூறப்படும் விவகாரம் தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.
கிளிநொச்சி இராணுவ முகாமுக்குள் இரா.சம்பந்தன் முன்அனுமதி பெறாமல்நுழைந்ததாக, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தேசிய பாதுகாப்புச் சபைக்கு முறைப்பாடு செய்துள்ளார்.
ஜனாதிபதி தலைமையில் நடக்கவுள்ள தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்கப்படும் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
அத்துடன் இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுப்பது தொடர்பாகவும், தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில்,பொலிஸார் தனியான விசாரணைகளை நடத்தவுள்ளனர் என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
இதற்கிடையே, இந்த விவகாரம் தொடர்பாக இராணுவத் தரப்பினால் இரா. சம்பந்தனுக்கு எதிராக எந்த முறைப்பாடும் செய்யப்படவில்லை என்றும், எனவே இது குறித்து விசாரணைகள் ஏதும் நடத்தப்படவில்லை என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
(ந-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோதிடர்களும், உறவினருமே மகிந்த வீழ்ச்சிக்குக் காரணம்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வீழ்ச்சிக்கு சோதிடர்கள் - உறவினர்கள் மற்றும் விமல் வீரவன்ச போன்ற ஒட்டுண்ணிகளுமே காரணம் என்று வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

சிலாபம் பிரதேசத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மகிந்த ராஜபக்ச பொருளாதாரத்தை சீர்குலைப்பதாகவும், ஊழல் மோசடிகளில் தொடர்புபட்டிருப்பதாகவும் முதலில் குற்றஞ்சாட்டியவர் விமல் வீரவன்சதான். ஆனால், அவரைத்தான் மகிந்த ராஜபக்ச மிகச் சிறந்த பேச்சாற்றல் கொண்டவராக மதித்துக் கொண்டிருந்தார். அதன் காரணமாக உண்மையான பேச்சாற்றல் கொண்ட நாங்கள் கட்சிக்குள் மதிக்கப்படாத நிலையில் செயற்பட நேர்ந்தது.

மகிந்தவின் தோல்விக்கு ஒரு வருடம் முன்னதாகவே நான் அவரிடம் அது குறித்து எச்சரிக்கை செய்தேன். ஆனால், அவர் அதனை பொருட்படுத்தவில்லை. சோதிடர்களை நம்பினார். உறவினர்களை முன்னுரிமைப்படுத்தினார். விமல் வீரவன்ச போன்ற ஒட்டுண்ணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். அதன் விளைவாக தோல்வியுற்று அதிகாரத்தை இழந்துள்ளார்.

> "மகிந்தவின் காலத்தில் அவரது தலைமையிலான அரசே செயற்பட்டது. ஆனால் இப்போது மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்த சுதந்திரக் கட்சி அரசு செயற்படுகின்றது."

மகிந்தவின் காலத்தில் அவரது தலைமையிலான அரசே செயற்பட்டது. ஆனால், இப்போது மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்த சுதந்திரக் கட்சி அரசு செயற்படுகின்றது. இது குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாகும்.



என்னை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நேரடியாகவே அழைப்பு விடுத்தார்கள். எனினும் நான் அதனை நிராகரித்துவிட்டேன். சுதந்திரக் கட்சியிலேயே தொடர்ந்தும் நிலைத்திருப்பேன்.

அதே போன்று இன்னும் ஓரிரு வருடங்களுக்குள்ளாக சுதந்திரக் கட்சியினரை மட்டும் கொண்ட அரசு ஒன்றை நாங்கள் மீண்டும் உருவாக்கிக் கொள்வோம் - என்றார். (ற-5)

## இந்தியாவுக்கு வருமாறு ஜனாதிபதிக்கு அழைப்பு

கொழும்பு, ஏப்.28
இந்தியாவுக்கு வருமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மெதிரிகிரியவில் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அண்மையில் சீனாவுக்குச் சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது.

இந்திய அரச தலைவர்களைச் சந்திப்பதற்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் பெரிய சகோதரனான இந்தியா, இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பையிட்டு மகிழ்ச்சி கொள்கின்றேன் என்றும் - ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஈரானிய அரசிடமிருந்து வந்துள்ள திடீர் அழைப்பையடுத்து விரைவில் அங்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளேன் என்றும் - மைத்திரிபால சிறிசேன கூறினார்.

சீனாவுடன் ஏற்பட்டுள்ள நெருக்கம், எட்கா உடன் பாடு மற்றும் அனுமன் பாலத்துக்கு சிங்களத் தேசியவாத சக்திகளிடம் எதிர்ப்புக்கள் எழுந்துள்ள சூழலிலேயே ஜனாதிபதிக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது. (ற-ஐ-5)

## தோல்வியால் சக வீரர் மீது தாக்குதல்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தில் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது வீரர் ஒருவர் மீது சக வீரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சில நாள்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

வரதராஜா சுதர்சன்(வயது-27) என்ற இளம் வீரரே காயமடைந்தவராவார். விளையாட்டின் போது தோல்வியுற்ற அணி இவர் மீது தாக்குல் மேற்கொண்டுள்ளது என்று, பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளார். மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-107)

## திருட்டு மின்சாரம் ரூ.10 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஏப். 28
சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது மல்லாகம் நீதிமன்று.

அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. கடந்த மாதம் தெல்லிப்பழை பொலிஸாருடன் மின்சார சபை அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது இவர் கைது செய்யப்பட்டிருந்தார். குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டது.(ற-107)

# இராஜதந்திர அணுகுமுறை இன்றி செயற்படுகிறது வட மாகாண சபை

## சாடுகின்றார் நீதி அமைச்சர் விஜேதாஸ

கொழும்பு, ஏப். 28
வடக்கு மாகாண சபையானது இராஜதந்திர ரீதியில் செயற்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு இரு தரப்பு பேச்சுக்கு தயார் என்ற நிலையில், வடக்கு மாகாண சபை இவ்வாறு செயற்படுவது கவலையளிக்கின்றது. அரசியல் தெரியாதவர்களை அரசியல் உயர் பதவிகளில் அமர்த்தினால் இப்படித்தான் நடக்கும் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம். இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்வுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாகாண சபையில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதன் ஊடாக எதனையும் சாதிக்க முடியாது என்று தெரிந்தும் வடக்கு மாகாண சபையில் அரசியல் தீர்வு தொடர்பான யோசனைகள் நிறைவேற்றுவதன் மூலம் வடக்கு மக்களை அரசியல்வாதிகள் தவறாக வழிநடத்துகின்றனர். மாகாண சபைகள் நினைத்தால் நாட்டின் அதிகாரத்தைப் பகிர்ந்து விடலாம் என்ற தவறான எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படுகின்றது.

இதனை மாகாண சபையால் செய்ய முடியாமல் போனால் மக்கள் சிரிக்கும் நிலை இறுதியில் ஏற்படும். இவ்வாறான நகைச் சுவையான விடயங்களை மாகாண சபை நிறுத்த வேண்டும். மொழி ரீதியாகப் பிராந்தியங்களை அமைப் பதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

வடக்கு மாகாண சபையினர் தமது யோசனைகள், அரசியல் நிர்ணய சபைக்கு முன்வைக்கலாம். அதனைவிடுத்து மாகாண சபையில் அதனை நிறைவேற்றுவதில் எந்த அர்த்தமும் இல்லை. இதற்குத்தான் இராஜ தந்திர அணுகுமுறை தேவை. இராஜதந்திரம் தெரியாமையால்தான் இவ்வாறு தவறுகள் இழைக்கப்படுகின்றன. அரசியல் தெரியாதவர்களை அரசியல் உயர் பதவிகளில் அமர்த்தி விட்டால் இவ்வாறுதான் நடக்கும் என்பதற்கு மற்றொரு உதாரணத்தை வடக்கு மாகாண சபை எடுத்தியம்பியுள்ளது - என்றார். (ற-5)

## விதிகளை மீறிய 5 பேருக்கு 60 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஏப். 28
போக்குவரத்து விதிமுறையை மீறி வாகனம் செலுத்திய 5 பேருக்கு சுமார் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது மல்லாகம் நீதிமன்று.

காங்கேசன்துறைப் பகுதியில் மது போதையில் சாரதி அனுமதி பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 11 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது,

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 7ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. எந்தவித பத்திரமும் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு 16 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சுன்னாகம் போக்குவரத்துப் பொலிஸார் நான்கு வழக்குகளையும், காங்கேசன்துறை பொலிஸார் ஒரு வழக்கையும் தாக்கல் செய்திருந்தனர். (ற-4,107)

# வடமாகாண சபை தீர்மானத்துக்கு எந்தப் பெறுமானமும் கிடையாது

## கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28
தேசியப் பிரச்சினைக்கு, எந்தத் தீர்வு காண்பதானாலும், அது ஒற்றையாட்சிக்குள் தான் இருக்கும். வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு எந்தப் பெறுமானமும் கிடையாது - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல் தீர்வு போன்ற விவகாரங்களில் முடிவெடுக்கும் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றம் மற்றும் மத்திய அரசு போன்றவற்றில் வடக்கு மாகாண சபையின் சமஷ்டித் தீர்மானம் எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

இந்தத் தீர்மானம் சட்டரீதியான பெறுமானமற்றது. இது பயனற்றது. ஜனாதிபதியோ, பிரதமரோ நாட்டைப் பிரிப்பதற்கு எவரையும் அனுமதிக்க மாட்டார்கள். அதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். தேசியப் பிரச்சினைக்கு, எந்தத் தீர்வு காண்பதானாலும், அது ஒற்றையாட்சிக்குள் தான் இருக்கும்.

வடக்கில் இராணுவ முகாமுக்குள் சம்பந்தன் நுழைந்த விவகாரத்தையும், வடக்கு மாகாண சபை விவகாரத்தையும், அரசு கவனமாகவும் தந்திரோபாயமாகவும் கையாள்கிறது.

நாம் அவர்கள் மீது பொருத்தமான நடவடிக்கை எடுப்போம். அதே வேளை போலி நாட்டுப் பற்றாளர்களின் பொறியில் சிக்கிவிட மாட்டோம் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழரின் கடல்வளத்தையும் அபகரிக்கும் கைங்கரியம்!

இரப்பானைப் பிடித்ததாம் பறப் பிராந்து-- என்று எங்கள் மத்தியில் ஒரு பேச்சு வழக்கு வாசகம் உண்டு. அதனை நிசமாக்கும் அட்டகாசச் செயல், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு பகுதியில் நடந்தேறி உள்ளது.

அந்த மாவட்டத்தில், தென்னிலங்கை மீனவர்கள் எழுபத்தேழு பேர்களுக்கு மீன்பிடி அனுமதி வழங்கப்பட்ட கையோடு, இப்போது மேலும் 250க்கு மேற்பட்ட மீனவர்கள் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் அரச அதிகாரிகள் சொல்வதைச் சொல்லட்டும், நாங்கள் இங்கு குடியேறி நிரந்தரமாக வாழ்வோம் என்று சவால் விடும் வகையில் அடாத்தாகக் குடியேறி உள்ளனர்!

அது மட்டுமன்றி, அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை, அந்தப் பகுதியில் உள்ள இராணுவத்தினர் பூர்த்தி செய்வதாகவும் தகவல்கள் , அரசல் புரசலாக வெளிப்பட்டு உள்ளன!!

அண்மைக் காலமாக , குறிப்பாக முல்லைத்தீவில் தமிழர்கள், அனுபவிக்கும் தொல்லைகள் நாளாந்தம் அதிகரித்தே வருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

போரின்போது, முல்லைத்தீவு வாழ் தமிழ் மக்கள் அனுபவித்த அல்லை தொல்லைகள் எல்லை இட்டுச் சொல்ல முடியாதவை.

போர் முடிவுக்கு வந்து ஏழு ஆண்டுகள் முடிவுற்ற நிலையிலும், நிலைமை ஒரு பத்து சதவீதமேனும் நிம்மதியாகவும், தத்தமது தொழில்களில் ஈடுபட்டு, தமது ஜீவாதாரத்தை உயர்த்த இயலாத கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுத் தத்தளிப்பதான தகவல்களே மேலெழுகின்றன!

அவர்களின் வாழ்வியல், தர்ம சங்கடமான ஒன்றாகவே, நாளாந்தம் அல்லாடும் நிலையே, ஊதிப் பருத்து வருகிறது.

அவர்களின் பூர்வீகக் காணிகள், குடியிருப்புக்கள், விவசாய நிலங்கள்--நாளும் பொழுதுமாக-- பிறரால் அபகரிக்கப்படும் அபத்தத்தை, அரசு கைகட்டிப் பார்த்திருக்கும் பாவம் தொடர்கிறது!

- மக்களின் விவசாய நிலங்கள் அபகரிக்கப்படுவதும்-குடியிருப்புக்கள், தனியாருக்குச் சொந்தமான காணிகளின் அபகரிப்பும்--
- கடற்றொழில், மீன்பிடித் தொழிலில் பெரும்பான்மை இனத்தவர்களின் அத்துமீறலும்--நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றன.

உதாரணத்துக்கு, அந்தப் பிரதேசத்தின் வளர்ச்சி கருதி, கடற்றொழில் அமைச்சர் வழங்கிய உறுதிமொழிகளைச் செயற்படுத்த இயலாத கையறு நிலையே நாளாந்தம் "மைல்" கணக்கில் உயர்கிறது.

ஓர் அடி உயரத்துக்கேனும் அவர்களின் வாழ்வியல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதான நிலைமை, இப்போது கிடைக்காது என்று, நல்லாட்சி அரசும் அதன் அங்கங்களும் அலகுகளும் கச்சை கட்டி நிற்கின்றன!

தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், நல்லாட்சி அரசு வேண்டும் என்றே, நத்தை வேகத்தில் நகர்கிறது. குறைந்த அளவிலான முன்னேற்றத்தையே பதிவு செய்கிறது--என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் ""கண்டித்திருந்த" போதிலும்--

சொரணை கெட்ட போக்கிலேயே, அரசு தொடர்ந்து செயற்படுவது, விமத்தனமான போக்கை மேலுயர்த்திக் கொடி காட்டுகிறது...!!!

# கனடாவின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள்

## தந்தைசெல்வாவின் 39ஆவது நினைவு தினத்தில் ஆற்றிய உரையின் தொடர்ச்சி

அருட்கலாநிதி அமுது ஜோசப் சந்திரகாந்தன், இறையியல் பேராசிரியர், ரொறன்ரோ பல்கலைக்கழகம்.

இருபத்தியோராம் நூற்றாண்டு நிறை வுறும்போது கனேடியத் தமிழர்களின் எண்ணிக்கை ஐந்து லட்சத்துக்கும் மேலாகிவிடும் என்பது ஒரு பொதுவான கணிப்பீடாகும்.

கனேடிய மண்ணில் தமிழர்களின் வருகையினதும், வளர்ச்சியினதும் பின்புலத்தில் பின்வரும் பத்து விடயங்களை முன்னிலைப்படுத்தி சில கருத்துக்களை இங்கு தரவிளைகின்றேன். இவற்றை ஒருவித தோற்றப் பாட்டியல் அல்லது காண்பியனுபவத் தன்மையிலேயே எடுத்துக்கூற விளைகின்றேன். ஆங்கிலத்தில் *(A phenomenological or an empirical survey)* இவையாவன : 1. தமிழ்ச் சைவ கிறிஸ்தவ வளர்ச்சி நிலைகள், 2. கல்விசார் மேம்பாடுகள், 3. ஆக்க இலக்கிய வளர்ச்சி, 4. கலை பண்பாட்டு முயற்சிகள், 5. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிப் படி கள், 6. கனேடியதேசியமா நில அரசியல் ஈடுபாடுகள், 7. சமூக விழாக்களும் உண்டாடுதல்களும், 8. மருத்துவ சுகவாழ்வு போக்குகள், 9. வர்த்தக விருத்திகள், 10. பேரவைகள், அமைப்புக்கள், மன்றங்கள்.

இந்தத் துறைகள் அனைத்துமே வரலாற்று ஆய்வு நோக்கில் இன்னும் மிக விரிவாக, விவரமாக–காத்திரமான சான்றாதாரங்களுடன் பதிகை செய்யப்பட்டு நூலுருப்பெற வேண்டும் என்பது எனது நீண்ட கால ஆதங்கம் எனவும் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன். இத்தகைய ஒரு திட்டம் பற்றித் தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திருச்செல்வம் மறைந்த பேராசிரியர் செல்வா கனகநாயகம், மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் கனகசபாபதி போன்றோர் பலமுறை குறிப்பிட்டுள்ளனர். இவர்களுடன் இதுபற்றிப் பல தடவை உரையாடியுமுள்ளேன். கனடாவில் எமது இனத்தின் தொடக்க கால வரலாற்றுக் கூறுகளை சரியான முறையில் ஆவணப்படுத்திப் பதிகை செய்வது மிக அவசியமானதாகும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. கனடா என்றுமே ஒரு பல்லின நாடாகவே வளரும். வளம் படைக்கும், நிற்கும். நிலைக்கும். இவைதான் கனேடியத் தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சியின் அறிகுறிகள் என்று நான் திட்டவட்டமாகக் கூறமாட்டேன். தனிமனிதர்களாகவும் ஒருசில குடும்பங்களாகவும் பல கனேடிய தமிழர்கள் பல துறைகளில் உன்னதம் அடைந்துள்ளனர். நேர்மையான கடின உழைப்பும், கூர்மையான சிந்தனையும், திட்டமிடலும், அறிவார்ந்த வினைத்திறனும் இத்தகைய வளர்ச்சிக்கு ஏதுவாய் அமைந்தன. ஆனால், தமிழ்ச் சமூகம் ஒரு பரந்து வாழும் சமூகமாக

**கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சபைகளின் வழிபாடுகள் பல கனேடிய பெருநகர்களில் தமிழில் இடம்பெறுகின்றது. ஐந்துக்கும் மேற்பட்ட தமிழ்க்கத்தோலிக்க குருக்களும் அதே எண்ணிக்கையிலான ஏனைய கிறிஸ்தவ குருக்கள், போதகர்களும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் பணியாற்றி வருகின்றனர்.**

கனடாவில் உயர்ச்சியும், பெரு வளர்ச்சியும் பெற்றிருக் கின்றது என்று கூற முடியாது. நல்ல வளர்ச்சியின் அறிகுறிகள் பற்றிக் குறிப்பிடும்போது, ஒரு பானையில் சில அவிசுகளை மட்டும்பதம் பார்க்கும் வகையிலேயே உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.

### தமிழ்ச் சைவதமிழ்க் கிறிஸ்தவ வளர்ச்சிப் படிகள்

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தொழிலடிமைகளாக ஆங்கிலேயர்களால் பிடித்துச் செல்லப்பட்ட தமிழரின் அவலநிலை பற்றி மகாகவி பாரதி தமிழ்ச் சாதி என்ற பாடலில் கூறும்போது, எங்கு சென்றாலும் தமிழர்தம் தெய்வம் மறவார் என்பர். இதற்கொப்ப பதினைந்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சைவப் பெருங்கோயில்கள் ரொறன்டோ மாநகரிலும் மொன்றியேல் பெருநகரிலும் அமைக்கப்பட்டு பெருவிழாக்களும் வாரம் தோறும் பொது வழிபாடுகள் மற்றும் பஞ்சாங்கத்தின் படியான முறையான தேர்த்திருவிழாக்கள், கொடியேற்றங்களும் இடம் பெற்று வருகின்றன.

தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் வழிபாடுகளும் முதல் மூன்று மொழிகளில் திருஉரைகளும் இடம்பெறுகின்றன. வரசித்தி விநாயகர் கோயில், கனடா கந்தசாமி கோயில், நயினை நாகம்மாள் கோயில், ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயம், ரிச்மொன்ட் ஹில் பிள்ளையார் கோயில், துர்க்கை அம்மன் கோயில் போன்றவை ஒருவித உள்ளூர் மண்வாசனை கொண்ட கோயில் பெயர்களாகவே விளங்குகின்றன. ரொறன்டோவில் மட்டும் முப்பதுக்கும் மேலான சைவ, இந்துக் குருக்கள், அந்தணப் பெருமக்கள் சமயத் திருப்பணி செய்து வருகின்றனர். கியுபெக் சைவமகா சபை, கனடா இந்து கலாசார மன்றம், ஒன்டாரியோ இந்து சமயப் பேரவை போன்ற சங்கங்கள் தமிழரால் நிறுவப்பட்டு சைவத்தினதும், தமிழ் மொழிப் பண்பாட்டினதும் வளர்ச்சிக்கு வழிசமைத்துத் தருகின்றன. கனேடிய தமிழ்ச் சைவ வளர்ச்சி பற்றி கன டாவின் ஆஸ்தான கவிஞர் கந்தவனம் ஓர் அரிய நூலையும் யாத்துள்ளார்.

எமது பண்பாட்டின் கலையம்சங்கள் கட்டட முறைமைகள் கனடா நாட்டின் தட்பவெப்ப நிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டு கோயில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சிறுவர் இளம் பிள்ளைகளுக்கான சைவ நெறிக்கல்வி ஒரு சில கோயில்களில் ஆங்கிலத்தில் வழங்கப் படுகின்றது. சில ஆலயங்களில் தமிழ் மொழி, திருப்பாடல்கள், பண்ணிசை போன்றவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இந்தக் கோயில்களுக்கு பெருமளவில் தமிழர்கள் குடும்பங்களாகவே சென்று வழிபடுவது மகிழ்ச்சி மிக்கதாகும். ஒரு சில கோயில்களில் வழிபாடு முடிந்த பின்பு பக்தர்களுக்கு சிற்றுணவு இலவசமாக வழங்கி விருந்தோம்பல் செய்யப்படுகின்றது. ரொறன்ரோ அண்டிய நகர்களில் புதிய கோயில்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை ஒருவித துரித சமய வளர்ச்சியின் குறிகாட்டியாக அமைகின்றது எனக்கொள்ளலாம்.

கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ சபைகளின் வழிபாடுகள் பல கனேடிய பெருநகர்களில் தமிழ் இடம்பெறுகின்றது. ஐந்துக்கும் மேற்பட்ட தமிழ்க் கத்தோலிக்க குருக்களும் அதே எண்ணிக்கையிலான ஏனைய கிறிஸ்தவ குருக்கள், போதகர்களும் தமிழ்க் கிறிஸ்தவர்கள் மத்தியில் பணியாற்றி வருகின்றனர். எல்லா மொழிகளிலும் கத்தோலிக்க, கிறிஸ்தவ வழிபாடுகளின் கட்டமைப்பில் ஒருவித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போதிமை இருப்பதனால் கணிசமான தமிழ் கத்தோலிக்கர் தமது வதிவிடங்களின் அண்மையிலுள்ள ஆங்கில மொழியிலான வழிபாடுகளிலும் பங்குபற்றி வருகின்றனர். மொண்ட்ரியலில் தமிழ்க் கத்தோலிக்கருக்கென ஒரு தனியான ஆலயமுண்டு. றொறன்ரோவில் இதற்கான முயற்சிகள் முன் எடுக்கப்படுகின்றன. தமிழ்க் கத்தோலிக்க ஆல யத்தில் தத்தமது ஊர்க்கோயில்களின் பெயர் கொண்ட திருவிழாக்களை ஆண்டு தோறும் ஊர் மக்கள் ஒன்றுசேர்ந்து கொண்டாடி வருவது பொதுவானதாகும்.

ஊரில் முன்னர் இடம்பெற்றது போன்று திருப்பாடல்கள், திருச்சொரூபப் பவனிகள் ஒளி விழாக்கள், கோடைகால ஒன்றுகூடல்கள், கொண்டாட்டங்கள் என்பனவும் இடம்பெறுகின்றன. கனேடிய கத்தோலிக்கரின் புதிய முகங்கள் என்ற பெயரில் ஆங் கிலத்தில் வெளிவந்த நூலில் இது பற்றிய தகவல்களும், இன்னும் தமிழ்க் கத்தோலிக்கர்களின் நிறுவன அமைப்புகள் குடும்ப சமய வளர்ச்சிகள் போன்றவை பற்றிய பல தகவல்களும் இந்த நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**கல்விசார் மேம்பாடுகள்**

தரப்படுத்தல் எனும் பாரபட்சமான சட்டம் வழியாகத் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியின் தொடர்ச்சி சிங்கள அரசால் கட்டுப்படுத்தப்பட்டமை தமிழ் மக்களின் குறிப்பாகத் தமிழ் இளைஞரின் அரசியல் போராட்டத்துக்கும் அவலங்களுக்கும் புலப்பெயர்வுக்கும் ஒரு முக்கிய காரணியாகும் என்பது பல ஆக்கங்களில் விவரத்துடன் விளக்கப்பட்டுள்ளது.

ஆனால், இன்று ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் கனடாவின் முன்னணிப் பல்கலைக் கழகங்களில் சுதந்திரமாகத் தமது விருப்பத்துக்கும் ஆர்வத்துக்கும் ஏற்றபடி உயர் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகின்றனர், மருத்துவர், பொறியியலாளர், சட்ட அறிஞர் என்ற பழைய பல்லவி இன்னும் எம்மவரை ஆட்கொண்டுள்ளதேயாயினும் தமது சுதந்திர சிந்தனை வளர்ச்சியாலும் பல பாடசாலைகள் வழங்கும் மதியுரை வழிகாட்டல்களாலும் பல மாணவர்கள் முன்பு எவரும் தடம்பதிக்காத பல புதிய அறிவுப் பாதைகளை இனம் கண்டு கல்வியுலகில் முன்னேறி வருகின்றனர்.

அரசியல் தொழில்நுட்பம், மரபணுவியல் சமூகவியல், முகாமைத்துவவியல், சமூக சேவையியல் மானிடவியல், பொருண்மியபொதுநிதித்துறை, மருத்துவ பௌதிகம், புற்றுநோயியல், அணுவாய்வியல் போன்ற பல புதிய துறைகளில் எமது பிள்ளைகள் ஆர்வம் காட்டி வருவது மிகவும் போற்றத்தக்கதாகும். ஒரு சிலர் இந்தத் துறைகளில் முதுமாணி, கலாநிதி வரையான பட்டப்பின் படிப்பை மேற்கொள்வது பெருமை தருவதாகும்.

தமிழ் மாணவர்களின் கல்வி ஆர்வத்தை உயர்வடையச் செய்யும் வகையில் பல கல்வி யூட்டல் நிலையங்கள் தமிழ் மாணவ ஆசிரியர்களால் நடத்தப்படுகின் றன.

சிறுவர்களுக்கும் உயர் நிலைக் கல்லூரி மாணவர்களின் நன்மை கருதியும் Active Brain Centre போன்ற பல தனியார் கல்வி நிறுவனங்கள் அரும்பணி ஆற்றி வருகின்றன.

**ஆக்க இலக்கிய வளர்ச்சி**

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நன்கு திட்டமிட்ட வழிகளில் தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சி கனடாவில் முனைப்புப் பெற்று வருகின்றது. கவியரங்குகள், கலையரங்குகள், கூத்து, நாடகம், பரதம் போன்ற அவைக்காற்றுக் கலைகளில் வளர்ச்சிகள் ஒருபுறமும், சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை நூல் வெளியீடுகள் மறுபுறமுமாக ஆக்கப் படைப்புகள் அடிக்கடி வெளியீடு செய்யப்படுகின்றன.

இவற்றைத் தரம் கண்டு ஆற்றுப்படுத்த வேண்டிய தேவையும் உண்டு என் பதையும் இங்கு கூறுதல் தகும். தமிழ்ச் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு சபா அருள் சுப்பிரமணியமும் அவரது துணைவியாரும் அறாத் தொடர்ச்சியாக தனித்து நின்ற செய்து வரும் பணி போற்றப்பட வேண்டியதாகும். கால் நூற்றாண்டு காலமாக வெளிவரும் தமிழர் தகவல் மாத இதழும் ஆண்டிதழும் செல்வம் அருளானந்தம் வெளியிடும் காலம் சஞ்சிகை, தூறல் இதழ் போன்றவையும் பன்நாட்டுத் தமிழரின் வரவேற்பையும் பெற்றவையாகும். கனடாவில் வெளிவரும் ஒரு சில வாரப் பத்திரிகைகள் தரமான இலக்கிய ஆக்கங்களை பிரசுரித்து வருதலும் இலக்கிய ஆக்கப் படைப்பாளிகளுக்கு ஆதர்ஷமாக அமைகின்றன. கனேடியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் எடுத்து வரும் இலக்கிய செயற்பாடுகள், முயற்சிகள் றொறன்றோ தமிழ்ச்சங்கம் நடத்தும் மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல்கள், பேராசிரியர் இ.பாலசுந்தரம் தலைமையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கனடா வளாகத் தமிழ்த் துறையின் துரித வளர்ச்சி றொறன்ரோவில் தஞ்சாவூர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன் இணைந்த தமிழியல் இளமாணிக் கற்கைக்கான வசதிகள் போன்றவை எதிர்காலத்தில் தமிழின் செந்நெறி வளர்ச்சியை சரியான வழிக்கு இட்டுச்செல்லும் என்ற நம்பிக்கையை கனேடிய தமிழருக்கு ஏற்படுத்துகின்றன. பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் நா.சுப்பிரமணியன் ஐயா மருத்துவர் இலம்போதரன் ஆகியோர் இந்த வளர்ச்சிப் பாதையை எல்லா வகைகளிலும் ஆற்றுப்படுத்தி வருகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன் கனடாவில் தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக அண்மையில் ஓர் ஆவணக் கட்டுரையை வரைந்துள்ளார்.

**கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நன்கு திட்டமிட்ட வழிகளில் தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சி கனடாவில் முனைப்புப் பெற்று வருகின்றது. கவியரங்குகள், கலையரங்குகள், கூத்து, நாடகம், பரதம் போன்ற அவைக்காற்றுக் கலைகளில் வளர்ச்சிகள் ஒரு புறமும், சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை நூல் வெளியீடுகள் மறுபுறமுமாக ஆக்கப் படைப்புகள் அடிக்கடி வெளியீடு செய்யப்படுகின்றன.**

**சமூக-அரசியல் ஈடுபாடுகள்**

பெரும்பான்மை இனத்தின் ஒரு மொழி ஒருவழிப் போக்கினால் தமிழர் பெரிய பின்னடைவுகளையும் பேரிழப்புக்ளையும், பேரவலங்களையும் சந்திக்க நேர்ந்தது. இவைகளே தமிழரின் தொடர்ச்சியான புலப்பெயர்வுக்கு காரணிகளாகின. எனவேதான் புலம்பெயர்ந்த தமிழர்களின் அரசியல் ஈடுபாடுகள் அவர்களின் வாழ்வினின்றும் பிரிக்கமுடியாத சமூகப் பேருணர்வின் துரித வெளிப்பாடாக மேற்கிளம்புவது எதிர்பார்க்கக் கூடியதே.

கனேடிய மத்திய மாநில அரசுகளுடனும் தமிழர்கள் 1983 முதல் இன்று வரையாக ஆக்கபூர்வமான உறவுகளை வளர்த்து வந்துள்ளார்கள். டியாஸ்போறா பரவிப்பரந்து வாழும் குடிவரவினர் இத்தகைய உறவுகளை வளர்ப்பதன் தன்மைகளை முன்னர் கூறினேன்.

1983முதல் 1990 வரையான காலப்பகுதியில் ஒட்டவா, மொண்ட்ரியல், றொறன்ரோ ஆகிய பெருநகர்களில் மூத்த தமிழ் அன்பர்கள் அடிக்கடி ஒன்றுகூடி மாதம் ஒரு முறையாவது கனடாவும் நாடாளுமன்றம் அமைந்துள்ள ஒட்டவா நகரில் கனேடிய வெளியுறவு அமைச்சரின் அலுவலகத்தில் பல சந்திப்புகளை ஏற்பாடு செய்தார்கள். ஒட்டாவாவில் அரச பணித்துறை அலுவலகங்களில் செயலாற்றிய சிவா சிவசுந்தரம், கலாநிதி இலகுப்பிள்ளை, அருட்திரு இரத்தினபாலா ஆகியோருடன் றொறன்ரோவிலிருந்து ஶ்ரீகுகன், ஶ்ரீஸ்கந்தராஜா, விஜயநாதன், மறைந்த சிவலிங்கம் ஆகியோர் இணைந்து இந்த சந்திப்புகளில் பங்கு கொண்டார்கள்.

இதே காலத்தில் நான் ஒட்டாவா பல்கலைக் கழகத்தில் எனது கலாநிதிப் பட்டப் படிப்பைத் தொடங்கியிருந்தேன். எனவே இவற்றை அவதானிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்தச் சந்திப்புகள் புலம் பெயர்ந்து அகதி நிலை கோரிய தமிழர்களுக்கும் தாய்நாட்டில் வாழும் உறவுகளுக்கும் பல நல்ல விளைவுகளைத் தருவித்தன.

கனேடிய அரசின் வெளியுறவுக் கொள்கை நெறியில் சுட்டிக் காட்டத்தக்க மாற்றங்களை இவை ஏற்படுத்தின. புலம் பெயர்ந்தவர்களுக்கான வதிவிடப் பத்திரங்களை வழங்குதலும் அவர்களின் உறவினர்களை இங்கு அழைப்பதற்கான நியதிகளை விரைவுபடுத்தலும் போன்ற பல விடயங்கள் இந்தச் சந்திப்புகளில் எடுத்துக் கூறப்பட்டன.

1983 முதல் 1985 வரை லிபரல் கட்சி ஆட்சியில் இருந்தது. அப்போது எட்மோண்டன் நகரின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த டேவிட் கில்கௌர் என்பவர் தமிழரின் நலன்களில் அதீத அக்கறை கொண்டு செயற்பட்டவர். இவர் பழைமை வாதக் கட்சியை சார்ந்தவர். இவரது சகோதரியின் கணவர் ஜான் தேர்னர் லிபரல் கட்சியில் தலைவராகவும் சிறிது காலம் (1985) கனேடிய பிரதமராகவும் பணியாற்றியவர். கனடாவின் இரண்டு பிரதான கட்சிகளின் தலைமைப் பீடங்களுமே தமிழரின் நலனில் நேர்மையான அக்கறையுடன் செயற்பட்டன. சிவா சிவசுந்தரம், கலாநிதி இலகுப்பிள்ளை, அருட்திரு இரத்தினபாலா ஆகியோர் ஒட்டவாவில் வகித்த அரச பதவிகளும் கனேடிய அரசுத்துறை களுடன் கொண்டிருந்த நீண்டகால நல்லுறவும் இதற்கு சாதகமாய் அமைந்தன.

இந்த ஆண்டு கனேடியத் தமிழர் வழக்கறிஞர் ஹரி ஆனந்தசங்ஹரி லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். சென்ற முறை செல்வி ராதிகா சிட்சபைஈசன் முதலாவது தமிழராக கனேடிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். மார்க்கம் மாநகர சபை அங்கத்தவராக லோகன் கணபதி தொடர்ந்தும் மும்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவை கனேடிய தமிழரின் அரசியல் வளர்ச்சியின் படிக்கல்லாக விளங்குகின்றன. கனேடிய நாடாளுமன்ற அரசியலிலும் கட்சி சார் அரசியலிலும் எம்மவர் அடையவிருக்கின்ற உன்னதத்துக்கு இவை ஏறுபடிக்கற்களாக அமைகின்றன.

இவை தவிர, கனேடிய அரசின் பல்வேறு நிர்வாகத் துறைகளில் எம்மவர்கள் பணியாற்ற முன்வருகின்றனர், முன்வர வேண்டும். வேறுசில தமிழ் இளைஞர்களே கனேடிய அரசின் உயர்தர நிர்வாக சேவைப் பிரிவுகளில் பணியாற்ற விளைந்துள்ளார்கள். ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் பாண்டித்தியம் பெறுவதோடு உலக அரசறிவியல் சார்ந்த துறைகளில் புலமைத்துவம் கொண்டிருத்தலும் இதற்கு அத்தியாவசியமாகும்.

**விஞ்ஞான, தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சிகள்**

யாழ்.மெட்டல் நிறுவனர், தொழிலதிபர் பொறியியலாளர் சொர்ணலிங்கம், கட்டட உபபொருள் உற்பத்திக்கான நிறுவனம் ஒன்றை உருவாக்கி பயன்தரு வகையில் நடத்தி வருகின்றார். கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளின் பிரமாண்டமான வானுயர் கட்டட அமைப்புக்களையும், அதற்கான உபகட்டடப் பொருள் போன்றவற்றையும் இவர் பல தமிழ் பொறியியல் வல்லுனர்களின் துணையுடன் முன்னெடுத்து வருகின்றார்.

ஒளிப்பேழை ஒளிபரப்பு சார்ந்த கணினி மென்பொருள் தயாரிப்பில் கனேடிய கேபிள் ஷொப்பே என்ற நிறுவனத்தை ஸ்டான் முத்துலிங்கம் என்ற தமிழ் இளைஞர் வெற்றிகரமாக நிர்வகித்து வருகின்றார். கணினிப் பொறியியலில் பட்டம் பெற்ற சில தமிழ்ப் பட்டதாரிகள், கணினிகள் திருத்தும் இடங்களையும் கணினி மென் பொருள் உற்பத்திகளையும் கணினி சார்ந்த மென்பொருள் விற்பனைகளையும் செய்து வருகின்றார்கள்.

மொண்ட்ரியலில் அபிகுமரன் உத்தம குமாரன் புற்றுநோய் பற்றிய ஆய்வில் இளம் வயதிலிருந்தே ஈடுபட்டு இன்று பல்கலைக்கழக புலமைப் பரிசில் பெற்றுத் தனது ஆய்வுகளைத் தொடர்கின்றார். அண்மையில் மொண்ட்ரியல் மாநகரில் உள்ள மாகில் பல்கலைக்கழகத் தமிழ் மாணவி நிவதா பாலேந்திரா ஆய்வின் மூலம் கண்டு பிடித்த ஒரு வகை பக்ரீரியா, கழிவு எண்ணெயை உட்கொண்டு வாழும் தன்மை கொண்டது என நிரூபித்துள்ளார். இந்தச் செய்தி முன்பக்கச் செய்தியாக இந்தவருட தொடக்கத்தில் கனேடிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.

கல்வி மேம்பாட்டுக்கும், உயர் நிலை ஆய்வுகளுக்கும் கனடாவில் கிடைக்கும் வாய்ப்புக்களையும் வசதிகளையும் சில தமிழ் மாணவர்கள் நல்ல வழிகளில் உபயோகித்துத் தமக்குப் புகலிடம் தந்த நாட்டுக்கு பெருநன்மை தரும்படியான பேராய்வுகளில் ஈடுபட்டு உழைக்கின்றார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வை விரும்புகிறேன்

## பிரசாரக் கூட்டத்தில் கருணாநிதி



சென்னை, ஏப்.28
தமிழகத் தேர்தல் களம் களைகட்டியுள்ளது. பலரும் வாக்குச் சேகரிப்புக்காகப் பிரசாரக் கூட்டம் நடத்தி வருகின்றனர். தி.மு.க தலைவர் கருணாநிதி தஞ்சை திலகர் திடலில் நடந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் ஓய்வை விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், தமிழ்நாடு இந்த 5 ஆண்டுகாலத்தில் எந்த அளவுக்கு சீரழிந்து போய் இருக்கிறது. தமிழகத்தை இன்று ஆள்கிறவர்கள் எந்த அளவுக்கு சீரழித்து இருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதோ, இந்தத் தேர்தலில் வெற்றி அடைந்தால் உயர்ந்த இடத்துக்குப் போய் விடுவோம், உங்களை எல்லாம் மதிக்க மாட்டோம் என்று எண்ணுகிறவர்கள் அல்ல நாங்கள். இந்த கூட்டத்தில் நாம் எடுத்துரைக்கும் எந்த கருத்துக்களையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டு உள்ளது. அதைப்போல ஓர் அறிக்கையை இனியாரும் வெளியிடப்போவது இல்லை. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிடாமல் மக்களைச் சந்திக்கிறார்கள். அவர்களுக்கு அறிக்கை தேவையில்லை. தி.மு.க. ஒவ்வொரு தேர்தலிலும் அறிக்கை வெளியிட்டு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இதைச் செய்வோம் என்று கூறி அதை நிறைவேற்றி வருகின்றோம்.

இன்றைக்கு நாட்டில் பணம் தண்ணீரைப்போல இறைக்கப்படுகிறது. தண்ணீரைப்போல என்றால், தண்ணீர் கூட இன்று கிடைப்பது இல்லை. அதற்கு மேலாக வாரி இறைத்து இந்தத் தேர்தலை நடத்த அ.தி. மு.க. வினர் ஈடுபட்டு வருகிறார்கள். பணத்தைத் தண்ணீர் போல செலவழித்து இந்தத் தேர்தலில் தாங்கள் வெற்றி பெறவேண்டும். மீண்டும் முதலமைச்சராக இருக்க வேண்டும். தாங்கள் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாட்டில் ஒரு கூட்டம் நடமாடுகிறது.

தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது சகஜம். வெற்றி பெற்றால் வீராப்பு கொள்வதும், தோல்வி அடைந்தால் முகத்தை கீழே தொங்கப் போடுவதும் அரசியல்வாதிகளுக்கு அழகல்ல. தி.மு.க.வை நடத்திச் செல்கின்ற பெரும் பொறுப்பு வாய்ந்த பேரியக்கமாக நான் கருதுகிறேன். அதற்கு யாராவது ஊறு விளைவித்தால் அவர்களை நான் சும்மா விடமாட்டேன். அவர்களின் கருத்துகளை எதிர்த்து, எழுத்துக்கு, எழுத்து, பேச்சுக்கு பேச்சு என்று அந்த நாள் முதல் இந்த நாள் வரை போராடுகிறேன். அண்ணாவின் தம்பிகளான எங்களை யாரும் வீழ்த்த முடியாது. கடைசி மூச்சு இருக்கும்வரை இயக்கத்துக்காக பாடுபடுவேன்.

இங்கு இளைஞர்கள் கூட்டத்தைப் பார்க்கிறேன். இளைஞர்கள் தான் இந்த சமுதாயத்தின் ஆணி வேர்கள். அவர்களால் தான் இந்த உலகத்தில் பல புரட்சிகள் நடைபெற்றன. இளைஞர்கள் தான் நாட்டை ஆளக் கூடியவர்கள். என்னால் நடக்கக் கூட முடியவில்லை. அப்படி இருந்தாலும் கூட நீங்கள் காட்டுகிற உணர்வு, உள்ளத்தில் உள்ள அன்பு, ஆர்வம் இவைகளுக்கு ஈடு இணை கிடையாது. இவைகளையெல்லாம் பொக்கிசமாகக் கருதுகிறேன். நாம் அனைவரும் ஒரே குறிக்கோளாடு வாழ வேண்டும். தமிழர்களை காப்பாற்ற, நம்மை விட்டால் யாரும் இல்லை.

வேறு யார் வந்து காப்பாற்றப் போகிறார்கள். நாம் தான் தமிழர்களை காப்பாற்றவேண்டும். நாம் தான் தமிழ் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். எனவே எந்த தியாகத்துக்கும் தயாராகுங்கள். நான் உங்களைக் கேட்டுக்கொள்வது. நாம் எதற்கும் தயார். எதற்கும் ஈடு கொடுப்போம் என்ற சபதத்தை ஏற்றுப் பணியாற்ற வேண்டும். என்னைப் பொறுத்தவரை எனக்கு 92 வயதாகிறது. 10 வயது தொடங்கி அரசியல் பணி ஆற்றுகிறேன். ஓய்வு இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கிறேன். அந்த ஓய்வை விரும்புகிறேன். நீங்கள் தருவீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது. அந்த ஓய்வு ஒன்று தான் நான் பட்ட பாட்டுக்கு, நான் உழைத்த உழைப்புக்கு, நான் அடைந்த பயன் என்பதை உங்களுக்கு சொல்லிக்கொள்கிறேன். என்னால் சரளமாகப் பேச முடியாது. தழுதழுத்துப் பேசுகிறேன். என்னால் சரியாக நடக்கக்கூட முடியாது. தள்ளாடித் தள்ளாடி நடக்கிறேன். உங்கள் அன்பால் உதவியால் நான் கடைசி மூச்சை விட்டுக்கொண் டிருக்கிறேன். நீங்கள் ஆதரிப்பது தனிப்பட்ட கருணாநிதியை அல்ல. கரு ணாநிதி கொண்டிருக்கும் கொள்கை, உணர்ச்சி, வேகத்தை.

தமிழர்களை காக்க எமது கழகத்தை விட்டால் வேறு கதியில்லை. நாம் தான் நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். எனவே உங்களைக் கேட்டுக்கொள்வது தியாகத்துக்குத் தயாராக இருங்கள். எதற்கும் நாம் தயார். எதற்கும் ஈடு கொடுப்போம் என்ற சபதத்தை ஏற்றுப் பணியாற்றுவோம்–என்றார்.

(கு–ரி4)

# ஐ.எஸ். அமைப்புக்

# அமெ. இணையத்

## ஜனாதிபதி ஒபாமாவின் தலைமையி




வொஷிங்டன், ஏப்.28
அமெரிக்கா, ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக இணைய வழித் தாக்குதலுக்குத் தயாராகியுள்ளது. இணைய வழிக்கு ஏதுவான ஆயுதங்களை அது ஆயத்தப்படுத்தியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமாவின் தலைமையில் இந்த இணைய வழித் தாக்குதல் திட்டமிடப்பட்டுள்ளது. ஐ.எஸ். அமைப்பினர் மிகவும் நவீனமான தொலைத் தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்துவதாகவும், இவற்றின் மூலம் இவர்கள் இலக்கு வைத்த தாக்குதல்களைத் திட்டமிட்டு நிறைவேற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆறு வருடங்களாக அமெரிக்க தேசிய பாதுகாப்புப் பணியகத்தின் இலத்திரனியல் தொடர்பாடல் சாதனப் பிரிவினர் ஐ.எஸ். அமைப்பின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் ஆய்வு செய்து விரிவான அறிக்கை ஒன்றைச்சமர்ப்பித்துள்ளனர்.

முன்னதாக ரஷ்யா, சீனா, ஈரான், வட கொரியா ஆகிய நாடுகள் அமெரிக்கா மீது பாரிய இணையத் தாக்குதல்களை நடத்தியிருந்தன. ஆனால் உலகின் கொடூரமான அமைப்பின் மீது யாராலும் இணைய வழி ஊடுருவலை மேற்கொள்ள முடியவில்லை.

ஐ.எஸ். அமைப்பின் தகவல் பகிரும் தொழில் நுட்பத்தை அறிந்து அவற்றை முடக்குவது என இலக்கு வைத்து, அமெரிக்கா இயங்க ஆரம்பித்துள்ளது. ஐ.எஸ். அமைப்பில் சம்பளம் வழங்குதல், தினசரிக் கட்டளைகள் விடுத்தல் போன்ற ஏனைய தகவல் ப
மாற்றத்தை முடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்ன
கச் சமூகவலைத்தளங்கள்ஏனையமுன்னணிஇணை
நிறுவனங்களுடன் ஐ.எஸ். அமைப்பின் பிரசார ந
வடிக்கைகளை முடக்குவதற்கான திட்டங்கள் குறித்து
கலந்து ஆலோசிக்கப்பட்டன. இவற்றுடன் இந்தப் புதி
திட்டத்தையும் இணைக்கத் தீர்மானித்துள்ளனர்.
இந்தத் தாக்குதல் தொடர்பான கலந்துரையாட
தொழில்நுட்ப நிபுணர் குழுவுடன் இரகசியமாக நட
தப்பட்டது. ஐ.எஸ். அமைப்பின் தகவல்களைப் பெற்று
கொள்ளவோ, ஊடுருவவோ புதிய தொழில் நுட்
திறன் தேவை என்ற கருத்து முன்வைக்கப்பட்ட
நாம் இணையவழித் தாக்குதல்களை ஆரம்பித்





ஈக்குவடோர் நில அதிர்வின் பின்னர் இடம்பெற்ற மீட்புப் பணியில் நாய்களும் ஈடுபட்டன. அவ்வ
தனது மோப்பத் திறனால் குறைந்தது 7 பேரின் உயிரை அது மீட்டது. தேடும் பணியில் ஈடுபட்டிருந்தே
இரங்கலைத் தெரிவித்துள்ளனர். டைக்கோவுக்கு இறுதி இரங்கல் வழிபாடு நடத்தப்பட்டுத் தீயனை




# இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கில் மருத்துவர் பணிப் புறக்கணிப்பு

லண்டன், ஏப்.28
இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான இளைய மருத்துவர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிரித்தானியத் தேசிய சுகாதார சேவைகள் வரலாற்றில் இவ்வாறானதொரு பணிப் புறக்கணிப்பு இதுவே முதல் முறை ஆகும். நேற்று முன்தினத்தில் இருந்து 2 நாள்களாக இடம்பெற்ற பணிப் புறக்கணிப்பு அவசர சேவைகள் பிரிவைச் சார்ந்தோரை அதிகமாகத் தாக்கியுள்ளது.

அரசுக்கும் மருத்துவர்களுக்கும் இடையில் இருந்த புரிந்துணர்வின்மையை பணிப்புறக்கணிப்பு வெளிப்படுத்தியுள்ளது.

வார இறுதி நாள்களிலும் தேசிய சுகாதார சேவைகளை வழங்க அரசு உறுதி பூண்டுள்ளது. இவற்றில் பணிபுரிபவர்களுக்கான ஊதியம் வழங்கப்படாததை அடுத்து 10 வருடங்களுக்கும் குறைவான மருத்துவ அனுபவமுடைய மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இது அரசுக்கு எதிரான மறைமுகமான மிரட்டல் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஒரு லட்சத்து 25 ஆயிரம் சிகிச்சைகள், அறுவைச் சிகிச்சைகள் பணிப்புறக் கணிப்பால் நிறுத்தப்பட்டன. இதனால் நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் கடும் நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளனர். இவர்களுக்கு மூத்த மருத்துவர்கள் சிகிச்சை வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (கு–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த எதிராக தாக்குதல் ல்


விட்டோம். இதனால் ஐ.எஸ். அமைப்பினர் தமது தொடர்பாடல் தொடர்பில் கவலை அடைந்துள்ளனர் என துணைப் பாதுகாப்புச் செயலர் றொபேட் தெரிவித்தார். மேலும் இதற்கு முன்னர் நாம் இவ்வாறானதொரு தாக்குதலை நிகழ்த்தவில்லை. இந்தத் தாக்குதல் சிறிய ஒரு குழுவால் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டது என அவர் தெரிவித்தார்.

மேலும், அவர்களின் தகவல் பரிமாற்றத்தில் புகுந்து தவறான கட்டளைகளை வழங்குவதும், வங்கியில் பணப்பரிமாற்றத்துக்கான வழியைத் திசை திருப்பவும் திட்டமிடப்பட்டுள்ளது.

4 வருடங்களுக்கு முன்னர் இணைய வழித் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது என்றும், தற்போது வலுவான நிலையை அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கான மென் செயலியை உருவாக்கப் பல மில்லியன் டொலர் பணம் தேவைப்பட்ட போதிலும் போராளி அமைப்பு ஒன்றைக் கட்டுப்படுத்துவதற்கு எதற்காகப் பணம் விரயம் செய்யவேண்டும் எனவும் விமர்சிக்கப்பட்டது.

சில வருட உழைப்பின் பின்னர் தற்போதைய நிலை சாத்தியமாகியுள்ளது. போராளி அமைப்பு ஒன்றினால் இவ்வாறான வலுவான கட்டுமானங்களை ஏற்படுத்தியுள்ள தன்மை நாடுகளின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது என நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (த-ரி4)



# பாதசாரிகளுக்காக ஜேர்மனியில் தரையிலேயே வீதிச் சமிக்ஞைகள்

பேர்ளின், ஏப்.28

ஜேர்மனியின் ஒக்ஸ்பேர்க் நகரில் பாதசாரிகளுக்கு எச்சரிக்கையூட்டும் மின் விளக்குகள் சாலையில் பொருத்தப்பட்டுள்ளன. கைபேசியில் மூழ்கியபடி சென்று கொண்டிருக்கும் பலர் வீதிச் சமிக்ஞைகளை பார்ப்பதில்லை. இதனால் பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன. இவற்றைத் தவிர்க்க இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது இந்தச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தல் வெற்றியளித்துள்ளன என நகரப் போக்குவரத்து அதிகாரி தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் 20 சதவீதமான பாதசாரிகள் கைபேசியில் மூழ்கியபடி செல்கின்றனர் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தரையில் விளக்கைப் பதிக்கத் தீர்மானித்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் பாதசாரிகளின் இறப்புகள் தவிர்க்கப்படும் என அவர்கள் மேலும் கூறினர்.

மேலும் சிறுவர்கள், வயோதிபர்களுக்கும் இவ்வாறான விளக்குகள் அதிக எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளன. (த-ரி4)



# சிரியாவில் மீண்டும் தாக்குதல் ஆரம்பம்

டமஸ்கஸ், ஏப்.28

சிரியாவில் அலெப்போ நகரில் இடம்பெற்ற தாக்குதலில் 25 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என நேற்று முன்தினம் தகவல் வெளியானது.

போர் நிறுத்த உடன் படிக்கையின் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 2 மாதப் போர் நிறுத்த உடன் படிக்கை கடைப்பிடிக்கப்பட்டுள்ள துடன், ஜெனிவாவில் சமாதானப் பேச்சு இடம்பெற்றது.

இந்த நிலைமை தொடர்பில் ஐ.நா செயலர் பான்-கீ- மூன் தெரிவிக்கையில்,

போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டால்தான் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

இடம்பெற்று வரும் மோதல்கள் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன. இத்துடன் சமாதானப் பேச்சுக்கு பாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. நாம் இந்த விடயத்தில் அதிக கவனம் எடுத்துள்ளோம் என ஐ.நா. செயலர் குறிப்பிட்டார்.

அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் மனித உரிமைகள் அவதானிப்புக் குழுவினர் தெரிவிக்கையில், போராளிகளின் ரொக்கட் தாக்குதலில் பொதுமக்கள் உயிரிழந்தனர். மழை போன்று குண்டுகள் பொழியப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

வீடுகள், பாதுகாப்பு அரண்கள், சந்தைப் பகுதிகள் என்பவற்றில் சரமாரித் தாக்குதல்கள் இடம்பெற்றன. நாங்கள் கொல்லப்படுகிறோம், எம்மை உயிருடன் தக்கவைப்பது சவாலான விடயம் எனப் பொது மக்கள் கூறியதாகப் பாதுகாப்புப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆங்காங்கே நடத்தப்பட்ட தாக்குதலில் மக்கள் கொல்லப்பட்டனர். தாக்குதல் குறித்து இணையத்தில் போராளிக் குழுக்கள் பொறுப்பேற்றுள்ளனர்.

அல் – அற்றரிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் தீயணைப்பு வாகனமும், அம்புலன்ஸும் சேதமடைந்துள்ளன. இந்தத் தாக்குதலை அசாத்தின் படைகள் அல்லது அவரது ஆதரவான ரஷ்யப் படைகள் செய்திருக்கலாம் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் பாதுகாப்புப் பணியகம் தாக்குதலுக்கு இலக்காகலாம் என அஞ்சப்படுவதாக குறித்த பணியகத்தின் ஊழியர் தெரிவித்துள்ளார்.

இடம்பெற்று வரும் தாக்குதல்களால் போக்குவரத்துப் பாதைகள் பாதிப்படைந்துள்ளன. இதனால் பொருள்கள் வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அலப்போ பிரதேசத்தை 2012 ஆம் ஆண்டில் இருந்து போராளிகள், அரச படைகள் என இரு தரப்பினர் இரு பகுதிகளாக ஆட்சி செய்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து வன்முறைச் சம்பவங்களும், தாக்குதல்களும் நகரை உலுக்கி வருகின்றன. இதுவரை 100 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் மட்டும் 24 மணி நேரத்தில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் பிரித்தானிய மனித உரிமைகள் அவதானிப்புக் குழுவினர் தெரிவித்தனர். (த-ரி4)



றான ஒரு மீட்புப் பணியில் 4 வயதான டைக்கோ என்ற நாய் ஈடுபட்டது. இடிபாடுகளில் இருந்து
ளை மாரடைப்புக் காரணமாக உயிரிழந்தது. இந்த நாயின் மறைவுக்கு மீட்புப் பணியகத்தினர் தமது
ப்பு வீரர்கள், மீட்புப் படையினரின் மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன. (த-ரி4)

# 20 சுற்றுலாப் பயணிகள் பிலிப்பைன்ஸில் கடத்தல்

## அவர்களில் ஒருவர் கொலை

பிலிப்பைன்ஸ் நாட்டில் 20 சுற்றுலாப் பயணிகள் இஸ்லாமியப் போராளிகளால் கடத்தப்பட்டு, அவர்களில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இதனால் பிரிப்பைன்ஸ் இராணுவத்தினருக்கு உலக நாடுகளால் அழுத்தம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட ஏனையோரை ஆபத்தின்றி மீட்பது குறித்து ஆலோசனை நடத்தப்படுகின்றது. கடந்த திங்கட்கிழமை ஜோன் ரிட்ஸ்டெல் எனும் கனேடிய பிரஜை அபு சயாப் எனும் ஆயுததாரியால் சுலு மாநிலத்தில் கொல்லப்பட்டார்.

இந்தச் செயலுக்குக் கனேடியப் பிரதமர் தனது கண்டனத்தை வெளிப்படுத்தியதோடு, பிலிப்பைன்ஸ் இராணுவத்தினருக்கு ஏனைய கடத்தப்பட்டோரை மீட்பதற்கு உதவுவதாக உறுதி மொழி கொடுத்துள்ளார்.

இந்தக் கடத்தல் சம்பவத்துக்கும், தேவையற்ற கொலைக்கும் எமது கண்டனத்தைத் தெரிவிக்கிறோம் என கனேடியப் பிரதமர் ருறூடோ தெரிவித்தார். மேலும் கடத்திய குழுவினர் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்களில் 6 பேர் மேற்கு நாடுகளைச் சார்ந்தவர்கள். ஏனையோர் ஆசியர்கள்.

எதிர்வரும் மாதம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், அவற்றைக் குலைக்கும் முகமாக இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் கிராமங்களில் உச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் சிறுபான்மையினராகக் கருதப்படுவதால், இவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் ஏனைய கடத்தப்பட்டவர்களுக்கு எதுவித சேதமும் இன்றி மீட்கும் பொறுப்பு பிலிப்பைன்ஸ் இராணுவத்தினருக்கு அதிக அழுத்தத்தைக் கொடுத்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரும் இந்தக் கொலைக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் சுலு மலைப் பகுதியில் 2 ஆயிரம் இராணுவத்தினர், வான் படையினர் அதிரடித் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். போராளிக் குழுவினரால் பணப் பேரம் பேசப்படலாம் என்றும் நம்பப்படுகிறது. (த-ரி4)

# லண்டனின் பிக் பென் பல மாதங்கள் ஒலிக்காது

லண்டன், ஏப் 28

லண்டனின் பிக் பென் என்ற பெரிய கடிகாரம் பல மாதங்களுக்கு ஒலிக்காமல் நிறுத்தப்படுகின்றது.

பிக்பென் கடிகாரம் பொருத்தப்பட்டுள்ள கோபுரத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதே இதற்குக் காரணமாகும். 1856 ஆம் ஆண்டில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட இந்தக் கடிகார கோபுரத்தில் ஏற்பட்டுள்ள வெடிப்புகளை அவசரமாக பழுதுபார்க்க வேண்டியுள்ளது. இந்தக் கடிகாக் கோபுரத்தை நிர்மாணிக்க 13 ஆண்டுகள் பிடித்ததாம்.

இதனைப் பழுதுபார்க்க 4 கோடியே 20 லட்சம் டொலர் செலவாகும்.

பிக் பென் என்ற இந்த பெயர் உண்மையில் 13.5 தொன் எடையிலான ஒரு பெரிய மணி ஒன்றுக்கே வைக்கப்பட்டிருந்தது. ஆனால், மணி ஒலிப்பதன் காரணமாக இந்தக் கோபுர கடிகாரத்துக்கு அது சூட்டப்பட்டு விட்டது.

முன்னதாக, இதனை நிர்மாணிக்க 2600 கன மீற்றர் செங்கல்லும், 850 கன மீற்றர் கருங்கல்லும் பயன்படுத்தப்பட்டதாம்.

மகாராணியின் வைரவிழாவை முன்னிட்டு 2012 இல் இதற்கு எலிஸபெத் கோபுரம் என்று பெயர் மாற்றப்பட்டது.

இந்தக் கோபுரக் கடிகாரத்தின் மணி ஒலிப்பிரதி ரேடியோ-4 இல் நேரடியாக ஒலிபரப்பப்பட்டு வருகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடமும் ராசி பலனும்




## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம்)

**(புதுவருடமும் ராசி பலனும் என்ற தலைப்பில் கடக ராசி பற்றிப் பார்த்தோம். இன்று சிம்ம ராசி பற்றிப் பார்ப்போம்)**

அன்புக்குக் கட்டுப்பட்டவர் நீங்கள்!

புத்தாண்டு பிறக்கும் போது, உங்களின் யோகாதிபதி செவ்வாய் கேந்திர பலம் பெற்று அமர்ந்திருப்பதால், தன்னம்பிக்கை பிறக்கும். பெற்றோரின் உடல் நிலை சீராகும். உடன் பிறந்தவர்கள் உதவியாக இருப்பார்கள். வழக்கில் தீர்ப்பு சாதகமாகும். வருடம் பிறக்கும்போது, ராசிநாதன் சூரியனும், ஜீவனாதிபதி சுக்கிரனும் 8இல் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதால், அரசால் அனுகூலம் உண்டு. சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். 1.8.16 வரை ஜென்ம குரு தொடர்வதால், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். கணவன்–மனைவிக்குள் வீண் சந்தேகத்தால் பிரிவுகள் வரக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு 2ஆம் வீட்டில் அமர்வதால், எதிர்பார்த்து ஏமாந்த தொகைகைக்கு வரும். தடைபட்டிருந்த சுப நிகழ்ச்சிகள் நல்லபடி நிறைவேறும். குடும்பத் தில் அமைதி நிலவும். மூத்த சகோதர வழியில் உதவிகள் உண்டு. ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிகாரத்திலும், வக்ர கதியிலும் ராசிக்கு 3இல் அமர்வதால், ஒரே நாளில் பல வேலைகளையும் பார்க்க வேண்டிவரும். புதிய முயற்சிகள் தாமதமாகி முடியும்.

4.12.16 முதல் 29.12.16 வரை சுக்கிரன் 6இல் மறைவதால், நரம்புச் சுளுக்கு, சோர்வு, வீண் செலவு, வாகன விபத்து, கணவன்–மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வருடம் முழுவதும் அட்டமத்துச் சனி தொடர்வதால், சின்னச் சின்ன வேலைகளைக் கூட அலைந்து முடிக்க வேண்டி வரும். தவிர்க்க முடியாத செலவுகள் அதிகரிக்கும். தாயாருக்கு சிறு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும்.

வருடம் முழுவதும் உங்கள் ஜென்ம ராசியில் ராகுவும், 7இல் கேதுவும் தொடர்வதால், அடிக்கடி முன்கோபம் வரும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். வாழ்க்கைத் துணைக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

உங்களின் யோகாதிபதியான செவ்வாய் 16.1.17 முதல் 26.2.17 வரை 8இல் மறைவதால், வரவுக்கு மிஞ்சிய செலவுகள், சகோதர வகையில் சங்கடங்கள், எதிலும் நம்பிக்கையின்மை, வீடு, மனை வாங்குவது, விற்பதில் சின்னச் சின்ன இழப்புகள், மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். வருடத்தின் மத்தியப் பகுதியிலிருந்து ஓரளவு இலாபம் வரும். விளம்பர யுக்திகளைக் கையாண்டு இலாபம் ஈட்டுவீர்கள். புது சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுப்பீர்கள். என்றாலும் 4ஆம் வீட்டில் சனி நிற்பதால், பங்குதாரர்கள் உங்களைப் புரிந்துகொள்ள மாட்டார்கள். சில விடயங்களுக்கு நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படும். வங்கிக் கடன் கிடைத்து உங்கள் ரசனைக்கு ஏற்ற இடத்துக்குக் கடையை மாற்றுவீர்கள்.

உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். சிலருக்கு இடமாற்றம் உண்டு. வேறு சில புது வாய்ப்புகளும் வரும். சம்பளம் உயரும். உங்கள் மீது தொடுக்கப்பட்ட அவதூறு வழக்கில் இருந்து விடுபடுவீர்கள்.

மாணவ–மாணவிகளே! படிப்பில் அலட்சியம் வேண்டாம். அன்றைய பாடங்களை அன்றே படித்துவிடுவது நல்லது. விளையாடும்போது சின்னச் சின்ன காயங்கள் ஏற்படக் கூடும். கவனமாக இருக்கவும். போட்டித் தேர்வுகளில் போராடி வெற்றி பெற வேண்டி வரும்.

கலைத்துறையினர் விடா முயற்சியால் சாதித்துக் காட்டுவார்கள். அவர்களுடைய படைப்புத் திறன் வளரும்.

மொத்தத்தில் இந்த தமிழ்ப் புத்தாண்டு, முற்பகுதியில் சின்னச் சின்ன சங்கடங்களை தந்தாலும், வருடத்தின் பிற்பகுதி வருங்காலத் திட்டங்களை நிறைவேற்ற உகந்த வாய்ப்புக்களைத் தருவதாக அமையும். (தொடரும்)

# மாணவர்கள் பாடசாலையிலிருந்து தூர விலகுவதற்கான காரணங்கள்

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

கற்றல் என்ற விடயமானது நீண்ட காலமாக மனித வாழ்வோடு பிணைந்து காணப்படும் ஒரு செயற்பாடாகும். மனித வாழ்க்கையின் மையப்பொருளாகக் கற்றல் அமைந்துள்ளது. கல்வியின் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படுவதன் மூலம் கற்றலை ஊக்குவிக்க முடியும். மாணவர்கள் வரவு ஒழுங்கீனம், இடைவிலகலைத் தவிர்த்து கல்வியில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இன்று மாணவர்களில் ஒரு பகுதியினர் கல்வியில் அக்கறையின்றிப் பாடசாலையை விட்டுத் தூரவிலகிச் செல்கின்றனர். இதற்குப் பெற்றோர் மட்டுமல்ல பாடசாலைகளும் பங்கு வகிக்கின்றன.

பிள்ளைகள் கற்க மறுப்பதில் குடும்பச் சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றது. குழந்தை முதலில் எதிர்கொள்ளும் சமூக அலகு குடும்பம். தமது பிள்ளைகள் படிக்க வேண்டும் என நினைக்கிறார்களே ஒழிய கற்றலுக்கான சூழலை வீட்டில் அமைத்துக் கொடுப்பதில்லை. சில பெற்றோர் மாணவப் பருவத்திலேயே இளைய கூலிப் படைகளாக கூலிவேலைக்குப் பிள்ளைகளை அனுப்புகிறார்கள். பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகள் முன்னிலையில் குடும்பத் தகராறில் ஈடுபடுதல், தந்தை தனது மது பாவனைக்கு வருமானத்தின் பெரும்பகுதியைச் செலவு செய்வதால் கற்றல் செலவுகளை ஈடுகொடுக்க முடியாமை. பெற்றோர் சொந்தப் பிரச்சினைகளில் நேரத்தை செலவு செய்கிறார்களே ஒழிய தம் பிள்ளைகளில் அன்பு, பாதுகாப்பு, கவனிப்பைக் கொண்டிராமை, பிள்ளைகளை உளநெருக்கீட்டுக்கு உட்படுத்தல், பெற்றோர் - பிள்ளைகளுக்குமிடையிலான நல்லுறவில் விரிசல் காணப்படல். பிள்ளைகளின் கட்புல-செவிப்புலனில் கவனம் செலுத்தாதிருத்தல், தந்தையின் மது போதைச் செயற்பாடுகள். பெற்றோரின் சமூக விழுமியங்களுக்கு ஒவ்வாத நடத்தைக் கோலங்கள், பிள்ளைக்கு வீட்டில் ஒழுங்கான கட்டுப்பாடின்மை, அளவுக்கு மிஞ்சிய சுதந்திரம் கொடுத்தல், குடும்பத்தில் குற்றம் புரிந்தோர் காணப் படுதல், பிள்ளையின் சகபாடியில் கவனம்

**ஆசிரியர்கள், அறிவு மட்டத்தை உயர்த்துவதில் கூடிய அக்கறை செலுத்துகிறார்களேயொழிய சமூகத் திறன்களை விருத்தி செய்வதில் அதிக நேரத்தைச் செலவிடுவதில்லை.**



செலுத்தாமை, பிள்ளையிடத்தில் காணப்படும் மிதமான இயல்பூக்கத்தை இனங்காணாமை உ+ம் பாலியல் ஊக்கம், இவற்றின் விளைவாக மாணவர்கள் பாடசாலையிலிருந்து தூரவிலகிச் செல்கிறார்கள்.

கற்றலில் ஈடுபாடு குறைவதற்கு மாணவர்களது நடத்தைக் கோலங்களும் காரணமாக அமைகின்றன. பொருத்தமற்ற சகபாடிகள், உணவு, கற்றல் உபகரணங்களின்றி பாடசாலை செல்லுதல், நீண்ட நேரம் கற்பதில் பொறுமை இழத்தல், மாறி வரும் கலா சாரசீரழிவுக்குள் மூழ்கியிருத்தல், போதைப் பொருள் பாவனையில் கூடிய ஈடுபாடு கொண்டிருத்தல், இவ்வாறான மாணவர்கள் கற்க மறுக்கின்ற மாணவர்களாகக் காணப்படுகின்றனர்.

பாடசாலையின் செயற்பாடுகள் சிலவும் மாணவரது கற்றல் ஈடுபாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. வீட்டில் மட்டுமன்றி பாடசாலைகளிலும் அன்பு, கவனிப்பு ஆகிய தேவைகள் நிறைவேறாத சந்தர்ப்பங்களில் மனஎழுச்சித் தாக்கங்களினின்றும் தப்புவதற்கு மாணவர்கள் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுவர். மாணவர்களை விரும்பிக் கற்கக் கூடிய வகையிலான தூண்டுதலை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும். அதை விடுத்து வற்புறுத்தி எந்தவொரு மாணவரையும் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியாது.


கற்றல் சுயமாக மேற்கொள்ளப்பட வேண்டியதாகும். ஆசிரியர்கள், அறிவு மட்டத்தை உயர்த்துவதில் கூடிய அக்கறை செலுத்துகிறார்களேயொழிய சமூகத்திறன்களை விருத்தி செய்வதில் அதிக நேரத்தை செலவிடுவதில்லை. ஆபத்து விளம்பில் நின்று கற்போரில், ஆசிரியர்கள் கூடிய கவனத்தை செலுத்துவது குறைவு. இன்றைய மாணவர் மத்தியில் இழையோடியுள்ள வன்முறைத் தன்மைகள் பாலியல்சார் நடவடிக்கைகள் நெறி பிறழ்வான நடத்தைக் கோலங்கள், போதைப் பொருள் பாவனை ஆகியன ஆபத்து விளிம்பிலுள்ள விடயங்களாகக் கருதப்படுகின்றன.

கல்வியின் காத்திரத்தை உணர்ந்து செயற்படும் போதுதான் உணர்வுகளுடன் கூடிய கற்றலுக்கான ஆயத்த நிலை உருவாகும். கல்வி தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கு எதிர்மாறான சமூகச் சூழல் சமகாலத்தில் காணப்படுகின்றது. இதனை மாற்றியமைக்க குடும்பச் சூழலும், பாடசாலைச் சூழலும் கற்றலுக்கான கவின் நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாணவர்களின் செயற்பாட்டில் கூடிய அக் கறை காட் டப்பட வேண்டும். தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப் பட வேண்டும். ஒன்று பட்டால் உண்டு ஆரோக்கிய சமுதாயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி கு.குகதாசன்

(நேற்றைய தொடர்ச்சி...)



# முன்பள்ளிச் சிறார்களுக்கு அவசியமான திறன்விருத்திச் செயற்பாடுகள்

பாலர்கள் பாடசாலை வரும்போது, அவர்களை, இன்முகத்துடன் இனியவை கூறி, மகிழ்வுடன், ஆனந்தமாக வாழ்த்தி வரவேற்று, உபசரித்து, மகிழ்வது ஒரு மனதிற்கினிய இன்பகரமான நிகழ்வாகும். இவ்வாறான இன்பகரமான வரவேற்பு நிகழ்வின்போது, பாலர் பலர், துள்ளிக் குதித்து, குதூகலம் அடைந்து, ஆடிப் பாடி மகிழ்ந்து பூரிப்படைந்து ஓடிஆடித் திரிவதைக் காணமுடியும்.

இந்த இன்பகரமான இனிய நிகழ்வைத் தொடர்ந்து, சில இலகுவான, எளிய சுயதூண்டல், சுயஉற்சாகச் சபதங்களை, சுயவலுவூட்டல் கட்டளைகளைக் கூறிக்கூறி, அந்தக் கட்டளைகளை அவர்கள் மீண்டும் கூறுமாறு ஊக்குவிப்பது மிகச் சிறந்ததோர் ஆக்கபூர்வ மனப்பான்மை ஊட்டும் உத்தியாகும்.

பல உயர் கல்விப் பாடசாலைகளில், இவ்வாறான, சுயதூண்டல், சுயஉற்சாகம், சுய ஊக்க உளவியல் அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து, மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு வித்திடுகின்றனர்.

பாடசாலை ஆரம்பமாக முன்பு, மாணவத் தலைவன் ஒருவன், பின்வரும் சுய ஊக்க, சுய உற்சாக சுய மேம்பாட்டுக் கட்டளைச் சபதங்களைக் கூறும்பொழுது, அந்தக் கட்டளைகளை ஏனைய மாணவர்கள் அனைவரும், மனமகிழ்வுடன், ஆனந்தமாக, முழுமனவிருப்புடன் மீண்டும் மீண்டும், திரும்பத் திரும்ப கூறிக்கூறி, உயர்ந்தோர் கல்விகற்கும் மேம்பாட்டுச் சூழலை ஏற்படுத்துகின்றனர்.

**இதோ சில உதாரணச் சபதங்கள்:**

01. நான் அறிவு மிக்கவன், ஆற்றல் உடையவன், புத்திக்கூர்மை பொதிந்தவன் ஞாபகசக்தி மிகுந்தவன், சுய திறன்களை விருத்திசெய்பவன், முதலிடம் வகிப்பவன், முன்னணியில் திகழ்பவன்.
02. நான் தினம் தினம் கல்வி, விளையாட்டு ஆகிய சகல கல்விசார் துறைகளிலும் முழுமன விருப்புடன் ஈடுபடுவேன். சகல துறைகளிலும் முன்னேறி முன்னணி வகிப்பேன்.
03. நான் நுண்மதித்திறன் அறிவுத்திறன், ஆக்கத்திறன், ஆற்றல்திறன், உளத்திறன், உறுதித்திறன், ஊக்கத்திறன், உற்சாகத்திறன் ஆகிய சகல திறன்களையும் விருத்தி செய்து முன்னணி மாணவனாக இலங்கித் துலங்குவேன்.
04. நான் ஆளுமை மிக்கவன், தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துபவன், தன்னம்பிக்கை மிகுந்தவன், சுயஊக்கம் ஊட்டுபவன். ஆக்கமும் ஊக்கமும் எனது அணிகலன். உறுதியும், ஊக்கமும், உற்சாகமும் எனது முழுமூச்சு.
05. எமது பாடசாலை விழுமியங்களைக் கடைப்பிடித்து, ஆசிரியர்களின் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும்போற்றிப்பேணி, எங்களுக்கும், எங்களது பாடசாலைக்கும் நற்புகழும், நற்பெயரும் ஈட்டிக் கொடுப்போம்.
06. எமது பாடசாலையிக் கல்வித்தரத்தை மேம்படுத்தி, எமது பெறுபேறுகளை உயர்த்தி, எமது கல்வி மேம்பாட்டுக்காக, அல்லும் பகலும் அயராது, தளராது பாடுபடுவோம்.

இவ்வாறு தினம் தினம், கூறக்கூற, சொல்லச்சொல்ல, கேட்ககேட்க, இந்த உறுதிமொழிகள், சுயவலுவூட்டல் சபதங்கள், மாணவர்களின் மூளையில் படிந்துபடிந்து, ஆழ்மனதில் ஆழமாக வேர் ஊன்றி ஊன்றி, நாடி நரம்புகளில் செறிந்து, பரந்து, விரிந்து பற்றிப்படர்ந்து, அந்த மாணவர்கள் அவ்வாறே ஓங்கி ஒழுகிச் செயற்பட வல்லவர்களாக மாறி மலர்ந்து விடுவார்கள்.

தினம் தினம், நாள்தோறும் நாள்தோறும், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட விவரங்களை, குறிப்பிட்ட ஒழுங்குமுறையில், கூறிக்கூறி வரும்போது, சொல்லிச்சொல்லி வரும்போது, இனிமையாகக் கேட்டுக் கேட்டு இன்புற்று வரும்போது, அந்த ஆழக்கருத்துமிகு தேன் சுவைச் சொற்கள், வசீகரத் தன்மை, வசியத் தன்மை தூண்டுதல் அடைந்து, அந்தச் சுயவலுவூட்டல் சபதங்களைக் கூறுவோர் மத்தியிலும், கேட்போர் மத்தியிலும் அந்தச் சொற்களில் பொதிந்துள்ள, ஆற்றலையும், திற னையும், பலத்தையும், வலிமையையும் வல்லமைகளையும் அவர்கள் மேல் பாச்சவல்ல ஊட்டவல்ல சக்தியை அடைந்துவிடுகின்றது.

சின்னஞ்சிறு வயதில் அன்புடன், பண்புடன், இனிமையுடன், கனிவுடன், பாசத்துடன், நேசத்துடன், நல் ஊக்கத்துடன், நல் உணர்ச்சியுடன், தினம் தினம் கூறப்படும் விடயங்கள், கருத்துக்கள், அந்தச்சிறார்களது மனதில் மிகத் துரிதமாக வளர்ந்துவரும் மூளையில் படிந்து படிந்து, அவர்களிடம் துரிதகதியில் செறிந்திடும். ஆழ்மனதில், ஆழமாக வேரூன்றி அவர்களது பிஞ்சு நாடி நரம்புகளில் செறிவாகச் செறிந்து விரிந்துபடர்ந்து அவர்களது வாழ்நாள் முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் பழக்க செயல்நெறிகளாக மாறிமலர்ந்துவிட வல்லது.

ஆகவே, இந்தவரவேற்புச் சொல் ஆக்கச் செயற்பாட்டினை, மிக ஆழமாக, ஆழமாக பொருள் பொதிந்த, ஒலிமயமான எதிர்காலம் அமைக்கவல்ல சொல் ஓவியம் நிறைந்த, தேன் போலத் தித்திக்கும் சிறுசிறு வசனங்களில் ஆக்கி அமைப்பது மிக முக்கியமானது.

**இதோ சில உதாரணங்கள்**

01. நாங்கள் எல்லோரும் இன்று மிகவும் அன்புடன் பண்புடன், ஆடிப்பாடி மகிழ்ந்து விளையாடுவோம்.
02. நாங்கள் எல்லோரும் இன்று, மிகநல்ல பாசத்துடன், நேசத்துடன், தோழமைப் பண்புடன் கூடிக்குலவி மகிழ்ந்திடுவோம்.
03. நாங்கள் எல்லோரும் இன்று, மனமகிழ்வுடன், மனவிருப்புடன், இன்மகிழ் நல ஆர்வத்துடன் கல்வி கற்று எமது அறிவையும் ஆற்றலையும் பெருக் கிடுவோம்.
04. நாங்கள் எல்லோரும்நல்லவர்களாக, வல்லவர்களாக சிறந்தவர்களாக, உயர்ந்தவராக, வாழ்வாங்கு வாழ்வோம்.
05. நாங்கள் எல்லோரும் தினம் தினம் முன்னேறி முன்னேறி வருகின்றோம்.


இவ்வாறான, இனிமைமிகு, இன்பகரமான, உயர்வான, உன்னதமான மகிழ்வூட்டக் கூடிய, ஆனந்தம் பொங்கி வடியவல்ல, சொற்கள், சொற்றொடர்கள் மத்தியில். சிறு வயதிலிருந்தே, வெற்றி மனப்பான்மை, சாதனை மனப்பான்மை, ஆக்கபூர்வமான அணுகுமுறை ஆகியவற்றிற்கு வித்திடும். எதிர்மறை எண்ணங்களை, தோல்வி எண்ணங்களை, தோல்வி மனப்பான்மை, தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றைச் தடுத்து நிறுத்தும் எதிர்ப்புச் சக்தியாக வேரூன்றி விடும்.

ஆரம்பத்தில் இத்தகைய மகிழ்ச்சிகரமான வரவேற்பு வாசகங்களை ஆசிரியர்களே, மிகவும் ஆழமாகத், தெளிவாக முத்துமுத்தான சொல் ஓவியமாக வாசித்து வாசித்து, அதன் பின்பு குழந்தைகளை, அச்சொற் தொடர்களை, கூறிக்கூறி மகிழ்ந்து மகிழ்ந்து இன்புறத் தூண்டுதல்வேண்டும். ஒரு வசன ஓவியத்தை மூன்று முறை கூறுவது நன்று.

சிறிது காலத்துக்கு பின்பு, ஐந்து வயது நிரம்பிய மாணவர்களை இவ்வாறான வரவேற்பு நிகழ்வை, நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளலாம்.

**பிரபஞ்ச உயிரியல் இயற்கை சக்தி நேரமும் அதற்கு இணைவான செயற்பாட்டு அனுகுமுறையும்**

(அட்டவணை)




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1611 – மதம் மற்றும் அரச சார்பான சாந்த தோமஸ் பல்கலைக் கழகம் உலகிலேயே பெரிய கத்தோலிக்க பல்கலைக் கழகமாக பிலிப்பைன்ஸ் நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

1792 – தற்போதைய பெல்ஜியம் நாடான ஒஸ்ரிய நெதர்லாந்தினை பிரான்ஸ் ஆக்கிரமித்ததுடன் புரட்சிப் போர் தொடங்கியது.

1869 – சீன மற்றும் ஜரிஷ் தொழிலாளர்களால் கண்டங்களுக்கிடையேயான முதலாவது ரயில் பாதையான மத்திய பசுபிக் ரயில்பாதை அமைப்பின் போது ஒருநாளில் 10 மைல் நீள பாதை அமைக்கப்பட்டது.

1910 – லண்டனுக்கும் மன்செஸ்ரருக்குமான விமான ஓட்டப் பந்தயத்தில பிரான்சைச் சேர்ந்த லூயிஸ் போல்கன் வெற்றி பெற்றார்.

1920 – அசர்பைஜான் நாடு சோவியத் ஒன்றியத்துடன் இணைத்து கொண்டது.

1932 – மனிதர்களில் பயன்படுத்தத் தக்க மஞ்சள் காய்ச்சலுக்கான தடுப்புமருந்துகண்டுபிடிக்கப்பட்டதாகஅறிவிக்கப்பட்டது.

1949 – பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் முதற்பெண்மணியான அரோரா கியூஷொன் மறைந்த தனது கணவர் ஞாபகார்த்தமாக மருத்துவமனை ஒன்றினை மக்களுக்கு அர்ப்பணிப்புச் செய்யச் சென்றவேளை அவரும் அவரது மகளும் வேறு பத்துப்பேரும் படுகொலைசெய்யப்பட்டனர்.

1969 – பிரான்ஸ் ஜனாதிபதி பதவியிலிருந்து சார்ள்ஸ் டிகோல் விலகினார்.

1978 – ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி மொஹமட் தாவூத் கான் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டு கம்யூனிஸ்ட் சார்பு எதிர்ப்பாளர்களால் முன்னெடுக்கப்பட்ட சதிப்புரட்சியில் கொல்லப்பட்டார்.

1986 – செர்னோபில் அனர்த்தத்தால் ஏற்பட்ட உயர் கதிர்வீச்சு சுவீடன் அணுசக்தி நிலையத்தில் உணரப்பட்டதையடுத்து சோவியத் அதிகாரிகள் விபத்து நடந்ததை வெளிப்படையாக அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.


1978 – வட நிக்கரகுவாவில் அமெரிக்க நிதி அனுசரணையுடன் செயற்படும் கொன்ராஸ் இயக்கத்தினர் பதுங்கித் தாக்கியதில் அமெரிக்கப் பொறியியலாளர் பென்லின்டர் சாவடைந்தார்.

2000 – பேச்சுவார்த்தை மூலம் தீர்வுக்காக அரசின் மீது அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச பிரதிநிதிகளிடம் யாழ். ஆயர் அதி வண தோமஸ் சௌந்தரநாயகம் கோரிக்கை.

2001 – டெனிஸ் டிட்டோ உலகின் முதலாவது விண்வெளி சுற்றுலாப் பயணியானார்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....






## வண்ணத்துப் பூச்சி

சின்னஞ் சிறிய பூச்சியே
சிறகடிக்கும் பூச்சியே
வண்ண வண்ணப் பூச்சியே
வண்ணத்துப் பூச்சியே
உந்தன் மேனி நிறத்துக்கு
உதவியது யார்
அவரிடம் சொல்லி எனக்கு
இட்டுக்கொள்ளப் பொட்டுத்தா
பறந்து பறந்து அமர்ந்திடும்
பல் நிறத்து மலர்களிடையே
உறிஞ்சிக் குடித்த தேனிலே
உண்ண எனக்கும் கொடுத்திடு
குதித்து நானும் உன்னைப் போல
குதூகலமாய் ஆடுவேன்

தி.பிரணவன்,
தரம் - 3. வட்டு மத்திய கல்லூரி.

# நாய் வாலை நிமிர்த்திய நகைச் சுவை மன்னன்



கிருஷ்ண தேவராயரின் அரண்மனை வசந்த மண்டபத்தில் அறிஞர்கள் பலர் கூடியிருந்தனர். அங்கு பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசப்பட்டன.

"உலகில் மாறாததும் மாற்றப்பட முடியாததும் இயற்கை ஒன்றுதான்" என அறிஞர்களில் ஒருவர் கூறினார்.

"மனிதன் மகத்தான சக்தி வாய்ந்தவன். மனிதன் மனது வைத்தால் இயற்கையை மாற்றிக் காட்ட முடியும்" என வாதிட்டான் தெனாலிராமன்.

"அப்படியானால் ஏதாவது ஓர் இயற்கையான விடயத்தை எடுத்துக்கொண்டு ஆறுமாத காலத்துக்கு அதை மாற்றிக்காட்டு. ஆயிரம் பொன் பரிசளிக்கிறேன்" என்றார் அரசர்.

எந்த விடயத்தை ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்வது என்ற சர்ச்சை நடந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயத்தைச் சொன்னார்கள். எதுவும் சரிப்பட்டு வரவில்லை. முடிவாகத் தெனாலிராமனே கூறினான். "ஒரு நாயின் வாலை பயிற்சியினால் நிமிர்த்த முடிந்தால் இயற்கையையும் மாற்ற முடியும் என்ற முடிவுக்கு வரலாம்" என்றான்.

எல்லோரும் அதை ஒப்புக்கொண்டனர். ஆறு நாய்க் குட்டிகள் வரவழைக்கப்பட்டன. ஆறு நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மாதம் பத்து பவுண் பராமரிப்புச் செலவு. ஆறுமாதம் பயிற்சி. எவர் நாய் வாலை நிமிர்த்திக் காட்டுகிறார்களோ அவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு என்று முடிவு செய்தனர்.

தெனாலிராமனும் ஒரு நாய்க் குட்டியை வாங்கிச் சென்றான். ஒவ் வொருவரும் நாய்க் குட்டியின் வாலை நிமிர்த்த வெவ்வேறு வழிகளைக் கையாண்டனர்.

ஒருவன் புடலங் காய்க்கு கல்கட்டித் தொங்க விடுவதுபோல் நாயின் வாலில் கல்லைக் கட்டித் தொங்க விட்டான்.

ஒருவன் இரும்புக் குழாய் செய்து நாயின் வாலில் செருகி வைத் தான். ஒருவன் நாய் வாலை எண்ணெய் போட்டுத் தினம் உருவிவிட்டான்.

இன்னொருவன் புதிதாக வால் வளர்ந்தால் நிமிர்த்த வசதி என்று வாலை வெட்டிவிட்டான். ஒருவன் மூங்கில் பத்தையை நாய் வாலில் கட்டி நீட்டியே வைத்தான்.

தெனாலிராமனோ அரசன் மாதா மாதம் கொடுக்கும் பத்து பவுணைத் தானே எடுத்துக்கொண்டு நாயைப் பட்டினி போட்டான்.

ஆறு மாதங்கள் சென்றன. ஆறுபேரும் நாய்களை அரண்மனைக்குக்கொண்டு வந்தனர்.

[illegible] வளராதது [illegible]

கல்லைக் கட்டியிருந்தவன் கல்லை அவிழ்த்ததும் நாய் வாலைச் சுருட்டிக்கொண்டது.

குழாய் செருகியவன் குழாயை உருவியதும் நாய் வால் சுருண்டு கொண்டது.


மட்டை வைத்து கட்டியவன் மட்டையை அவிழ்த்ததும் நாய் வால் சுருண்டுகொண்டது.

எண்ணெய் தடவி உருவியவனின் நாய்வால் செழுமையாக வளர்ந்து சுருண்டு கொண்டிருந்தது.

ஐந்து பேரும் வெற்றி பெறவில்லை. ஆறாவதாக தெனாலிராமன்தான் வளர்த்த நாயைத் தூக்கி வந்தான். கீழே விட்டதும் நாய் நிற்கக்கூட வலிமையில்லாமல் வாலை அசைக்கவும் முடியாமல் நின்றது.

நாயின் பரிதாப நிலை கண்டு அரசர் தெனாலிராமனைக் கோபித்துக்கொண்டார். பந்தயத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதால்தான் நாயைப் பட்டினி போட்டேன் என மன்னிப்புக்கேட்டான். "என் நாய் வாலை சுருட்டாததால் எனக்குப் பரிசு தரவேண்டும்" என்றான் தெனாலிராமன் அரசரும் பாராட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையின் ஆதிமதம் எம் இந்து மதமே

சாம் ரமேஸ்குமார்

பூமிக் கிரகம் என்று உருவானதோ அன்றே சனாதன தர்மமும் உருவானது. இந்த சனாதன தர்மத்தின் சான்றுகள் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் கண்டு பிடிக்கப்பட்டதால் காலப்போக்கில் சிந்து மருவி இந்துவாக மாற்றமடைந்தது. அதனால் சனாதன தர்மம் இந்து தர்மமாக இந்து மதமாக எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. எதற்கு தொடக்கம் இல்லையோ அதற்கு முடிவு இல்லை. அந்த முடிவு இல்லாத ஒன்றுக்கு என்றும் அழிவு இல்லை. அதுதான் எம் இந்து தர்மம். அத்தகைய இந்து மதம் தென், தென்கிழக்கு ஆசியா முழுவதும் பரவி உலகின் ஆதிமதமாகப் போற்றப்பட்டது. இலங்கையும் தென்கிழக்கு ஆசியாவின் ஒரு பகுதியாக விளங்குவதால் அங்கு இந்து மதமே ஆதி மதமாக நிலைபெற்றது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. கி.மு. 2000 எனக் கணிக்கப்படும் இராமாயண காலத்துக்கு முன்னே இலங்கையில் இந்து மதம் வளம் பெற்றிருந்தது. இராமன் சீதையை இராவணனிடமிருந்து மீட்டபோது முன்னேஸ்வரத்தை வழிபட்டான் என்று இராமாயணம் கூறுகின்றது. பழம்பெரும் இராமாயண காலத்தை விடவும் மகாபாரத காலத்திலும் இந்து மதம் இலங்கையில் செழிப்போடுதான் இருந்து வந்துள்ளது. ஸ்ரீ கிருஷ்ணனின் சீடனும் மகாபாரதப் போரின் வெற்றிக்கான கருவியாக செயற்பட்டவனுமான அர்ச்சுனன் யாழ்ப்பாணத்திலுள்ள கீரிமலையின் பழம்பெரும் தலமான நகுலேஸ்வரத்தை வழிபட்டதாக வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆகவே பெண் மீட்புக்கான போரிலும் மண் மீட்புக்கான போரிலும் இலங்கையில் இந்து மதம் பிரகாசித்தே வந்தது.

சிங்களவரின் மூதாதையர் என விமர்சிக்கப்படும் விஜயனும் அவனது தோழர்களும் கலிங்க நாட்டைச் சேர்ந்த இந்துக்களாவார்கள். கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு அவர்கள் வந்தபோது திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற சிவத்தலங்கள் இருந்துள்ளன. சில சிவத்தலங்களை அவன் புனர்நிர்மாணம் செய்ததாக சரித்திரங்கள் கூறுகின்றன. கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனாராலும் கி.பி.9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடல் பெற்ற சிவத்தலங்கள் இலங்கையில் இருந்துள்ளன. குறிப்பாக திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீஸ்வரமும் இவை ஆகும்.

இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது இந்து மதமே இலங்கையின் ஆதிமதம் ஆகும்.



இலங்கையின் பூர்வீக குடிகளாக தமிழர்களே எண்ணற்ற காலம் முதல் இருந்து வந்துள்ளார்கள். சிவபூமி எனத் திருமூலரால் அழைக்கப்பட்ட இலங்கை ஓர் இந்து நாடு என்பது இதன் மூலம் புலப்படுகின்றது.

இலங்கையில் கிளைவிட்டிருக்கும் பிற மதங்களான பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்றவை இலங்கையில் செழிப்புடனும் துடிப்புடனும் இறை சேவை செய்கின்றது என்றால் அதற்குக் காரணம் பண்டைய இந்துக்கள் ஒவ்வொரு மதத்திலும் மதமாற்றம் செய்யப்பட்டதே. அதன் நீட்சியாக இன்றும் மதமாற்றம் தொடர்கின்றது. பிறமதங்களையும் அரவணைத்து வாழ வைக்கின்ற ஒரே மதம் எமது இந்து மதம் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

# புவி வெப்பமடைவதை தடுப்பது மிக அவசியம்

புவி வெப்பமடைவதைக் குறைப்பதற்கு உறுதியான நடவடிக் கைகளை எடுக்க வேண்டிய சூழல் உருவாகிக் கணிசமான காலம் கடந்துவிட்டது. இந்நிலையில், அதற்கான வாய்ப்புகள் உருவாகும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கிறது, நியூயோர்க்கில் ஏப்ரல் கடந்த 22 ஆம் திகதி கையெழுத்தாகியிருக்கும் ஒப்பந்தம்.

புவி வெப்ப மயமாதல் தொடர்பாக கடந்த டிசெம்பர் மாதம் பாரிஸில் நடந்த மாநாட்டில் ஒப்புக் கொண்டபடி, 174 நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் இணைந்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. உலகம் தொழில்மயமாவதற்கு முன்னால் நிலவிய புவி வெப்ப நிலையைவிட 2 பாகை செல்சியஸ் குறைவு என்ற அளவுக்குக் கட்டுப்படுத்தவேண்டும் என்று இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

புவி வெப்பம் அடைவது குறித்து பாரிஸ் மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது. பசுங்குடில் இல்ல வாயுக்களை வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்தியே ஆகவேண்டும் என்கிற அளவுக்கு அறிவியல்பூர்வமாக ஆதாரங்கள் உள்ளனவா என்று பார்க்கப்பட்டது. வளரும் நாடுகளின் நடவடிக்கைகளால் புவி வெப்பம் அதிகமாகவில்லை என்பதால் இந்த ஒப்பந்த விதிகளை நடைமுறை செய்யும் போது தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குக் கடுமையாகவும், வளரும் நாடுகளுக்கு ஓரளவு தாராளமாகவும் நியதிகளைத் தீர்மானிக்கலாம் என்று முடிவுசெய்யப்பட்டது.

ஒரு நாடு குறைந்த அளவே கரியுமில வாயுவை வெளியேற்றுகிறது என்றாலும் அது ஏற்படுத்தும் பாதிப்பு உலகின் வேறு பகுதிக்காக இருக்கிறது. எனவே வளரும் நாடு, வளர்ந்த நாடு என்று பார்த்து நிபந்தனைகளை விதிப்பதாலும் பயன் ஏற்பட்டுவிடாது என்பதே உண்மை. உலக அளவில் பசுங்குடில் இல்ல வாயுக்களை வெளியிடுவதில் இந்தியாவின் பங்கு வெறும் 4.10 வீதம்தான். ஆனால் புவி வெப்பத்தால் ஏற்படும் பருவ நிலை மாறுதல்களால் ஏற்படும் கடுமையான வறட்சி, வரலாறு காணாத மழை வெள்ளம் ஆகியவை கடுமையாகப் பாதிக்கின்றன.

இந்நிலையில், இந்த மாநாட்டில் கையெழுத்திட்டு விட்டதால் பசுங்குடில் இல்ல வாயு வெளியேற்றத்தை கணிசமாகக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மின்னுற்பத்தி, சாலை வழிப் போக்குவரத்து, அடித்தளக் கட்டமைப்பு ஆகிய துறைகளில் இதையொட்டிய வலுவான கொள்கை வகுக்கப்பட வேண்டும்.




பாரிஸ் உடன்பாட்டை உலக நாடுகளின் அரசுகள் ஏற்று அங்கீகரிக்க வேண்டும். பிறகு அதை நடைமுறை செய்வதற்கான நிதியைப் பணக்கார நாடுகள் அளிக்க வேண்டும். ஆண்டுக்கு சுமார் 10,000 கோடி டொலர்கள் இதற்குத் தேவை என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அமெரிக்கா உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் புவி வெப்பத்தைக் குறைப்பதற்கான புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிக்க பெருந்தொகையை மானியமாக வழங்கவேண்டும்.

பசுமைத் தொழில்நுட்பங்களைத் தங்களுடைய பயன்பாட்டுக்கு மட்டும் வைத்துக் கொள்ளாமல் உலகுக்கு வழங்க வேண்டும். புவி வெப்பமடைவதை ஒரு சில நாடுகளால் மட்டும் தடுத்துவிட முடியாது. இதைத் தடுப்பதற்கான முயற்சிகளை ஒட்டுமொத்த உலகமும் ஒன்றிணைந்து எடுத்தாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** செயல் நிறைவேற தாமதமாகலாம். சக தொழில் சார்ந்தவர்களிடம், கருத்து வேறுபாடு ஏற்படலாம். இலாபம் சுமார். பெண்களுக்கு பணத்தேவை அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** மனதில், இனம் புரியாத சஞ்சலம் உருவாகலாம். தொழில் வளர்ச்சிக்கான முயற்சியில் ஈடுபடுவது நல்லது. வருமானம் மிதமாக இருக்கும். வாகனத்தில் மிதவேகத்தை பின்பற்றவும்.

**மிதுனம்:** உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி குறையும். இலாபம் அதிகரிக்கும். பழைய நண்பரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**கடகம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். பெற்றோரின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** பெற்றோரின் அறிவுரையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான ஆதாயம் கிடைக்கும். உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.திட்டமிட்டு செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி:** குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். தொழிலில், இலாபம் படிப்படியாக அதிகரிக்கும். பெண்கள் தாய்வீட்டினரின் உதவி கிடைக்கப் பெறுவர். வாகன பயணத்தில் கவனம் தேவை.

**துலாம்:** எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் உயரும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.

**விருச்சிகம்:** செயலில் விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரம், சராசரி அளவில் இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தை தவிர்ப்பது அவசியம். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம்.

**தனுசு:** புதிய விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில், கூடுதல் வளர்ச்சி ஏற்படும். எதிர்பாழ்த்த பணவரவு கிடைக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** மாறுபட்ட கருத்து உள்ளவர்களிடம் பேச வேண்டாம். தொழிலில், ஆதாயம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**கும்பம்:** உறவினர்களின் ஆதரவு கண்டு பெருமிதம் கொள்வீர்கள். தொழிலில், உற்பத்தி பெருகும். இலாபம் அமோகமாக இருக்கும். எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் விலகுவர்.

**மீனம்:** பேச்சில் சமயோசிதம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.



## மீண்டும் வருகிறது அக்னி நட்சத்திரம்

பிரபு, கார்த்திக், அமலா, நிரோஷா நடிப்பில் மணிரத்னம் இயக்கியிருந்த படம், 'அக்னி நட்சத்திரம்'. 1988 இல் வெளியான இந்தப் படம் சுப்பர் ஹிட்டானது. இதை இப்போது ஹிந்தியில் ரீமேக் செய்கிறார், பிஜாய் நம்பியார். விக்ரம், ஜீவா நடித்த 'டேவிட்' படத்தை தமிழ் மற்றும் ஹிந்தியில் இயக்கியவர் இவர். அமிதாப், பர்ஹான் அக்தர் நடித்த 'வாஸிர்'இந்திப் படத்தையும் இவர் இயக்கியுள்ளார்.' புதியவர்களா? அல்லது முன்னணி ஹீரோக்கள் நடிக்கிறார்களா? என்பது முடிவாகவில்லை. இன்றைய இரசிகர்களுக்கு ஏற்ப திரைக்கதை இருக்கும்' என்கிறார் பிஜாய் நம்பியார். இவர், மணி ரத்னத்திடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

படித்ததில் பிடித்தது

ஒரு அப்பாவும், 4 வயது மகனும் அவர்களுடைய புதிய காரை துடைத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிறுவன் ஒரு சிறிய கல்லை எடுத்து காரின் கதவு பக்கத்தில் சுரண்டிக் கொண்டிருந்தான். சத்தத்தைக் கேட்ட அப்பாவுக்கு கோபம் தலைகேறி யது... கடுப்பில் மகனுடைய கையைப் பிடித்து, நான்கு முறை உள்ளங்கையில் விளாசிவிட்டார். அப்பொழுது தான் கவனித்தார் அவர் அடித்தது ஸ்பேனரை கொண்டு என்பதை.... வலியில் துடித்த மகனை மருத்துவமனைக்கு தூக்கிக் கொண்டு ஓடினார். பல எலும்புகள் முறிந்து விட்டதால்.. இனி விரல்களை குணமாக்க முடியாது என்று மருத்துவர்கள் கைவிரித்தனர்.

மகன் வலி நிறைந்த கண்களுடன் அப்பாவைப் பார்த்து 'அப்பா.. என்னோட விரல் திரும்ப வளர்ந்திடும் இல்லையா அப்பா?' என்று கேட்டவுடன், கண்ணீருடன் மௌனமாக வெளியே வந்தார்.

வெளியில் நின்றிருந்த காரைப் பல தடவைகள் எட்டி, எட்டி உதைத்தார். கண்ணீருடன் தலையில் கையை வைத்துக் கொண்டுகாரின்முன்பு உட்கார்ந்துவிட்டார் அப்பொழுதுதான் அந்தக் கீறல்களைக் கவனித்தார் என்ன எழுதியிருகின்றது என்று.. அந்த வாசகம் 'ஐ லவ் யூ அப்பா'. மனிதர்களைப் பயன்படுத்துகின்றோம். பொருள்களை நேசிக்கின்றோம். எப்பொழுது தான் மனிதனை நேசித்து, பொருள்களைப் பயன்படுத்தப் போகின்றோமோ..?




காதல் கவிருகன் @DiNeshChiNkU · 12h

நாம் ஒருவரிடம் பேசும் பழக்கத்தை வைத்து நாம் எப்படிப்பட்டவர்கள் என்று எளிதில் கணித்துவிட முடியும். நாம் நடித்தாலும் நம் சுயரூபத்தைக் காட்டிவிடும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | 9 | | 3 | | 6 |
| | | 3 | | | 7 | 2 | | 9 |
| | 5 | | | 3 | | | | 7 |
| 3 | | 4 | | | | | | |
| | | | | | | 8 | 6 | 3 |
| 2 | | | 3 | | 9 | | 7 | |
| | | | 1 | | 4 | 7 | 3 | |
| | 4 | | 9 | | 3 | | | |
| | 3 | | | | 2 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 8 | 6 | 5 | 1 | 4 | 2 |
| 6 | 8 | 2 | 1 | 4 | 3 | 7 | 5 | 9 |
| 5 | 4 | 1 | 7 | 2 | 9 | 3 | 8 | 6 |
| 8 | 1 | 7 | 6 | 9 | 4 | 2 | 3 | 5 |
| 9 | 6 | 3 | 5 | 1 | 2 | 4 | 7 | 8 |
| 2 | 5 | 4 | 3 | 7 | 8 | 6 | 9 | 1 |
| 7 | 2 | 8 | 4 | 5 | 6 | 9 | 1 | 3 |
| 4 | 3 | 6 | 9 | 8 | 1 | 5 | 2 | 7 |
| 1 | 9 | 5 | 2 | 3 | 7 | 8 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ஏண்டி என் பிள்ளை நடு வீதியில் போறதைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறாயே...?



யோவ்!! அவன் சிங்கக் குட்டி அப்படித்தான் போவான்...!!


டாக்டர்...எப்படியாவது என்னைக் காப்பாத்துங்க....!

சரி, கவுண்டர்ல பணத்தைக் கட்டிட்டு சொல்லாம கொள்ளாம ஓடிடுங்க...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்தமான காதணி அணிவோம்





தினமும் காதுகளை தேய்த்து சுத்தப்படுத்துங்கள். காது அமைப்பில் வித்தியாசம் இருக்கலாம். அதை காதணிகள், மேக்கப்பால் சரி செய்து கொள்ளலாம்.

பெரிய காது என்றால் பவுண்டேஷன் போட்டு சிறிதாகக் காட்டலாம். விதவிதமான காதணிகளால் அலங்கரிக்கலாம். காதின் கீழ் விளிம்பு அகலமாக இருந்தால் பட்டையாக நிறைய கல் வைத்த பேசரி தோடுகளை போட்டுக் கொள்ளுங்கள். சின்னக் காது என்றால் காது மடல்களில் 2, 3 துளை போட்டு சின்னச் சின்ன வளையங்களை மாட்டி, காது விளிம்பில் கல் பதித்த சரம் போன்ற தோடு அல்லது தொங்கட்டான் போடலாம். குண்டு முகத்துக்கு தொங்கட்டான் வேண்டாம்.

கழுத்தில் மெலிதான செயின் என்றால் காதணியைச் சற்று பெரிதாக அணிந்து கொள்ளுங்கள். காதோரம் குட்டிக் குட்டித் தோடுகள் அழகாக இருக்கும். அகலமான முகம் உள்ளவர்கள் நீள தொங்கட்டான்கள், ஒன்றின் கீழ் ஒன்று வரும் குடை ஜிமிக்கிகள், பெரிய வளையங்கள் போடலாம். கழுத்து நீளம் குறைவென்றால் காதணியின் நீளத்தைக் குறைக்கவும்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 70 | 80 | 40 | 80 | 40 | 70 |
| கத்தரி | 60 | 60 | 70 | 60 | 50 | 50 | 30 | 30 |
| கரட் | 80 | 160 | 80–200 | 100 | 70 | 140 | 80 | 120 |
| மரவள்ளி | 50 | 60 | 50 | 40 | 50 | 60 | 40 | 45 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 50 | 80 | 120 | 50 | 80 |
| பாகல் | 120 | 120 | 100 | 120 | 100 | 120 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 100 | – | 60 | 100 | 60 | 50 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 90 | 80 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 80 | 120 | 100 | 130 | 100 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 25 | 40 | 15 | 140 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 | 100 | 120 | 80 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 | 40 | 30 | 30 |
| கீரை | 15 | 30 | 40 | 15 | 20 | 40 | 25 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 80 | 100 | 80 | 60 | 120 | 50 | 60 |
| புடோல் | 50 | 80 | 60 | 60 | 50 | 60 | 25 | 50 |
| கோவா | 60 | 80 | 80 | 100 | 60 | 100 | 70 | 60 |
| வெண்டி | 90 | 80 | 70 | 120 | 80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | – | 140 | 160 | 140 | 120 | 120 | 200 |
| லீக்ஸ் | 140 | 120 | 100 | 180 | 120 | 140 | 100 | 90 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 50 | 40 | 40 | 25 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 80 | 80 | 120 | 100 | 70 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 200 | 380 | 400 | 350 | 420 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 12 |
| கறிமிளகாய் | 60 | 100 | 100 | 80 | 70 | 80 | 50 | 50 |
| இராசவள்ளி | 150 | 140 | 160 | 160 | 140 | 160 | 110 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 300 | 200 | 270 | 400 | 200 | 300 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

## இ புதுசு







### தொங்கட்டான்கள்

கற்கள் பதித்த தொங்கட்டான்கள் அறிமுகமாகியுள்ளன. வடிவமைக்கப்பட்ட பெரிய கற்களைக் கொண்ட தொங்கட்டானாக அணியும் நாகரிகம் உருவாகியுள்ளது. இதனைத் தவிர பலவர்ண நிறங்களிலும், இவ்வாறான காதணிகள் கிடைக்கின்றன. காதுடன் சிறிய தொங்கட்டான்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 200ரூபாவிலிருந்து 550ரூபா வரை விற்பனைசெய்யப்படுகின்றன.

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 500 | 300 | 400 | 400 | 250 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 600 | 400 |
| சுறா | 500 | 700 | 600 | 850 | 800 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 450 | 500 | 600 | – |
| விளை | 650 | 500 | 400 | 600 | 500 | – | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | – | 300 |
| கிளாக்கன் | 800 | 900 | – | – | 600 | – | – |
| ஒரா | 400 | 400 | – | – | 450 | – | – |
| திரளி | 300 | 300 | 200 | 250 | 400 | 100 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | – | 370 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 120 | 100 | 150 |
| ஒட்டி | 300 | 150 | 150 | 250 | 400 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 200 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 350 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 120 | 50 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | – | – |

## கரட் ஐஸ்கிறீம்



### தேவையான பொருள்கள்

பிஸ்தா பருப்பு 8
வனிலா எசன்ஸ் - கால் கரண்டி
கரட் - 4
பால் - 1 கப்
சீனி கால் கப்
மஞ்சள் பொடி அல்லது புட் கலர்- அரைச் சிட்டிகை

கரட்டை தோல் நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி, ஆவியில் வேகவைத்து ஆறியதும் மிக்ஸியில் அரைத்தெடுக்கவும். இந்த விழுதுடன் சீனி சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி (அடிப்பிடிக்காமல்) நன்கு சூடுவந்ததும், அதில் பாலையும் சேர்த்து கலக்கவும். ஆறியதும் வனிலா எசன்ஸ், புட் கலர் சேர்த்து கலக்கி குளிர் சாதனப் பெட்டியில் வைக்கவும். அரை மணி நேரம் கழித்து எடுத்து மிக்ஸி யில் போட்டு, ஒரு சுற்று சுற்றி அதில் ஒன்றிரண்டாகப் பொடித்த பிஸ்தா பருப்பையும் சேர்த்து கப்புகளில் ஊற்றி மீண்டும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து ஐஸ் கிறீம் ஆனதும் எடுத்து பரிமாறலாம்.

### நாளை

சித்திரை-16
வெள்ளிக்கிழமை 29.04.2016
திதி: ஸப்தமி பி.ப.05.07 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப.05.58 வரை
ராகுகாலம்: 10.28-11.58 வரை
[illegible]நேரம்: 05.58-07.28 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கி தெரிவு




முன்னணி நிதித்துறை சஞ்சிகை கொமர்ஷல் வங்கியை 17ஆவது தடவையாகவும் இலங்கையின் தலை சிறந்த வங்கியாகத் தெரிவு செய்துள்ளது. இதன் மூலம் இலங்கையின் வங்கித் துறையில் தனது தலைமைத் துவத்தை வங்கி மீண்டும் உறுதி செய்துள்ளது.

ஆபிரிக்கா, ஆசியா பசுபிக், மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த உலகின் முன்னணி வங்கிகளோடு சேர்த்து வளர்ச்சி கண்டு வரும் 25 வங்கிகளின் பட்டியலை தற்போது வெளியிட்டுள்ளது.

சொத்துக்களின் வளர்ச்சி, இலாபத்தன்மை, மூலோபாய உறவுகள், வாடிக்கையாளர் சேவை, போட்டி விலையிடல், புத்தாக்க உற்பத்திகள் என்பவற்றை உள்ளடக்கியே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக இந்தத் தெரிவின் நம்பகத்தன்மை மற்றும் துல்லியம் என்பவற்றை மேலும் அதிகரிக்கும் வகையில் குளோபல் பினான்ஸ் கூட் டாண்மை வாடிக்கையாளர் மத்தியிலான வாக்கெடுப்பும் நடத்தப்பட்டுள்ளது.

குளோபல் பினான்ஸ் தற்போது நடத்தி முடித்துள்ள இந்த மதிப்பீட்டின் விரிவான விவரங்கள் 2016 மே மாதத்தில் வெளி யிடப்படவுள்ளன. 2016 ஒக்ரோபர் 8ஆம் திகதி வாஷிங்டனில் உள்ள நஷனல் பிரஸ் கிளப்பில் இடம்பெற வுள்ள உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் விருது வழங்கும் விழா இடம்பெறும்.

கொமர்ஷல் வங்கியோடு சேர்ந்து இவ்வாண்டு ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ICIBC (சீனா), ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா (இந்தியா), பாங்க் ரக்கியாத் (இந்தோனே ஷியா), ஸ்ட்டேண்டர்ட் சார்டட் (பாகிஸ்தான்) மேய்பாங்க் (மலேசியா), CTIBC பாங்க் (தாய்வான்), லுசிய ஹனா பாங்க் (தென் கொரியா), ஷியாம் கொமர்ஷல் பாங்க் (தாய்லாந்து) மற்றும் சிற்றி பாங்க் (பங்களாதேஷ்) என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளன. (தி)



# ஷில்ப கணக்கொன்றை ஆரம்பித்து பிள்ளைகளுக்கு இடையறாத கல்வியை வெகுமதியாக்கும் வாய்ப்பு

**வணிகம்**

இலங்கையிலுள்ள பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு இடையறாத கல்வியை அளிப்பதை ஊக்குவிப்ப தன் ஊடாக என்.டி.பி தேசத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு தமது ஆதரவை அளித்து வருகின்றது.

என்.டி.பி ஆனது என்.டி.பி ஷில்ப என்ற பல்துறைத் தீர்வை அளித்ததன் ஊடாக நாட்டிலுள்ள துடிப்புள்ள இளம் சமுதாயத்தினரின் கனவுகளை நனவாக்க பாடுபடுகின்றது. என்.டி.பி ஷில்ப வெறுமனே வழமையானதொரு சிறுவர் சேமிப்புக் கணக்கு அல்ல. மாறாக ஒரு முழுமையாக நிதி முன்மொழிவாக விளங்கி, பிள்ளைகளின் இளமைக்காலம் முழுவதும் அவர்களின் கல்விக்குத் தேவையான ஆதரவை அளிப்பதுடன், அவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தையும் ஊக்கு விக்கின்றது.

என்.டி.பி. ஷில்ப குழந்தைப்பருவம் முதல் இளமைப் பருவம் வரை பிள்ளைகளுடன் பங்காளர்களாக விளங்கி, அவர்களின் ஒவ்வொரு படிநிலையிலும், கற்றல் செயற்பாடுகளில் உறுதுணையாக நிற்கிறது. இதற்கமைவாக என்.டி.பி. ஷில்ப மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. என்.டி.பி சிசு, என்.டி.பி. சிறுவர் மற்றும் என்.டி.பி பராய மடைந்தோர். இந்த கணக்குகள் யாவும் பிள்ளைகள் மற்றும் பெற்றோருடன் ஒன்றிணைந்து செயற்பட்டு அவர்களின் கனவுகளை நிஜமாக்க பாடுபடும். நாட்டின் பல்வேறு இல்லங்களுக்குச் சென்றுள்ள என்.டி.பி. ஷில்ப, தமது பிள்ளைகளுக்கு கல்வியளிக்க வேண்டும் என்ற வேட்கையை கொண்டுள்ள பெற்றோரின் இலக்கு களுக்கு கைகொடுக்கிறது. என்.டி.பி ஷில்ப பிள்ளைகள் கல்வியில் உயர்வை அடைவதற்கான ஊக்கு விப்பை அளிப்பதுடன், அரச பரீட்சை களில் சித்தியடையும் மாணவர்களுக்குபண வெகுமதிகளையும் வழங்குகின்றது 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெற்றோர் மற்றும் மாணவர்களால் மிகுந்த கடினமானதொன்றென நோக்கப்படுகின்றது. இந்த பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் வெற்றியானது, நாட்டின் மதிப்பு மிக்க தேசிய பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான அனுமதியை அளிக்கும் என்ற காரணத்தினால், இந்த பரீட்சை மிகுந்த போட்டி நிறைந்ததாக மாணவர்கள் மத்தியில் கருதப்படுகின்றது. (தி)

# உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாடு இலங்கையில்

உலகளாவிய ரீதியில் நடைபெறும் 16 ஆவது உலக ஏற்றுமதி அபிவிருத்தி மாநாட்டை இம்முறை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண் டபத்தில் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் சர்வதேச வர்த்தக மையம் என்பன இணைந்து வெற்றிக்கான வர்த்தகம், இணைப்பு, போட்டி, மாற்றம் என்ற தலைப்பின் கீழ் இம் மாநாட்டை நடத்த உத்தேசித்துள்ளனர்.

சர்வதேச வர்த்தகம் தொடர்பில் இந்த நாட்டில் காணப்படும் திறந்த தன்மையையும் அதற்காக காணப்படும் உகந்த சூழலையும் ஏற்படுத்திக்கொள்வதற்கு இம் மாநாடு வழிவகுக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (தி)

## நுட்பம்



### பார்வை இழந்தோருக்கு உதவும் புதிய சாதனம்

கண் பார்வை இழந்தவர்கள், சுயமாக நடக்க உதவி செய்யும் சாதனமொன்றை இந்தியாவைச் சேர்ந்த பொறியியல் மாணவர் அபினவ் வர்மா, என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

இவர் கண் பார்வை இல்லாத மாற்று திறனாளிகள் எவருடைய துணையும் இல்லாமல் அனைத்து வேலைகளையும் இயல்பாக செய்ய நேரடி ப்ரெய்லி என பெயரிடப்பட்டுள்ள சாதனத்தை உருவாக்கியுள்ளார். இந்த நேரடி ப்ரெய்லி சாதனத்தை கண் பார்வை இல்லாதவர்கள், அணிந்து கொண்டு, உலகை புதிய முறையில் காண, நடக்க, படி யில் ஏறி, இறங்க என தங்களின் அனைத்து வேலைகளையும் தாங்களாகவே பூர்த்தி செய்து கொள்ளலாம். இந்தச் சாதனத்தை அணிந்திருப்பவர்கள், திசை, வேகம், பொருளின் வகை, அல்லது மனிதர்கள் இருப்பதை 4 மீற்றர் தொலைவுக்குள் உணந்து கொள்ளும், அதிர்வு அலைகளை அனுப்பி அதன்மூலமாக உணரும் வகையில் இச்சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக கண் பார்வை இல்லாதவர்கள் இனி நடக்க குச்சிகளை உபயோகிக்க தேவை இல்லை என்று கூறப்பட்டுள்ளது.



### சிங்கப்பூரை அலங்கரிக்க தயாராகும் தானியங்கிக் கார்

பிந்திய தொழில்நுட்பத்தில் தானியங்கிக் கார்கள் முக்கிய இடத்தைப் பிடித்து வருகின்றன. இவ்வகைக் கார்களை சில நிறுவனங்கள் சோதனைப் பயணத்தில் ஈடுபடுத்தி வருகின்றமை தொடர்பான செய்திகள் கடந்த காலங்களில் அறிந்திருப்பீர்கள்.

குறித்த நிறுவனங்களுக்கு சவால் விடும் வகையில் டிரைவர்லெஸ் பொட்ஸ் எனும் தானியங்கிக் கார்கள் சிங்கப்பூரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. முற்றிலும் மின்சக்தியில் இயங்கவுள்ள இக் கார்கள் இவ்வருட இறுதிக்குள் சிங்கப்பூர் வீதிகளை அலங்கரிக்கவுள்ளன. ஆரம்பக் கட்டமாக வரையறுக்கப்பட்ட எல்லை அல்லது கல்வி நிறுவனங்களுக்கு இடை யிலான போக்குவரத்துக்கு மட்டுமே பயன் படுத்தப்படவுள்ளது.

தானியங்கிக் கதவுகளையும் கொண்டு சிறிய அளவில் காணப்படும் இக் காரானது குறுகிய அகலம் கொண்ட பாதைகளிலும் பயணிக்கக் கூடியது. தற்போது 4 வரையான பயணிகளை மட்டுமே சுமந்து செல்லக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் அடுத்த கட்டமாக 24 பயணிகளைச் சுமந்து செல்லக் கூடியவாறு தானியங்கிக் கார்கள் வடிவமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தலைமன்னாரில்

காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில், குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
26 கிலோ 400 கிராம் எடை கொண்ட 'ஹன்ஸ்' போதைப் பொருளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட குறித்த போதைப் பொருள் தற்போது தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து கடல் வழியாக எடுத்துவரப்பட்ட குறித்த போதைப்பொருள் மக்கள் மத்தியில் விற்பனை செய்யும் முகமாக மறைத்து வைக் கப்பட்டிருந்ததாக பொலிஸார் குறிப்பிட் டனர்.
இந்த போதைப்பொருள்கள் மீட்கப் பட்டுள்ள போதும், இதுவரை எவரும் கைது செய்யப் படவில்லை எனத் தலைமன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
(த-வ-4-56)

## திடீர்க்

கொழும்பில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரை யாடியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
வடக்கு-கிழக்கில் முன்னாள் போராளிகள் கைது செய்யப்படுவதால், தமிழ் மக்கள் மிகுந்த அச்சத்துடன் இருக்கின்றனர். இது தொடர்பாக எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஊடக ஆசிரியர் களால் கேள்வி எழுப்பப்பட்டது.
இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, பொதுமக்கள் அச்சப்படும் சம்பவங்கள் தொடர்பிலும், திடீர்க் கைதுகள் தொடர்பிலும் நான் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தேவை யான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்று உறுதியளித்துள்ளார்.
(த-வ-5)

## நாட்டைத்

பாதிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கோ, அரசு யாருக்கும் ஒருபோதும் இடமளிக்காது.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.
கொழும்பில் நேற்றுக் காலை ஊடக நிறுவனங்களின் ஆசிரியர் களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.
இதன்போது ஜனாதிபதி கருத்து வெளியிடுகையில், அரசியல் சுயநலம் மிக்க சிலர் புதிய அரசை அமைப்பது தொடர்பாக பேசி வருகின்றனர். ஆனாலும் அரசை மாற்று வதற்குக் குறைந்த பட்சம் அவர்களால் நாடாளுமன் றத்தில் ஏனைய கட்சி களின் ஆதரவுடன் பெரும்பான் மையைக் கூடப் பெற முடியாத யதார்த்தமான நிலைமையே காணப்படுகின்றது. ஆட்சியமைப்பது அவர்களுடைய பகல் கனவே.
விரைவில் அரசை மாற்றப் போகின்றோம் என்று கூறுபவர்களுடைய உள் நோக்கமானது, அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் லஞ்ச, ஊழல் மோசடிகள் மற் றும் ஏனைய குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளைச் செய்து வரும் அதிகாரிகள் மற்றும் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் துறை களிலுள்ள அதிகாரிகள் ஆகியோரை அச்சுறுத்துவ தற்காகவே.
ஊழல் மற்றும் மோசடிகள் ஆகியவற்றை மேற் கொண்டவர்களைத் தண்டிக்கும் அதேவேளை, எதிர் காலத்தில் ஊழல் மோச டிகள் ஏற் படாமல் இருப்பதற்கான உகந்த சமூக அரசியல் முறைமைகள், சட்டங்கள் மற்றும் அரசியல் சாசனங்களை உருவாக்குவதன் ஊடாக நாட்டில் ஊழல் மற்றும் மோசடிகள் ஆகியவற்றை இல்லாமல் செய்வதே முக்கியம்.
முன்மாதிரியான ஜனநாயகத்தோடு கூடிய நீதியான அரசினை மக்கள் எதிர் பார்த்தமையே ஆட்சி மாற்றத்துக்கு காரணம். மக்கள் விரைவான முடிவுகளை எதிர் பார்க்கின்றனர். ஆனால் அரசின் நடவடிக்கைகளானது மிகவும் கரடுமுரடான பாதையூடான பயணம்போல மெதுவாகவே அமைந்திருக்கின்றது. எப்படியிருந்தபோதிலும் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுதற்கு நான் உறுதியோடு இருக்கின்றேன்.
ஜெனிவா மனித உரிமைகள் சபையின் தீர் மானத்துக்கு அமைவாக, போர்க் குற்ற விசாரணைகள் நடத்துவதற்குரிய கலந்துரை யாடல்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறான கலந்துரையாடல் நேற்று (நேற்றுமுன்தினம்) செவ்வாய்க்கிழமையும் இடம்பெற் றன - என்றார்.
இதேவேளை வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ள சமஷ்டி முறை அதிகாரப் பகிர்வு பிரேரணை தொடர்பாக எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, எவரும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றலாம். ஆனால் இலங்கையினை துண்டாடுவதற்கோ - இரண்டாகப் பிளவுபடுத்துவதற்கோ - தேசத்தின் இறையாண்மையைப் பாதிக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கோ அரசு ஒருபோதும் இடமளிக்காது என்றும் குறிப்பிட்டார்.
(த-வ-5)

## ரணில்

பட்டு வருகின்ற நிலையிலேயே, இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,
பரவிப்பாஞ்சான் பகுதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சென்றமை குறித்து எழுந்துள்ள சர்ச்சை மற்றும் மீள்குடியேற்றப் பிரச்சினைகள் பற்றி இந்தச் சந்திப்பின் போது பேசப்பட்டது.
அந்தக்காணிகள் மக்களுக்குச் சொந்தமானவை. அவர்களின் வீடுகளும் காணப்படுகின்றன. எனவே, எஞ்சியுள்ள 54 குடும் பங்களை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக் குமாறு எதிர்க்கட்சித் தலைவர் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார்.
இதையடுத்து பரவிப்பாஞ்சான் பகுதியிலுள்ள நிலம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக முழுமையானதொரு அறிக்கையை பிரதமர் இராணுவத்தினரிடம் கோரியுள்ளார்.
இதுவே இந்தச் சந்திப்பில் இடம்பெற்றது- என்றார்.
(த-வ-5)

## மக்களின்

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை, இராணுவத் தேவைக்காக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. சுவீகரிப்புக்கு முன்னோடியாக காணி களை அளவீடு செய்வதற்கு நில அளவைத் திணைக்களத்தினர் நேற்றையதினம் அந்தப் பகுதிக்கு வருகை தருவதாகக் காணி உரிமையாளர்களுக்கு அறிவித்திருந்தனர்.
இதனையடுத்து காணிகளின் உரிமையாளர்கள், அரசியல் தலைவர்கள் இணைந்து நிலஅளவைத் திணைக்களத்தினர், காணி களை அளவீடு செய்ய எடுத்த முயற்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்தினர்.
மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து சம் பவ இடத்துக்கு வருகை தந்த புதுக்கு டியிருப் புப் பிரதேச செயலாளர் பிரணவ நாதன், அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு இந்த விடயம் தொடர்பில், எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுப்பதாகத் தெரி வித்துள்ளார் - என்றார். இதனையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.
(த-5-21-ரி7)

## வடமராட்சி


பளைப் பொலிஸார், அவை தொடர்பில் குறித்த பொலிஸ் குழுவால் அறிவிக்கப் பட்டதாகவும் தெரிவித்தனர்.
வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த இருவரும் ஆழியவளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக, தமக்கு திருகோணமலையில் இருந்து தகவல் வழங்கப் பட்டதாகப் பளைப் பொலிஸார் குறிப் பிட்டனர்.
வடமராட்சி கட்டைக்காடு, முள்ளியான் பகுதியைச் சேர்ந்த ஜோர்ஜ் இராஜநாயகம் (வயது - 42) மற்றும் வீ.மைக்கல் (வயது - 45) ஆகிய இருவரும் நேற்று வாகனமொன்றில் வந்த பொலிஸாரால் கட்டைக்காடு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.
இதேவேளை, நேற்று நண்பகல் ஆழியவளைப் பகுதியில் வைத்தும் ஒருவர் கைது செய்யப்பட்டார். எனினும் குறித்த பொலிஸார் குற்றப்புலனாய்வுப் பிரிவினரா அல்லது பயங்கரவாத விசாரணைப் பிரிவினரா என்பதை உறுதிப் படுத்த முடியவில்லை.
(த-வ-4-109)

## மரண அறிவித்தல்

### முருகேசு சிவராசா

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)

தோற்றம்
04 . 01 . 1941



மறைவு
25 . 04 . 2016

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு - சிவராசா (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்) 25.04.2016 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான நடராசா, பொன்னுத்துரை, தேவராசா மற்றும் இரத்தினராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவச்செல்வன் (வைத்தியர்-கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலை - நிலாவெளி) சிவகரன் (ஜேர்மனி), சிவதர்சினி (ஆசிரியர் - யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை), சிவமாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், துஷிதா (வைத்தியர் - தள ஆயுள்வேத வைத்தியசாலை - திருகோணமலை), கலாமதி (ஜேர்மனி), காண்டீபன் (ஆசிரியர் -யா/வட்டு மத்திய கல்லூரி), ஜெயபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், அபிநஜா, ஆராதனா, அகரன், ஆதிரன், வர்ஷா, ஆர்த்திகா, அக்சயன், வருணவி, வைஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒருமணியளவில் திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(ஜெ.758) (13.18)

## மரண அறிவித்தல்கள்

### நாகநாதர் செல்வராஜா

நேற்றைய உதயன் பத்திரிகையில் 29 ஆம் பக்கம் வெளிவந்த மேற்படி மரண அறிவித்தலில் Pros சுபதினி (யாழ் பல்கலைக்கழகம்) என்பதனை Prof சுபதினி (யாழ்பல்கலைக் கழகம்)என திருத்தி வாசிப்பதுடன்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இல. 160, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

### A.V. அருணகிரிநாதன்

(சிரேஸ்ட சட்டத்தரணி, பதில் நீதிவான் - வவுனியா)



யாழ்ப்பாணம் அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் தாவடியில் வசித்தவரும் தற்போது வவுனியா தோணிக்கல்லை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அம்பலவாணர் வேலுப்பிள்ளை அருணகிரிநாதன் 2016.04.26 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் கெசலட்சுமியின் அன்புக் கணவரும் திலீபன்(இலங்கை வங்கி - காங்கேசன் துறை ), திலீப்குமார் (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), திலீப்காந்தன் (இலங்கை சட்டக்கல்லூரி), அச்சுதன்.அனந்தன் (பேராதனை பல்கலைக்கழகம்), ஆரணி (யாழ்ப்பாணம் - உயர் தொழில் நுட்பக்கல்லூரி), அனந்த கோமகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கார்த்திகா(ஆசிரியர் - திருக்கேதீச்சரம் கௌரி அம்பாள் வித்தியாலயம்) அவர்களின் மாமனாரும் சுகத்தியின் அன்புப் பேரனும் மகாதேவி(அராலி) காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் கனகலிங்கம் (பொறியலாளர்), சிதம்பரநாதன்(ஓய்வு பெற்ற முகாமையாளர் சங்கானை ப.நோ.கூ. சங்கம்), குமரகுரு (ஓய்வு பெற்ற பிரதி அதிபர்), சிவசுந்தரம்(ஓய்வு நிலை அதிபர்), சிவனருள் தேவி(ஓய்வு நிலை உப அதிபர்-D.S சேனநாயக்க கல்லூரி, கொழும்பு), குகராஜா(கணக்காளர்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் தனலட்சுமி(லண்டன்), மகாலக்சுமி(தாவடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியா குட்செட் வீதி, முதலாம் ஒழுங்கையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (28.04.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைக ளுக்காக வவுனியா தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் ஒழுங்கை,
குட்செட் வீதி, வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

077 691 7523, 077 236 3516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### ஜெயசோதி பரமேஸ்வரி

தோற்றம்: 28.03.1947 மறைவு: 27.04.2016

சுஜீவா வைத்தியசாலையின் உரிமையாளர் Dr.ஜெ.ஜெயல னின் தாயார் ஜெயசோதி பரமேஸ்வரி நேற்று (27.04.2016) புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/20911) (10,17)
தகவல்
Dr.ஜெ.ஜெயலன்

## வடக்கு – கிழக்கில்

கடந்த சில தினங்களாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் தளபதிகள் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக் கிழமை அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதி ராம், இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டிருந்தார். பின்னர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார் என அறிவிக்கப்பட்டது.

இதன் பின்னர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சாள்ஸ் அன் ரனி படைப் பிரிவைச் சேர்ந்த நகுலன் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுப் பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் திருகோணமலை மாவட்ட புலனாய்வுத் துறைப் பொறுப்பாளராக இருந்த கலையரசன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அவரது வீட்டுக்குச் சென்று கைது செய்திருந்தனர்.

இவ்வாறான நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட உறுப்பினர் எஸ்.சிவகரன் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு, அவரது அச்சகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இதன்போது அவர் கைது செய்யப்பட்டமைக்கான ஆவணம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொடர் கைதுகள் இடம்பெறுகின்றபோதும், அவர்கள் என்ன காரணத்துக்காகக் கைது செய்யப்படுகின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்படவில்லை.


இதேவேளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து, கைதான வர்களின் உறவினர் கள் 6 பேர் முறைப்பாடு செய்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து ஒருவரும், சாவகச்சேரி யைச் சேர்ந்த இருவரும், கல்வியங்காட்டைச் சேர்ந்த ஒருவரும், மானிப்பாயைச் சேர்ந்த ஒருவரும், நீர்வேலியைச் சேர்ந்த ஒருவருமாக 6 பேர் கைது செய்யப்பட்டதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி மறவன்புலோவில் தற்கொலை அங்கி மீட்கப்பட்ட பின்னர் இது வரை 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

## கண்ணீர் அஞ்சலி



வடக்கு கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது பிரதம செயலாளரும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும் வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசகராகவும் கடமையாற்றிய

### உயர்திரு சொர்ணலிங்கம் கணேசநாதன்

ஆஸ்திரேலியாவில் காலமானதை அறிந்து நாங்களும் துயர் கொள்கின்றோம்.

அன்னார் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் நலனுக்காக வாழ்நாள் முழுமையும் அனுசரணையாளராகவும் ஆலோசகராகவும் சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் அனைவருடனும் எமது துயரத்தைப் பகிர்ந்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ் விழிப்புலனற்றோர் சங்க செயற்குழு
உறுப்பினர்களும் அங்கத்தவர்களும்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 30.03.2016 சிவபத மடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர்
### திருமதி கந்தவனம் வள்ளிநாச்சி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.04.2016) வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில இடம் பெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

மாவடி வளவு, நவிண்டில்,
கரணவாய் வடக்கு.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் கிருஷ்ணலிங்கம்



பெரியாவுடை, கொல்லங் கலட்டியை பிறப்பிடமாகவும் கிளானையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கிருஷ்ண லிங்கம் நேற்று (27.04.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினம் காலஞ்சென்ற ஈச்சம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் (உடுவில் பிரதேச செயலகம்) அன்புக் கணவரும் சிவானுஜன், மதுமிதன் (மகாஜனக் கல்லூரி) ஆகியோரது அன்புத் தந்தையும் கணேசலிங்கம், யோகாம்பிகை, ஞானாம் பிகை, தவலிங்கம்,குணலிங்கம் காலஞ்சென்றவர்க ளான இராசலிங்கம், பஞ்சலிங்கம் ஆகியோரின் சகோதரரும் கனகேஸ்வரி, சர்வேஸ்வரி, பிரகலாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2016) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கொல்லங்கலட் டியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியாவுடை,
கொல்லங்கலட்டி.
தகவல்
குடும்பத்தினர்.
077 7497 989

## எதிர்க்கட்சித்


கடந்த 16 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட குழுவினர், பரவிப்பாஞ்சானில் உள்ள கஜபா படைப்பிரிவின் தலைமையக இராணுவ முகாமுக்குள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளனர் எனவும், இதைத் தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் கவனவீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது நாட்டில் தமிழ் மக்கள் எந்த இடையூறுகளும் இன்றி நிம்மதியாக வாழுகின்றார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும், தமிழ் மக்களுக்கு இது வரை எந்த சுதந்திரமும் கிடைக்கவில்லை எனவும் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் போலிப் பரப்புரைகளை மேற்கொள்வதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் சரத் மனமேந்திர, பத்தரமுல் சீலரத்தின தேரர் உட்பட ஏழு கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5)

எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய
தந்தை
### அமரர் டாக்டர் கந்தப்பு நடராசா
அவர்களின்
## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம் மகிழ்ந்திட 08.01.1929
விண்ணகம் நெகிழ்ந்திட 28.04.2014

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறாது எம்துயரம்

நொந்தார்க்கு நோய் தீர்க்கும்
மாண்பினராய் அவதரித்து
இன்புற்றே இவ்வுலகில்
இணையில்லா வாழ்வு வாழ்ந்து
உயிருக்கு உயிராய் இருந்து
எம்மைக் காத்த எமது அப்பாவே
ஆறவில்லை எங்கள் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
"துவாரகா",
மூளாய்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(J 777)(10.17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 30.03.2016 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்துரை தங்கராசா

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (29.04.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.[illegible], திருமகள்வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(C/20908)(10.17)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரும்

ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் மன்னார் மாவட்டத்தில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட சி.சிவகரன் நேற்று மதியம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளோம். இந்தக் கைது மாத்திரமல்லாமல் கடந்த சில தினங்களில் பல கைதுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் பல உத்தியோகபூர்வக் கைதுகளாக இடம்பெறவில்லை. கடத்தப்பட்டுப் பின்னர் கைதுகளாக மாற்றப்பட்டுள்ளன. இது மிகவும் பாரதூரமான விடயம். இந்தக் கைது உட்பட முறைகேடான கைது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தனது வன்மையான கண்டனத்தைத்தெரிவித்துக் கொள்கின்றது. அத்துடன் உரிய தரப்பினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுள்ளது. (த-வ-5)


## மரண அறிவித்தல்

### சுப்பையா பத்மநாதன்

(ஓய்வுபெற்ற சீமெந்து தொழிற்சாலை ஊழியர்)



சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பத்மநாதன் 27.04.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- பாக்கியம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இந்திராவின் அன்புக் கணவரும், தர்ஷிகா (Bancassurance Assistant Commercial Bank, Chunnakam), லக்ஷிகா (Alliance Finance Company PLC-Staff) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற றதனின் அன்பு மாமனும், நிகாஷின் அன்பு பேரனும், கனகசபையின் (சுதுமலை) அன்புச் சகோதரனும், இராசலட்சுமியின் மைத்துனரும், காலஞ்சென்ற ஶ்ரீதரன் மற்றும் மனோகரன் (மன்னார்), தயாபரன் (நோர்வே), ரவீந்திரன் (சயன் உணவக உரிமையாளர்-மல்லாகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வசந்தகுமாரி (லண்டன்), யோகேஸ்வரி, புஸ்பராணி, அருட்செல்வி ஆகியோரின் பாசமிகு மச்சானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2016) வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மேற்கு, ஏழாலை.
021 224 2978

தகவல்
குடும்பத்தினர்.

(J/78) (10,17)

## மரண அறிவித்தல்



### ஏரப்பன் செட்டியார் பஞ்சாட்சரம்

தமிழகம் விருதுநகரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரப்பன் செட்டியார் பஞ்சாட்சரம் நேற்று (27.04.2016) புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரப்பன் செட்டியார் - ஏரம்மாள் தம்பதியரின் அன்பு மகனும், வீரம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாலுசாமி செட்டியார், சின்னப்பன் செட்டியார் மற்றும் மாரியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான அழகிரி செட்டியார்-மாரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பூலோகராஜா (கனடா), நாகராஜா (கொழும்பு) யோகராஜா (பிரான்ஸ்) உஷா தேவி (இந்தியா) ரவிகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனா, காலஞ்சென்ற புஸ்பராணி, திலகவதி, A.பால சுப்பிரமணியம், உமா ஆகியோரின் அன்பு மாமனும், பட்டன் (கனடா) காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஏரம்மாள், ஜானகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஸ்தூரி, கார்த்திக், சபீஸ், மனோஜ், அரவிந்தன், பிருந்தா, ரித்திகா, சுஜிகலா-ராஜா, வெங்கடேசன், துஸ்யந்தன், ரஜீவன், ரதுஷன், ரக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் துஷாரா, தர்ஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2016) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் அவரது தமிழகம் சோழவந்தான் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

106/7,
விவேகானந்தா மேடு,
கொழும்பு-13.

தகவல்: (மகன்)
நாகராஜா
0091995 2581504

(J/769) (10,17)

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை விஜயரட்ணம்



பிறப்பு 1946.10.14 — இறப்பு 2016.04.27

சிவன் கோயிலடி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் புளியந்தோட்டம் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை விஜயரட்ணம் நேற்று (27.04. 2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தமோதரம் பிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-நல்லம்மா தம்பதிகளின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் சுதர்ஜினி (சுவிஸ்), தர்ஜினி ஆகியோரது அன்புத் தந்தையும் ஜெயசீலன் (சுவிஸ்), சிறிஜெயந்தன், சுஜந்தினி ஆகியோரின் மாமனாரும் ஈழவர், ஈழநிலா ஈழப்பிரியா (சுவிஸ்), அபிநயா, சர்மி, ஹரிகரன், ஹர்னி, சுதர்னி ஆகியோரின் பாசமிகு பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04. 2016) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னா ரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புளியந்தோட்டம்,
மல்லாகம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### வயிரமுத்து திருத்தணிகாசலம்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர்)

நாகர் கோவிலைப் பிறப்பிடமாகவும் எழுதுமட்டுவாழ் தெற்கை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட வயிரமுத்து திருத்தணிகாசலம் 26.04.2016 செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரமுத்து (கூளைப் பரியாரியார்) கற்பகம் தம்பதியரின் ஏகப்புத்திரனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் தங்கரத்தினம் தம்பதியரின் மருமகனும், பராசக்தியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் மற்றும் மகேஸ்வரி (கனடா) காலஞ்சென்ற சிறீராமச்சந்திரன் மற்றும் சந்தானலட்சுமி காலஞ்சென்ற சிறீறங்கநாதபிள்ளை மற்றும் சிறீறஞ்சன் (சுவீடன்) சிறீறஞ்சனா (லண்டன்) சிறீதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் பிரதீஸின் ஆசை அப்பாவும் நவரத்தின வேலுவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தரவை-இராமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகர்கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ்.
தொடர்பு: 0778733807
0775399811

தகவல்:
பராசக்தி-மனைவி
பிரதீஸ்-மகன் மற்றும்
குடும்பத்தினர்.

(C/20912) (10,17)

## மரண அறிவித்தல்

திருமதி

### அலர்மேல்மங்கை கந்தசாமி

பிறப்பு 22 . 02 . 1956



இறப்பு 26 . 04 . 2016

வேலணை 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி அலர்மேல்மங்கை கந்தசாமி 26.04.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம்- நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் துரைராசா, தணிகாசலம் (நெதர்லாந்து), பாலச்சந்திரன் காலஞ்சென்ற மகேந்திரன், கமலாதேவி, தவராசா (ஜேர்மன்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், யோகராசா மற்றும் வன்னியசிங்கம், யோகேஸ்வரன், புஸ்பராணி, தருமராசா, சந்திரலோகன் ஆகியோரின் மைத்துனியும் கமலதாஸ், விஜயதாஸ் (சாரதி திட்டமிடல் செயலகம் வடமாகாணம்), உதயதாஸ், மோகனதாஸ் (லண்டன்), ஜீவனா, பிலோமினா, தனுஷா(வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மேரி சிலோஜினா, தயாழினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிருத்திகன், கியோனா, திவானி, பவிஷாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.04.2016) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தாழயங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள் ளவும்.

வேலணை கிழக்கு,
4ஆம் வட்டாரம் துறையூர்.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

கரணவாய், ஏப். 28

**இமையாணன் மத்தியின் தொடர்**

வடமராட்சி கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கரவை நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வலிகாமம் நாமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**கலையொளி வி.க. தொடர்**

கலையொளி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கலையொளி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கச்சாய் வொலிகிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி 'பி' அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி பி அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி 'பி' அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.க. தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் வலிகாம கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)





# சுவான்சீயை இலகுவாக வீழ்த்தி லெய்செஸ்டர் சிற்றி முதலிடம்


இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையே இடம்பெற்றுவரும் பிறீமியர் லீக் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் லெய்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றுள்ளது.

லெய்செஸ்டர் சிற்றி, சுவான்சீ அணி களுக்கிடையிலான இந்த ஆட் டத்தில் 4:0 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றிருந்தது. லெய்செஸ்டர் சிற்றி யின் நட்சத்திர வீரர் ஜேமி வர்டி பங்கேற்றிருக்காத நிலையில் அவருக்குப் பதிலாகக் களமிறங்கிய லியனார்டோ உல்லோவா இரண்டு கோல்களையும் றியாட் மஹ்ரேஸ், மார்க் அல்பிரைட்டன் இருவரும் தலா ஓர் கோலையும் பதிவு செய்தனர். இந்த வெற்றியுடன் 76 புள்ளிகளைப் பெற்று பிறீமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் முதலிடத்தில் நீடிக்கும்.லெய்செஸ்டர் சிற்றி, தனக்கும் இரண்டாமிடத்திலுள்ள டொட்டேன்ஹாம் அணிக்கும் இடையிலான புள்ளிகள் வித்தியாசத்தை மீண்டும் எட்டாக அதிகரித்துக் கொண்டது. (ம)

## சொந்த மண்ணிலேயே தடை தென்னாபிரிக்காவுக்கு சிக்கல்

கிரிக்கெட் நிர்வாகத்தில் மாற்றங்களைச் செய்ய தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை மறுத்து வரும் நிலையில் சொந்த மண்ணில் தொடர்களை நடத்த தென்னாபிரிக்க அரசு தடை விதித்துள்ளது. தென்னாபிரிக்காவில் கறுப்பர், வெள்ளையர் இனச் சர்ச்சை நீண்டகாலமாக உள்ளது. கறுப்பர் இனத்தவருக்கு, அணியில் தடை விதித்ததால் 1970இல் சர்வதேச கிரிக்கெட் சபை தென்னாபிரிக்க அணிக்குத் தடைவிதித்தது. பின்னர் இதில் மாற்றம் கொண்டு வரப்பட்ட நிலையில் 1991இல் தடை விலக்கிக் கொள்ளப்பட்டு தென் ஆபிரிக்க அணிக்கு அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கறுப்பின வீரர்களுக்கு 9 சதவீத இடம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்று தென்னாபிரிக்க அரசு தெரிவித்துள்ளது. இதை ஏற்றுக்கொள்ளாத ரக்பி, கிரிக்கெட், அணிகளுக்கு அரசு தடை விதித்துள்ளது. இந்த நிர்வாகங்கள் சொந்த மண்ணில் தொடர்களை நடத்த முடியாது. ஆனால் மாற்றம் ஏற்பட்டால் மறுதினமே அனுமதி வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது. (ம)



தொழில்முறை கால்பந்தாட்ட வீரர்களின் கூட்டமைப்பின் 2015ஆம் ஆண்டுக்கான 'சிறந்த வீரர்' விருதை இங்கிலாந்து பிறிமியர் லீக் புள்ளிகள் தரவரிசையில் முன்னிலை வகிக்கும் லெய்செஸ்டர் சிற்றியின் முன்கள வீரரான றியாட் மஹ்ரேஸ் வென்றுள்ளார். (ம)

## தலைமைத்துவப் பண்பை டோனியிடமே கற்றேன் - ரெய்னா

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் புதுமுக அணியான குஜராத் லயன்ஸ் சிறப்பாக விளையாடி வருகிறது. அந்த அணியின் தலைவரான ரெய்னாவின் செயற்பாடு அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்துள்ளது. இந்த நிலையில் தனது தலைமைத்துவத்துக்குக் காரணம் டோனிதான் என்று புகழாரம் சூட்டியுள்ளார் ரெய்னா.

தலைமைத்துவம் தொடர்பாக ரெய்னா தெரிவிக்கையில்:- டோனியிடம் நான் நீண்ட காலமாக நெருங்கிப் பழகி வருகிறேன். தலைமைத்துவத்தில் எப்படி செயற்பட வேண்டும் என்பதைப் பற்றி அவரிடம் இருந்து ஏராளமான பாடம் கற்றேன். நெருக்கடியான நேரத்தில் அணியை எப்படிக் கொண்டு செல்வது என்பது உட்பட பல்வேறு விடயங்களை கற்றேன். பவுண்டரிகளைக் கண்டு பதட்டப்படும் தலைவரல்ல அவர். இவையே என்னை ஓர் தலைவராக உருவாக்க உதவியது. டோனி மட்டுமல்லாமல், சென்னை அணியின் பயிற்சியாளர் பிளெமிங்கிடம் இருந்தும் அதிகம் கற்றேன் - என்றார். (ம)




# சாமுவேல்ஸ் நடந்த விதம் சரியில்லை —ரசல்



ரி-20 உலகக்கிண்ணத்தை வென்ற பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில், சாமுவேல்ஸ் நடந்துகொண்ட விதம் சரியில்லை என்று தெரிவித்துள்ளார் சக வீரரான ரசல்.

மேற்கிந்தியத் தீவுகள் ரி-20 உலகக்கிண்ணம் வெல்ல பிரதானமான காரணமாக இருந்த சாமுவேல்ஸ், குறித்த ஆட்டத்தின் பின்னரான செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட வேளையில், தனது கால்களை தூக்கி மேசை ஒன்றின் மீது போட்டுக் கொண்டு ஊடகவியலாளரின் கேள்விகளுக்குப் பதிலளித்தார். இது பெரும் சர்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் இந்த நடவடிக்கை தவறு என்று தெரிவித்துள்ளார் ரசல். அவர் மேலும் தெரிவிக்கையில் - சாமுவேல்ஸ் வித்தியாசமானவர். அவர் தன்னம்பிக்கை மிக்கவர். நாங்கள் இரண்டு முறை ரி-20 உலகக் கிண்ணம் வெல்ல அவர் முக்கிய காரணமாக இருந்துள்ளார். சாமுவேல்ஸ் தனது கால்களை மேசை மீது தூக்கிப் போட்டப்படி கேள்விகளுக்கு பதில் அளித்ததாக கேள்விப்பட்டேன். அதை எப்படி விளக்குவது என்று தெரியவில்லை. ஆனால் அது சரியில்லை - என்றார். (ம)

## றோயல், விண்மீன் அணிகள் நாமகளின் தொடரில் வென்றன

யாழ்ப்பாணம், ஏப். 28

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் றோயல், விண்மீன் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

நாமகள் வி.கழக மைதானத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழ றோயல் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம் பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் விண்மீன் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனே தொடர்ந்து சாதிக்கும் தலைவர் டோனி நம்பிக்கை

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில், புனே அணி தனது தொடர்ச்சியான தோல்விகளில் இருந்து மீண் டெழுந்து சாதிக்கும் என்ற நம்பிக்கை உள்ளதாகத் தெரிவித்துள்ளார் அந்த அணியின் தலைவரான டோனி. ஹைதராபாத் அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். மேலும் தெரிவிக்கையில்; இந்த வெற்றி மிகவும் முக்கியமானது. 4 புள்ளிகளுடன் சில அணிகளே இருக்கின்றன. தற்பொழுது அந்த அணிகளுடன் இணைந்துள்ளமை மகிழ்ச்சி. ஆடுகளம் பந்துவீச்சுக்கு ஏற்ற வகையில் இருந்தது. இதை பயன்படுத்தி எங்களது பந்துவீச்சாளர்கள் சிறப்பாக வீசினார்கள். அனைத்து பந்து வீச்சாளர்களும் நேர்த்தியுடன் வீசினார்கள். அஸ்வினின் பந்துவீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. எங்களது களத்தடுப்பும் நன்றாக அமைந்தது. இன்னும் நிறைய ஆட்டங்கள் மீதமுள்ளன. எம்மால் மீண்டெழுந்து சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. பீற்றர்சனுக்குப் பதிலாக கவாயா அணியில் இணையவுள்ளார் – என்றார். (ம)





# நிகழ்கால ரிச்சட்ஸ் விராட் கோக்லியே

## – ரவி சாஸ்திரி

விராட் கோக்லியின் மனநிலை, விவ் ரிச்சட்ஸின் மனநிலைக்குச் சமமானது என்று புகழாரம் சூட்டியுள்ளார் இந்திய அணியின் இயக்குநரான ரவி சாஸ்திரி.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே ரவி சாஸ்திரி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் குறிப்பிடுகையில்; நான் கோக்லி போன்ற வீரரரை என் வாழ்நாளில் கண்டதில்லை. பந்துவீச்சாளர்களின் ஆக்ரோசத்தன்மை குறித்து அவர் அலட்டிக் கொள்வதில்லை. ஒவ்வொரு பந்திலும் தனது உயர் திறனை வெளிப்படுத்திக் கொள்கிறார். இது ரிச்சட்ஸிடமிருந்த மன நிலை. தற்பொழுது கோக்லியும் அதனைக் கொண்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அடிலெய்டில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தின் 4ஆவது இன்னிங்ஸில் சதம் மற்றும் விரட்டலை என் வாழ்வில் மறக்க முடியாது. ஒரு வீரராக, வர்ணனையாளராக, அணி இயக்குநராக அப்படிப்பட்ட 4ஆவது டெஸ்ட் இன்னிங்ஸைப் பார்த்ததில்லை. அது அசாதாரணமான இன்னிங்ஸ். அன்று அவர் இன்னிங்சை எடுத்துச் சென்றவிதம் அபாரமானது. மற்றவர்களிடமிருந்து விராட் கோக்லியை பிரித்து வைப்பது அவரது தீவிர அணுகுமுறையே. அவர் 4ஆம் நாள் ஆடுகளம் என்றெல்லாம் யோசிக்கவில்லை. ஓட்டங்களை எடுக்கவும் வாய்ப்பிருப்பதாகக் கருதினார். அவர் அப்படித்தான் சிந்திக்கிறார். மொத்தத்தில் நிகழ்காலத்தின் ரிச்சட்ஸ் கோக்லியே– என்றார். (ம)

## சென்னையின் வீரர்களே குஜராத்தின் முதுகெலும்பு

### – ஸ்ரெயின்

சென்னை அணியில் பல ஆண்டுகள் ஒன்றாக விளையாடிய சில வீரர்கள் குஜராத் அணியில் இடம்பிடித்துள்ளனர். தற்போது, அவர்கள் தான் குஜராத் அணியின் முதுகெலும்பாக செயற்பட்டு வருகின்றனர் என குஜராத் அணி வீரர்களில் ஒருவரான டேல் ஸ்ரெயின் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக ஸ்ரெயின் மேலும் தெரிவிக்கையில் – ஏலத்தின்போது, தடைசெய்யப்பட்ட சென்னை அணியில் விளையாடிய ஐந்து வீரர்களை, தங்கள் அணிக்கு சொந்தமாகிய விடயத்தில், குஜராத் அணியின் உரிமையாளர் மற்றும் அணி நிர்வகிகள் மிகவும் திறமையாக செயற்பட்டுள்ளனர். மக்கல்லம், பிராவோ, ஜடேயா, சிமித் மற்றும் அணித்தலைவர் ரெய்னா ஆகியோர் சென்னை அணியில் ஒன்றாக விளையாடியுள்ளார்கள். அவர்களின்



அந்த அனுபவம் மற்றும் நட்புணர்வு எங்கள் அணிக்கு ஒரு பெரிய பலமாக இருக்கிறது. ரெய்னாவின் அணித் தலைமை அற்புதமாக உள்ளது. ரெய்னா அனைத்து விடயத்திலும் மிக எளிமையாக செயற்படுகிறார். ரெய்னா மற்றும் எங்கள் அணியின் பயிற்சியாளர்கள், வீரர்களை அணுகும் முறை மிக எளிமையாக இருக்கும். இவை அனைத்தும் தான் ஐ.பி.எல். தொடரில், குஜராத் திறமையாக செயற்படுவதற்கு உறுதுணையாக இருக்கிறது– என்றார். (ம)

## ஊக்கமருந்துக் கருத்தின் எதிரொலி பச்சோவுக்கு எதிராக நடால் வழக்கு

உலகின் ஐந்தாம் நிலை ரென்னிஸ் வீரரான ஸ்பெயினின் நடால் ஊக்கமருந்து பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டிய பிரான்ஸ் அரசின் முன்னாள் அமைச்சர் ஹோஸ்லின் பச்சோவுக் கெதிராக நடால் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

2012ஆம் ஆண்டு நடால் கிட்டத்தட்ட 7 மாதங்கள் எந்தவொரு தொடரிலும் கலந்துகொள்ளாமல் விலகியிருந்தார். ஊக்கமருந்து பயன்படுத்தியமையாலேயே அவர் இந்தக் காலப்பகுதியில் தொடர்களில் இருந்து விலகியிருந்ததாக பச்சோ குற்றஞ்சாட்டியிருந்தார். இந்தக் கருத்துக்களை மறுத்துள்ள நடால், ஒரு தடகள வீரனாக, தனது கண்ணியத்தையும் தனது விம்பத்தையும் பாதுகாக்க எண்ணியுள்ளதாகவும் – ஆனால், தனது ரென்னிஸ் வாழ்வில் தான் கடைப்பிடித்து வந்த அனைத்து விழுமியங்களையும் பச்சோவின் கருத்து கொச்சப்படுத்தி விட்டதாகவும் குறிப்பிட்டு பச்சோவுக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார். (ம)

## நடுவர்களுடன் வாக்குவாதம்; மன்னிப்புக் கேட்டார் யுனிஸ் கான்

பாகிஸ்தான் அணியின் சிரேஷ்ட வீரரும் முன்னாள் தலைவருமான யுனிஸ்கான், பாகிஸ்தானின் உள்ளூர்த் தொடரான பாகிஸ்தான் கிண்ணத் தொடரில் நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமைக்காக மன்னிப்புக் கேட்டுள்ளார்.

குறித்த தொடரில் கைபெர் பக்துங்வா அணியின் தலைவராகச் செயற்பட்ட யுனிஸ் கான், நடுவர்களின் தீர்ப்புத் தொடர்பாக அதிருப்தி வெளியிட்டு, நடுவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு, பிரதான மத்தியஸ்தரால் விசா ரணைக்கு அழைக்கப்பட்ட போது, அதற்குச் சென்றிருக்க வில்லை. இதன் காரணமாக, ஊதியத்தின் 50 சதவீதம், அவ ருக்கு அபராதமாக விதிக்கப்பட் டது. விசாரணைக்குச் சமுகமளிக்காததோடு, இந்தத் தொடரிலிருந்துவிலகுவதாகவும்யுனிஸ் கான் அறிவித்தார். இந்த நிலையிலேயே, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகாரியார் கானுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டுள்ள யுனிஸ் கான், இடம்பெற்ற சம்பவத்துக்காக மன்னிப்புக் கோரியதுடன், தொடர்ந்துவரும் போட்டிகளில் விளையாடும் தனது ஆர்வத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில்வாவுக்கு முழுமையான சுகம் கிரிக்கெட் சபையிலிருந்து தகவல்

தலையில் பந்து தாக்கி காயமடைந்த இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் கௌசால் சில்வாவுக்குப் பூரண சுகம் ஏற்பட்டுள்ளதாக, இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பல்லேகல மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபொழுது சந்திமல் அடித்த பந்து சில்வாவின் பின்னந்தலையைப்பதம் பார்த்தது. இதனால் அவர் உடனடியாக கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு ஹெலிகொப்டர் மூலம் கொண்டு வரப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு நேற்றுமுன் தினம் விடுவிக்கப்பட்ட கௌசால் சில்வா, இரண்டு நாள்கள் பூரண ஓய்வை எடுத்த பின்னர் மெதுவான பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பிப்பார் எனவும், அடுத்த வாரமளவில் துடுப்பாட்டப் பயிற்சிகளில் ஈடுபடுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# தப்பிப் பிழைத்தது குஜராத் மொறிஸின் பிடியிலிருந்து



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற குஜராத்- டெல்லி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் குஜராத் அணி ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. டுவைன் சிமித், மக்கலம் இணை குஜராத்துக்கு அட்டகாசமான ஆரம்பத்தை வழங்கியது. இருவருமே ஆபத்தானவர்கள். இவர்களில் ஒருவர் நிலைத்தாலேயே வெற்றிக் கொடியை நாட்டிவிடலாம். இவ்வாறிருக்கையில் இருவரும் நிலைத்தால் கேட்க வேண்டுமா?. சிக்சர்கள், பவுண்டரிகள் என அமர்க்களப்படுத்தினார்கள். பவர் பிளே (முதல் ஆறு பந்துப்பரிமாற்றங்கள்) முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 71 ஓட்டங்களை எட்டியது குஜராத். நூறு ஓட்டங்களையும் கடந்தாயிற்று இலக்குச் சரிவு ஏற்பட்டபாடில்லை. அணியின் ஓட்ட எண்ணிக்கை 112ஆக இருந்த போது 53 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் சிமித். திடீர் எழுச்சி கண்டது டெல்லியின் பந்துவீச்சு. ஒரே பந்துப்பரிமாற்றத்தில் மக்கலம், ரெய்னா இருவரையும் இருக்கைக்குத் திருப்பினார் மொ றிஸ். மத்திய வீரர்கள் மத்தியில் தனது பந்துப்பரிமாற்றங்களை ஆரம்பித்த தாகிரின் சுழல் நன்கு எடுபட்டது. கார்திக், இசான் கிசான் இருவரும் முறையே 19 ஓட்டங்களுடனும், 2 ஓட்டங்களுடனும் தாகிரிடம் வீழ்ந்தனர். பின்வரிசையில் சற்று அதிரடி காட்டினார் பல்க்நெர். அவர் 13 பந்துகளை எதிர்கொண்டு 22 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் குஜராத் 172-6. குஜராத்தின் ஆரம்பத்துடன் ஒப்பிடுகையில் முடிவு சிறிது வீழ்ச்சியே.

பந்துவீச்சில் டெல்லியின் சார்பாக தாகிர் 3 இலக்குகளையும், மொறிஸ் 2 இலக்குகளையும், டுமினி ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய டெல்லிக்கு ஆரம்ப வீரர்களாக சாம்சன் மற்றும் குயின்டன் டி ஹொக். குல்கர்னியின் வேகத்தில் டெல்லியின் ஆரம்பம் ஒன்றுமில்லாமல் போனது. ஹொக், சாம்சன், நாயர் மூவரும் முறையே 5, 1, 9 ஓட்டங்களுடன் இருக்கைக்குத் திரும்பினர். பன்ட், டுமினி இருவரும் இணைந்து சில பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்தனர். பத்துப்பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் டெல்லி 52-3. பன்ட் ஆட்டமிழந்ததும் களமிறங்கினார் மொறிஸ். இரு தென்னாபிரிக்கர்களும் இணைந்து குஜராத்தின் பக்கம் இருந்த ஆட்டத்தை அப்படியே புரட்டிப் போட்டனர். சிக்சர் மழை பொழிந்தார் மொறிஸ். இலக்குச் சரிவைக் காத்து நின்றார் டுமினி. இணைப்பாட்டமும் நிலைபெற இறுதி 5 பந்துப்பரிமாற்றங்களில் 60 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. 17 பந்துகளில் 7 சிக்சர்களுடன் அரைச்சதம் கடந்தார் மொறிஸ். டுமினி ஆட்டமிழந்தாலும் மொறிஸின் அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டேயிருந்தது. இறதிப் பந்துப்பரிமாற்றத்தில் 14 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. பிராவோவிடம் பந்து சென்றது. டெல்லியால் 12 ஓட்டங்களையே எடுக்க முடிய ஓர் ஓட்டத்தால் வென்றது குஜராத். மொறிஸ் 82 ஓட்டங்களுடன் (32 பந்துகளில்) ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் குல்கர்னி 3 இலக்குகளையும், பிராவோ, பல்க்நெர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

# பாகிஸ்தான் குடிமகனாக சமி?

மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் டேரன் சமிக்கு பாகிஸ்தானின் கௌரவக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மேற்கிந்திய தீவுகள் அணிக்காக 2 முறை ரி-20 உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்த டேரன் சமி, பாகிஸ்தான் உள்ளூர் அணியான பெசாவர் சால்மி அணிக்காக விளையாடி வருகிறார். இந்த நிலையில் பாகிஸ்தான் ரசிகர்களிடையே மிகவும் பிரபலமான வீரராக உள்ள சமிக்கு கௌரவக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று பெசாவர் அணியின் உரிமையாளர் ஜாவேத் அப்ரிடி டுவிட்டர் மூலம் கோரிக்கை விடுத்தார். இதற்குப் பதில் அளித்த பாகிஸ்தான் கைபர் பதுன்க்வா மாகாண முதலமைச்சர் பெர் வெய்ஸ் கட்டாக், டேரன் சமிக்கு கௌரவ குடியுரிமை வழங்குவதில் பெருமை கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார். (ம)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். | K.K.S. றோட், இணுவில்.
வணிகக் கல்வி
S. பிரதீபன்
(m.com, HNDA, PGDE)
A/L 2018
புதிய பிரிவு
ஆரம்பம்: 30.04.2016
இப்பிரிவிற்கு ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
Note: A/L 2016 துரித மீட்டலும் வினாவிடை வகுப்பும்
திங், புதன், வெள் 6.00am
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
(C/20903)(10.17)

ஓர் அரிய வாய்ப்பு
எமது நிறுவனத்துக்கு நிர்வாக ரீதியாக வேலையாள்கள் தேவை.
* Distributors
* A.S.M
* Manager
* Administration
தகைமை: O/L, A/L
3 மாதம் பயிற்சியின் பின் வெளிநாடு (லண்டன், பிரான்ஸ், ஜேர்மன், இந்தியா) செல்வதற்கான வாய்ப்பு.
EPF, ETF, Medical தங்குமிட வசதியுண்டு.
Call: 076 8689 821 (Manager) 077 077 1377 (Manager)
(J 763)(10.17)

# காணவில்லை



## சிவஞானம் சிவலோகநாதன்

புகைப்படத்தில் உள்ளவர் கடந்த (22.04.2016) வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் இருந்து காணாமல் போயுள்ளார்.

பெயர்: சிவஞானம் சிவலோகநாதன் (சிவம்)
"ஆண்டவர் போட்டோ"
முகவரி:- "சீனட்டி" வல்வெட்டி
வல்வெட்டித்துறை

இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் 077 652 8620 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது சி.சிவபாக்கிய நாதன் பத்தமேனி அச்சுவேலி என்ற முகவரியுடனோ தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# கிண்ணம் வென்றது கோப்பாய் செயலகம் யாழ். பிரதேச செயலகங்களின் கால்பந்தில்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கோப்பாய் பிரதேச செயலகம் சம்பியனாகியுள்ளது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பித்த சில நிமிடங்களில் யாழ். பிரதேச செயலகம் சார்பாக யூட் முதலாவது கோலைப் பதிவு செய்தார். அடுத்த சில நிமிடங்களிலேயே பதிலடி கொடுத்தார் திலீபன். யாழின் இரண்டாவது கோலும் யூட்டினால் பதிவாக முதல் பாதியின் முடிவில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்தியது யாழ். பிரதேச செயலக அணி. வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறுவதும் அது தவறவிடப்படுவதுமாக நிறைவுக்கு வந்தது இரண்டாவது பாதி. பழிதீர்க்க வேண்டிய கட்டாயத்தில் அலைந்து திரிந்த கோப்பாயை தேடி வந்தது வாய்ப்பொன்று. கஜகோபன் அதை கச்சிதமாகப் பயன்படுத்த தற்பொழுது நிலைமை 2:2. வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது ஆட்டம். இதனால் சமநிலைத் தவிர்ப்பில் கிண்ணம் தீர்மானமாக வேண்டிய நிலைமை. இதில் கோப்பாய் பிரதேச செயலக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.